இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 80 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 02, செவ்வாய்க்கிழமை 14.02.2017

## சைட்டம் மூடப்படாவிட்டால் திங்களன்று பணிப்புறக்கணிப்பு

*மருத்துவர்கள் சங்கம் அறிவிப்பு*

கொழும்பு, பெப். 14
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை (சைட்டம்) மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை நாடு முழுவதும் பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஐக்கிய இலங்கை மருத்துவர்கள் சங்கம் அறிவித்தது.
இந்தப் பணிப் புறக்கணிப்புக்கு ஆதரவாக சுகாதார அமைச்சைச் சேர்ந்த 15 தொழிற்சங்கங்கள் களமிறங்கவுள்ளதாக மருத்துவர் சங்கத்தின் தலைமைச் செயலாளர் மருத்துவர் ஜயந்த பண்டார தெரிவித்தார்.
கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட நாட்டிலுள்ள சகல அரச வைத்தியசாலைகளிலும் பணிபுரியும் மருத்துவர்கள் நாளை புதன்கிழமை கறுப்புப் பட்டி அணிந்து கடமையாற்றுவார்கள் எனவும், அனைத்து வைத்திய சாலைகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (வ-4)

## மக்கள் போராட்டம் வடிவம் மாறுகிறது

*புதுக்குடியிருப்பு மக்கள் இன்று முதல் சுழற்சி முறையில் உணவு ஒறுப்பு*



முல்லைத்தீவு, பெப். 14
காணி விடுவிப்புக்காக பிரதேச செயலகம் முன்பாக 11 நாள்களாக அமைதிப்போராட்டம் நடத்திய மக்கள், தங்களுக்கான தீர்வு கிடைக்கப் >> 24

## 14ஆவது நாள்

கொட்டும் மழைக்கு மத்தியிலும்

## பிலக்குடியிருப்பு மக்களுக்கு முஸ்லிம் மக்களும் ஆதரவு



முல்லைத்தீவு, பெப். 14
பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டம் நேற்று 14 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. நேற்று மாலை அங்கு மழை கொட்டியது. இதனால் >> 24

## யாழ். சிறையில் இந்திய மீனவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 14
யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள இந்திய மீனவர்கள் 31 பேரும் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி உணவு ஒறுப்புப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர். இந்தியாவின் தமிழகம், தங்கச்சிமடம், இராமேஸ்வரம், கோட்டைப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த 31 மீனவர் >> 24

### முச்சந்தி முரளி



மக்களின்ர கருத்தறிஞ்சு தயாரிக்கும் அறிக்கைகள் குப்பையிலதானே போடுவினம்...

## கேப்பாபிலவு மக்களின்

# காணிகளை விடுவிக்கக் கோரி மைத்திரிக்கு அவசர கடிதம்

வடக்கு மாகாண சபையால் நேற்று அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 14
கேப்பாபிலவு- பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரி வடக்கு மாகாண சபையால் அவசர கடிதம் ஒன்று அரச தலைவருக்கும், கொழும்பு அரசின் தலைமை அமைச்சருக்கும் எதிர்க்கட்சித்தலைவருக்கும் அனுப்பப்பட்டது.
முல்லைத்தீவு கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு மக்கள் தமது சொந்தக் காணிகளில் அமைந்துள்ள வான்படையின் முகாமை அகற்றிக் காணிகளை >> 24

## கூட்டு அரசினால் மக்களுக்குத்தான் வாழ்க்கைச் சுமை

மகிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 14
கூட்டு அரசு ஆட்சிக்கு வந்தது முதல், நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமை >> 24

## வாக்குக் கேட்க மைத்திரி காணி பிடிக்க ராணுவமா?

புதுக்குடியிருப்பு மக்கள் கொதிப்பு

முல்லைத்தீவு, பெப். 14
வாக்குக் கேட்க மைத்திரி, காணி பிடிக்க இராணுவமா? காணிகளை விடுவிக்கும் வரையில் போராட்டம் தொடரும். நிர்வாகத்தை முடக்கும் வகையில் எம்மைப் போராடும் நிலைக்குத் தள்ள வேண்டாம். இவ்வாறு >> 24

புதிய அரசமைப்பு உருவாக்கம்

## மக்கள் கருத்து அறிய மீளவும் அமர்வுகள்

கொழும்பு, பெப். 14
புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பதற்கு பொதுமக்களுக்கு மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்வரை மக்க >> 24

## வடக்கில் 4ஆவது நபருக்கும் பன்றிக் காய்ச்சல் தொற்று

3 பேரின் குருதி மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 14
வடக்கில் பன்றிக் காய்ச்சல் (எச்1என்1 வைரஸ்) தொற்றினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்தது. மேலும் 3 பேருக்கு இந்தத் தொற்று ஏற்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவர்களது குருதி மாதிரிகள் பரிசோதனைக்கு >> 22

## சுமந்திரன் கொலைச் சதிக்கு ஆஸியிலிருந்து பணம் வந்தது

கிளிநொச்சி நீதிமன்றுக்கு அறிவித்தனர் ரி.ஐ.டியினர்

யாழ்ப்பாணம், பெப். 14
நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீதான கொலை முயற்சி உள்ளிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து நெல்லியடியில் உள்ள பணப் பரிமாற்றநிறுவனம் ஒன்றுக்கு ஊடாகப் பணம் அனுப்பப்பட்டுள்ளது.
இவ்வாறு கிளிநொச்சி நீதிவான் மன்றுக்கு நேற்று அறிவித்தனர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர்.
சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டதோடு ஒருவரை வெளியே அழைத்துச் >> 24



## ஆஸிக்கு பயணமானார் ரணில்

(மெல்பேர்னில் இருந்து இ.அ.தேவறாஜன்)
ஆஸ்திரேலிய அரசின் அழைப்பின் பேரில் அந்த நாட்டுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை நேற்று ஆரம்பித்தார் தலைமை >> 22

## எல்லை மீறும் குற்றச்செயல்களை உடனே தடுக்கவேண்டும் பொலிஸ்

*வடக்கு அவைத் தலைவர் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், பெப். 14
யாழ்ப்பாண மாவட்டத்தில் சமீப காலமாக மீண்டும் உருவெடுத்துள்ள வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள் போன்றவற்றை >> 06

# பேராசிரியர் ஹூலுக்கு எதிரான டக்ளஸின் வழக்குத் தோல்வி

யாழ்ப்பாணம், பெப். 14
பேராசிரியர் சாமுவேல் ரட்ணஜீவன் ஹூலுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தாக்கல் செய்த வழக்கில் அவர் தோல்வியடைந்தார்.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் இந்த நீதிமன்றத்திற்கு இல்லை என்று தெரிவித்து வழக்கைத் தள்ளுபடி செய்தார் நீதிவான் ஏ.எம்.எம். றியால்.
ஈபிடிபியுடன் கூட்டுச் சேர்ந்ததால் அரச தலைவர் (மகிந்த ராஜபக்ச) எதிர்நோக்கும் ஆபத்துக்கள் என்ற தலைப்பில் பேராசிரியர் ஹூல் எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றுக்கு எதிராக இந்த வழக்கு ஈபிடிபியினால் தாக்கல் செய்யப்பட்டது. இதனால் பேராசிரியர் நாட்டைவிட்டு வெளியேறவேண்டி ஏற்பட்டது.
2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டாலும் 2016ஆம் ஆண்டு ஜூன் மாதமே பேராசிரியரின் சார்பில் எழுத்து மூலமான பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் இந்த வழக்கை விசாரிப்பதற்கான அதிகாரம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு இல்லை என்று வாதிடப்பட்டிருந்தது.
அந்த ஆட்சேபனையைக் கவனத்தில் எடுத்த மன்று, இந்தக் கட்டுரையை எழுதிய நபரோ, வெளியிட்ட ஊடக நிறுவனமோ, அல்லது அதனால் ஏற்பட்ட பாதிப்போ தனது நீதி நியாயாதிக்க எல்லைக்குள் அடங்காததால் சட்டப்படி இதனை விசாரிப்பதற்கு முடியாது எனக்கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தது.
கொலை, அரச துரோகம் தவிர்ந்த ஏனைய குற்றங்களுக்கு அது நிகழ்ந்து 20 வருடங்களுக்குள் வழக்கிடப்பட முடியும் என்பதால் இந்த வழக்கை விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்ட மன்றில் அதனைத் தாக்கல் செய்யலாம் என்றும் நீதிவான் தெரிவித்தார். அத்தோடு வழக்கின் சந்தேகநபரான ஹூலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்தார். (உ-101)

# தமிழுக்கு இடம் கிடைக்காததால் நிகழ்வைப் புறக்கணித்தார் ஊவா மாகாண உறுப்பினர் ருத்திரதீபன்

கொழும்பு, பெப். 14
தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதால் பிரதேச சபை திறப்பு விழாவில் பங்கேற்பதற்கு மறுத்துவிட்டார் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் வேலாயுதம் ருத்திரதீபன்.
தமிழ் மொழியைப் புறக்கணித்தால் எவ்வளவு முக்கிய நிகழ்வென்றாலும் பங்கேற்கமாட்டேன் என்று ஊவா மாகாண சபை உறுப்பினரும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாகச் செயலாளருமான ருத்திரதீபன் தெரிவித்தார்.
லுணுகலை பிரதேச சபைக் கட்டடம் மற் றும் லுணுகலை பிரதேச சபை பல்நோக்கு மண்டபக் கட்டடம் போன்றவை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. இதில் தமிழ் மொழியில் அழைப்பிதழ்கள் வழங்கப் படாமை காரணமாக இந்த நிகழ்வை அவர் புறக்கணித்தார்.
இது பற்றி ருத்திரதீபன் மேலும் தெரிவித்ததாவது:
65 சதவீதம் தமிழ் மக்கள் செறிந்து வாழும் லுணுகலை பிரதேச அரச நிகழ்வுகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை வருந்தத்தக்கது. கடந்த மாகாண சபை உரையில் தமிழ் மொழிக்கும் ஊவா மாகாணத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், தமிழ் மொழி அச்சுப் பிழைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தேன். அத்துடன், தமிழ் மொழி சகல பதாகைகளிலும் இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தி சகல மாகாண சபை உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றேன். அதற்காகத் தனியாக குழுவொன்றையும் அமைப்பதற்கு சபை அனுமதி வழங்கியது. லுணுகலை பிரதேச அபிவிருத்திக் குழுவின் இணைப்பாளராகவும், மக்கள் பிரதிநிதியாகவும் இருக்கும் எனக்கு இந்தப் பிரதேசத்தின் பிரதேச சபை மற்றும் பலநோக்கு மண்டபக் கட்டடத் திறப்பு விழாவுக்கு அழைப்பு வழங்கப்படவில்லை. மேற்படி திறப்பு விழாவுக்கான அழைப்பிதழ் சகோதர மொழியில் (சிங்கள மொழியில்) மாத்திரமே அச்சிடப்பட்டுள்ளது. முழு நிகழ்வும் சகோதர மொழியிலேயே தொகுத் தளிக்கப்பட்டுள்ளது. இதனை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. நான் இன ரீதியாக சிக்கல்களை உருவாக்குவபன் அல்லன். ஆனால், ஒருமொழிக்கான அங்கீகாரத்தை முறையாக வழங்காதவிடத்து அங்குள்ள எனது மக்களின் சார்பாக தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய தார்மீகக் கடமை எனக்குள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன் – என்றார். (வ)

# தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக மாறுமா?

## இப்படிப் பதிலளிக்கிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், பெப். 14
தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சியாக மாற்றவேண்டிய தேவை எதிர்காலத்தில் இருப்பின், அது தொடர்பில் பேரவையின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும்.
இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.
தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்
தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை இல்லை என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். தமிழ் மக்கள் பேரவை அதனை நிறைவேற்றுமா? என்று செய்தியளாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த கஜேந்திரகுமார்:
தமிழ் மக்கள் பேரவைக்குள்ளே சில அரசியல் கட்சிகள் இணைந்துள்ளன. ஆகவே அந்த அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். பொதுவாக தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்படும் போது அரசியல் கட்சியல்ல என்ற நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டது. மக்களுக்கு உரிய பிரதிநிதிகள் இல்லை.மக்களுக்கு பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர் என தோன்றும் பட்சத்தில் தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சியாக மாற்றுவது தொடர்பில் நிச்சயமாக பேரவையின் பிரதிநிதிகளுடன் ஆலோசிக்கப்படும்.
தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக வேண்டும் என்று உருவாக்கப்படவில்லை. பேரவை தற்பொழுது அரசியல் கட்சியாகவும் இல்லை. அதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் மக்கள் எங்களுக்கு ஏற்ற தலைமை எதுவும் இல்லை. குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத் தவரையில் உரிய தலைமைகள் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளலாம். அந்தத் தேவையை பேரவையாவது நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணினால் நிச்சயமாக அதனைப் பரிசீலிக்கலாம் – என்றார். (வ-8)

# போராட்டத்தில் பங்கேற்போரை ஒளிப்படம் எடுக்கும் படையினர்





முல்லைத்தீவு, பெப். 14
கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு ஆதரவு வழங்கச் செல்பவர்களை வான் படையினர் தமது அலைபேசி களில் ஒளிப்படங்கள் மற்றும் காணொலிப் பதிவுகளை எடுக்கின்றனர். அத்துடன் வருபவர்களின் வாகன இலக்கங்களையும் அவர்கள் குறிப்பெடுக்கின்றனர்.
கேப்பாபிலவு மக்கள் தமது காணி களை விடுவிக்குமாறு கோரி கடந்த 14 நாள் களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தப் பகுதி மக்களின் காணியில் அமைந்துள்ள வான் படைத்தளத்தை விட்டு படையினர் வெளியேற வேண்டும் எனக் கோரி படைத்தளம் முன்பாக அவர்கள் தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றனர்.
மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தினமும் சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் , அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பல ரும் போராட்ட களத்துக்கு வருகை தருகின்றனர். அவர்களை வான் படையினர் ஒளிப்படம் மற்றும் காணொலிப் பதிவு எடுக்கின்றனர்.
வான் படை முகாம் முகப்பு பகுதியில் இருக்கும் காவலரணில் இருந்தே போராட்டக்காரர்களைப் படையினர் ஒளிப்படங்கள் எடுக்கின்றனர். (வ-37)



பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி வெளிமாவட்ட ஆசிரியர்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு முன்பாக நேற்றுக் காலை முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று இரவும் அவர்களது போராட்டம் தொடர்ந்தது. (வ-4,8)

# எழுக தமிழ் ஊர்வலத்துக்கு கூடுதல் பங்களிப்பை முன்னணியே வழங்கியது

## இப்படிச் சொல்கிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், பெப். 14
மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற எழுக தமிழ் நிகழ்வுக்கு தனிப்பட்ட ரீதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியே கூடுதலான பங்களிப்பை வழங்கியது என்று அந்தக் கட்சியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற எழுக தமிழ் நிகழ்வின் ஏற்பாட்டுக்காக எங்களது கட்சியின் செயலாளர் தலைமையிலான குழுவினரே நேரடியாக மக்களிடம் சென்று எழுக தமிழ் தொடர்பான துண்டறிக்கைகளை வழங்கி மக்களைத் திரட்டினார்கள்.
எழுக தமிழ் நிகழ்வு தினத்துக்கு இரண்டு மாதத்துக்கு முன்பே எமது கட்சியின் குழுவினர் அங்கு சென்றிருந்தனர்.அங்கு சென்ற கட்சிக் குழுவினர் கிராமம் கிராமமாக நடந்து சென்று மக்களிடம் எழுகதமிழ் நிகழ்வின் அவசியத்தை வலியுறுத்தினார்கள்.மக்களிடம் நேரடியாகச் சென்ற போது நாங்கள் கிழக்கு மக்கள் நீங்கள் வடக்கு மக்கள் என பிரிவினைகள் எதுவும் இல்லாமல் சகஜமாக எங்கள் கட்சிப் பிரதிநிதிகளுடன் பழகினார்கள்.
இது வடக்கு கிழக்கு மக்களையும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களையும் பிரிக்க வேண்டும் என எண்ணுபவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் படியாகவே இந்த எழுகதமிழ் நிகழ்வு அமைந்தது – என்றார். (வ-8)

# ஐ.நா. கால நீடிப்பை வழங்கினால் அதற்குப் பொறுப்புச் சம்பந்தனே

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் பெப் 14
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்குப் பொறுப்புக் கூறுவதற்கான 2 வருட கால அவகாசம் வழங்கப்பட்டால், தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த ராஜபக்சவைக் காப்பாற்ற அரசு முனைகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுக்கு 2 வருட கால அவகாசத்தைக் கொடுப்பதற்கான வகையில் கருத்துக்களை வெளியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. 2 வருட கால அவகாசம் இலங்கை அரசுக்கு வழங்கினால், தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகத்தைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
உரிய நேரத்தில் உரிய நிலைப்பாட்டை எடுக்காவிடின், ஆட்சி மாறிய பின்னர் தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறல் நடுத்தெருவில் விடப்படுமென்ற கருத்தைச் சொல்லிவந்தோம். 2015ஆம் ஆண்டு உள்ளக விசாரணைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பன்னாட்டுச் சமூகத்திடம் இணங்கிய படியால்தான் உள்ளக விசாரணையில் பன்னாட்டுச் சமூகத்தை உள்ளடக்குவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.
இலங்கை அரசு எப்படியான அரசு என்பதை தமிழன் என்ற வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் அந்தக் கட்சியின் பேச்சாளருக்கும் தெரிந்திருக்க வேண்டும். தமிழ் மக்களை அழித்துக் கொண்டிருக்கும் ஒரு அரசு எப்படி நடந்துகொள்ளும் என்று அனுபவ ரீதியாக அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.
முதற்கட்டமாக தமிழ் மக்கள் உறுதியான முடிவில் இருக்க வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் சபையில் எந்தவொரு கால அவகாசத்தையும் வழங்க முடியாது. தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறல் என்ற விடயத்தில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் இருக்க, பொறுப்புக்கூறலை நிறுத்த களத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், நடைமுறையில் உள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக் கேட்பது முட்டாள்தனம் – என்றார். (வ-8)





# பாடசாலை குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை

## சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை எமக்குத் தெரியப்படுத்தலாம். உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வினாசியோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, புனித அந்தோனியார் றோ.க.த.க.பாடசாலை, பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம், புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் அ.த.க.பாடசாலை, கல்லாறு அ.த.க.பாடசாலை, முரசுமோட்டை அமெரிக்கன் மிசன் பாலர் பாடசாலை என்பவற்றைப் பார்வையிட்டார்.

அவற்றில் காணப்படும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார். க.யோகாநந்தனின் நிதிப்பங்களிப்புடன் 80 பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள், பாடசாலை தளபாடங்கள், பாண்ட் வாத்தியக் கருவி என்பவற்றை வழங்கினார்.

“மழை காலங்களில் கல்வி கற்க முடியாது. பாடசாலைக் கூரை சேதமடைந்துள்ளது. மழை நீர் உட்புகுவதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது. மிக அவசரமாக அடிப்படைத் தேவையான கூரை திருத்தப்பட வேண்டும். இதனோடு நிரந்தர மாடிக்கட்டடம் அமைத்துத் தர வேண்டும்” - என்று புனித அந்தோனியார் றோ.க.த.க.பாடசாலையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

“பாடசாலையில் வறட்சிக் காலங்களில் குடி தண்ணீருக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. குடி தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.”- என்று கல்லாறு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முரசுமோட்டை அமெரிக்கன் மிசன் பாலர் பாடசாலை சிறுவர் மகிழ்வுத் திடல் சீராக்கப்பட வேண்டும் என்றும், புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் அ.த.க.பாடசாலையில் சிறுவர்களின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான இசைக்கருவிகள் வழங்கப்படவேண்டும் என்றும் அதிபர், ஆசிரியர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

“ விரைவில் உரிய தரப்புகளுடன் தொடர்பு கொண்டு குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான சமூகப் பிரச்சினைகள் காணப்படின் எம்மு டன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தலாம்”- என்று நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (ந-10)

# நுளம்பு உருவாகும் ஏதுநிலை; அந்த இடத்திலேயே தண்டம்

தென்மராட்சியில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுவான சூழலுடன் உள்ள குடியிருப்புகளின் உரிமையாளர்களுக்கு உடனடியாகத் தண்டம் விதிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தென்மராட்சியில் நேற்றுக் காலை வரை 113 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். சுகாதாரத்திணைக்களத்தினர், பிரதேச செயலக அலுவலர்கள், பொலிஸார் இணைந்து அடுத்து வரும் இரு மாதங்களில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நாளாந்தம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருப்போர், நுளம்புக் குடம்பிகள் காணப்படும் குடியிருப்புகளின் உரிமையாளர்களுக்கு அந்த இடத்திலேயே தண்டம் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வரணி இடைக்குறிச்சி மற்றும் மட்டுவில் தெற்குப் பகுதியில் 250 இடங்களில் தரிசிப்பு மேற்கொண்டபோது 60 பேருக்கு காணிகளைத் துப்பரவாக்குவதற்கு 15 நாள்கள் அவகாசத்துடன் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. மதில்கள் மேல் வைத்துள்ள பூச்சாடிகள், வெட்டப்பட்ட வாழை மர அடிக்குற்றிகள், கால்நடைகளுக்கு வைக்கப்பட்டிருந்த நீர்த் தொட்டிகள் போன்றவற்றில் டெங்கு நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இருவருக்கு கடந்த வாரம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்று தண்டம் விதித்தது. (ந-9)

# மக்களின் காணிகளை இராணுவம் உடன் விடுவிக்கவேண்டும்

## செட்டிகுளம் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், பெப்.14

செட்டிகுளத்தில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் குடியிருப்புக் காணிகளையும், வயல் காணிகளையும் உடன் விடுவிக்க வேண்டும். அது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

வவுனியா செட்டிகுளம் பிரேதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.



ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தில் அமைச்சார் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது.

“செட்டிகுளம் பகுதியில் பல ஏக்கர் காணிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. மக்களுடைய வயல்காணிகளையும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். விவசாயம் செய்ய முடியாதுள்ளது. விவசாயத்தை நம்பி உள்ள மக்கள் விவசாயத்தை மேற்கொள்ள முடியாது வேறு தொழில்களில் ஈடுபட வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சிளைக்கு நிரந்தர தீர்வை இணைத்தலைவர்கள் பெற்றுத் தரவேண்டும்” - என்று கூட்டத்தில் பங்கேற்ற பொது மக்கள் சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரினர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இணைத்தலைவர்கள் ஆராய்ந்தனர். இராணுவத்தினர் மக்களின் குடியிருப்புக் காணிகள், வயல் காணிகளை விடுவித்து உடன் வெளியேற வேண்டும் என்று ஏகமனதாகத்தீர்மானம் நிறைவேற்றினர். இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களுடைய காணிகளை அடையாளப்படுத்தி, அதற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால் உரிய அதிகாரிகளுடன் கதைத்து தீர்வைப் பெறமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கூட்டத்தில் செட்டிகுளப்பிரதேசத்தில் பழங்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பழங்களை பாதுகாக்கும் வகையிலும், அவற்றை பழரசமாக்கி தயாரிப்பு முயற்சியில் ஈடுபடுத்தும் வகையிலும் பிரதேசத்தில் பழத்தொழிற்சாலை ஒன்றின் அவசியம் தொடர்பாகச் சுட்டிக்காட்டப் பட்டது.

“கடந்த அரசில் அமைக்கப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. அதை மீண்டும் இயங்குவதற்கு எமது அமைச்சு நிதி உதவி வழங்கும். இந்தத் தொழிற்சாலை கூட்டுறவு சம்மேளனத்தின் நிர்வாகத்தின கீழ் இருக்கின்றது. செட்டிகுளப் பிரதேசத்திலுள்ள பல்வேறு வளங்களை இனங்கண்டு அதிகாரிகளும், அமைப்புக்களும் இணைந்து முறையான திட்ட மொன்றை எமக்கு வழங்கினால் பொருத்தமான சிறு கைத்தொழில் திட்டங்களை மேற்கொள்ள எனது அமைச்சு பல வழிகளிலும் உதவும். ஒருமாதகாலத்துக்குள் திட்டங்களைத் தயாரித்து வழங்கினால் அதனை ஆரம்பிப்பதற்கு வசதியாக இருக்கும்”- என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ளும்போது மாகாண அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள சில நிறுவனங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் பிரச்சினைகள் எழுந்தன. அதனை நிவர்த்தி செய்து திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அமைச்சரிடம் சில அதிகாரிகள் கோரினர். (ந-21,56)

# கூட்டத்துக்கு வராதோரிடம் விளக்கம்

மன்னார், பெப்.14

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளாத அதிகாரிகளிடம் எழுத்து மூலம் விளக்கம் கோருமாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் பணித்தார்.

செட்டிகுளப்பிரதேச ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. உதவிப் பிரதேச செயலாளர் முகுந்தனுக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார். அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தவறாது பங்குபற்றும் போது அதிகாரிகள் அசிரத்தைக் காட்டுவது கண்டனத்துக்குரியது என்று அமைச்சர் தெரிவித்தார்.

எதிர் வரும் காலங்களில் கிராம அமைப்புக்களின் பிரதி நிதிகளுக்கும் தவறாது அழைப்புக்களை வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார் என அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ந-56)

# 81 கிலோ கஞ்சாவுடன் கைதான இருவருக்கு ரூ. 150,000 தண்டம்

யாழ்ப்பாணம்.பெப்.14

81 கிலோ 485 கிராம் கஞ்சா வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்கு ஒன்றரை இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் 81 கிலோ 485 கிராம் கஞ்சாவை வைத்திருந்தார்கள், கஞ்சா விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் உதயச்சந்திரன் ஞானசீலன், சிவகுமார் கார்த்திக் ஆகிய இருவரும் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மல்லாகம் நீதிவான் மன்றில் நடைபெற்றது. 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதியிலிருந்து வழக்கு சட்டமா அதிபரால் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் தமது குற்றத்தை மறுத்து வந்தனர். முதலாவது குற்றவாளியான உதயச்சந்திரன் ஞானசீலன் ஒரு வருடம் 9 மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். இரண்டாவது சந்தேகநபரான கார்த்திக் 4 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் யாழ் மேல் நீதிமன்றத்தால் பிணை வழங்கப் பட்டது. இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ்ப்பாணம் மேல் மன்றின் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் கொண்டுவரப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணி சிறிகாந்தா முன்னிலையானார். சந்தேகநபர்கள் இருவரும் தமது குற்றத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். முதலாவது சந்தேகநபரான உதயச்சந்திரன் ஞானசீலன் ஒரு வருடம் 9 மாதங்காக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரின் குடும்பம் இவரின் வருமானத்தையே நம்பியுள்ளது. இரண்டாவது குற்றவாளியான சிவகுமார் கார்த்திக் 4 மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டார் எனினும் குற்றத்துடன் இவர் நேரடித் தொடர்பு எதுவும் வைக்கவில்லை என்று அவர் நீதிமன்றில் தெரிவித்தார்.

குறித்த நபர்கள் இருவரையும் குற்றவாளி என தீர்மானித்த நீதிமன்று முதலாவது நபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்ததுடன் கட்டத்தவறும் பட்சத்தில் ஒரு வருட காலம் சிறைத்தண்டனை விதித்தது. இரண்டாம் நபருக்கு 50 ஆயிரம் ருபா தண்டம் விதித்ததுடன் தவறும் பட்சத்தில் 6 மாத கால சிறைத்தண்டனை விதித்தது. (ந-ரி)

# வடக்குக்கு நாளை வருகிறது ஐரோ. ஒன்றியத் தூதுக்குழு

யாழ்ப்பாணம், பெப். 14

ஐரோப்பிய ஒன்றியத்தால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் பிரதிநிதி டுங் லாய் மார்க், நாளை வடக்குக்கு வருகை தருகிறார். அவர் வடக்கு முதலமைச்சரையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் உனா மெக்கொலேயும் அவருடன் வருகை தருவார் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழுவினர் நாளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைச் சந்திக்கவுள்ளனர். அதன் பின்னர் வவுனியா மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சிக்கான ஐரோப்பிய ஆதரவின் அங்கமாக ஐக்கிய நாடுகள் அமைப்புக்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களை அவர்கள் பார்வையிடுவர்.

தொடர்ந்து கனகராயன்குளம் பொலிஸ் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவுக்குச் செல்லவுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலைவாய்ப்பு சேவை நிலையத்தை மேற்பார்வை செய்தல் உள்ளிட்ட பல நிகழ்வுகளில் தூதுக் குழுவினர் பங்கேற்பர்- என்றுள்ளது. (வ-4)

## வீரகத்தி விநாயகருக்கு சங்கடகர சதுர்த்தி இன்று

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம் வண். வடகிழக்கு கலட்டி சிறி வீரகத்தி விநாயகர் ஆலய சங்கடகர சதுர்த்தி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகளுடன் நடைபெறும் என்று சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்தார். (வ-10)

## தென்மராட்சி கல்வி வலய அதிபர்களுக்கு

தென்மராட்சி, பெப். 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜீ.ஐ.ஸற் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான கூட்டம் நாளை மு.ப.11 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நிறுவனப் பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாடவுள்ளதால் வலயத்தின் வகை 1 ஏபி வகை 1 சீ வகை 2 ஆகிய பாடசாலைகளின் அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் கேட்டுள்ளார்.

இதேவேளை, நாளை பி.ப.1.30 மணிக்கு பாடசாலைகளின் அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (வ 9)

## அமெ. தூதரகத்தின் இசை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், பெப். 14

அமெரிக்கத் தூதரகம் வழங்கும் இசை நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் இரவு 7.30 மணி வரை காங்கேசன்துறை சாலையில் அமைந்துள்ள திவ்யா மஹாலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையமானது அமெரிக்க தூதரகத்துடன் இணைந்து அமெரிக்க தகவல் கூடத்தினை நடத்தி வருகின்றது. தகவல் மையத்தின் ஏற்பாட்டிலேயே இந்த நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இலவச அனுமதியுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தின் 'சாரங்கா' இசைக் குழுவினரும் இணைந்து சிறப்பு இசை விருந்தை வழங்குவர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-10)

## தாய்மொழி நாள் விழா

யாழ்ப்பாணம், பெப். 14

உலகத் தாய்மொழிநாள் விழா எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.45 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபை பண்பாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இலங்கைக் குமரித் தமிழ்ப் பணி மன்றமும், யாழ். இந்தியத்துணைத் தூதரகமும் இணைந்து நடத்தும் இந்த விழாவில் கிறிஸ்தவர்களின் தமிழ்க் கொடை நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

இலங்கை குமரித்தமிழ்ப் பணி மன்ற நிறுவுநர் வை.குமரிவேந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப் பாண இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜனும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குரு குலராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-10)

# அனுமதியின்றி மரப்பலகைகளை டிப்பரில் ஏற்றிச் சென்றவர் கைது

வடமராட்சி, பெப்.14

அனுமதி இன்றி ரிப்பர் ரக வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட மரப் பலகைகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. அதனை ஏற்றிக்கொண்டு பயணித்த டிப்பர் சாரதியும் கைது செய்யப்பட்டார். நவிண்டில் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நோக்கிக் கொண்டு செல்லப்பட்ட பலகைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டன. பலகைகள், வாகனம் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டன. வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு ஆள்பிணையில் பொலிஸாரினால் விடுவிக்கப்பட்டார்.



இந்தச் சட்டவிரோத நடவடிக்கை தொடர்பான வழக்கு இன்று பருத்தித்துறை நீதிவான் மன்றில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-26)

# அழகுக் கலை நிபுணர்களுக்கு சங்கம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். மாவட்டத்தில் உள்ள அழகுக்கலை நிபுணர் களுக்கான மாவட்டச் சங்கம் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கான கூட்டம் நாளை இடம்பெறவுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் அதில் கலந்துகொள்ள முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அழகுக்கலை நிலையங் களுக்கான தேசிய தரத் தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்தச் சங்கம் உருவாக்கப்படவுள்ளது. அது தொடர்பான நிகழ்வு நாளை புதன்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் (புதிய யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ளது) இடம் பெறவுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் செயற் றிட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு அலுவலகத்தால் நடத் தப்படவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அழகுக் கலை நிபுணர்கள் இதில் கலந்து கொள்ள முடியும். மேலதிக விவரங் கள் தேவைப்படின் மாவட்ட சிறுதொழில் முயற்சி அபி விருத்திப் பிரிவுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார். (ற-4)

### சைட்டம் விவகாரம்

## மருத்துவ பீடாதிபதிகளை ராஜித நாளை சந்திப்பார்

கொழும்பு, பெப். 14

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில்அனைத்து பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடாதிபதிகளுடனும் நாளை கலந்துரையாடப்படும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைக் கூறினார்.

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியுடன் தனக்கு தனிப்பட்ட வகையில் எந்தவொரு ஒப்பந்தமும் இல்லை. சைட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் மாணவர்களுடனும் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (வ-4)

### ரணில் பதவியிலிருக்கும் வரை

## அரச தலைவரின் அதிகாரங்களை நீக்கவேண்டாம்

*இப்படிக் கேட்கிறது மகிந்த அணி*

கொழும்பு, பெப். 14

தலைமை அமைச்சராக ரணில் விக்ரமசிங்க இருக்கும் வரைக்கும் அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தை நீக்கக் கூடாது என்று ஜனநாயக இடதுசாரி கட்சியின் செயலாளரும் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது:

அரசின் நடவடிக்கையால் இன்று ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அரச தலைவரே தலையிட வேண்டியிருக்கின்றது. அதனால் அரச தலைவரின் அதிகாரத்தை ரணில் விக்ரமசிங்க தலைமை அமைச்சராக இருக்கும் வரைக்கும் நீக்கக் கூடாது என்பதுவே எமது நிலைப்பாடு. அலரிமாளிகையில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கமையவே நிதி குற்றப்புலனாய்வு பிரிவினர் செயற்படுகின்றனர். அதனால் சட்டத்தின் ஆதிபத்தியம் நிறைவேற்று அதிகாரிகளால் இல்லாமலாக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சட்டத்தின் பிரகாரம் இடம்பெறவேண்டிய பல விடயங்கள் இன்று ரணிலின் தேவைக்கேற்பவே இடம்பெற்றுவருகின்றன. அதேபோன்று நாட்டில் யாரையாவது கைதுசெய்வதென்றாலும் எந்த குற்றத்துக்காக கைதுசெய்வதென்றாலும் அது தொடர்பாக பொலிஸ் திணைக்களமோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களமோ தீர்மானம் எடுப்பதில்லை. மாறாக அலரி மாளிகையில் இருக்கும் குழுவே அதுதொடர்பாக தீர்மானம் எடுக்கின்றது-என்றார். (வ-4)

# கருணாவுக்கு நற்சான்றிதழ் வழங்குகிறார் கம்மன்பில

கொழும்பு, பெப். 14

போரின் போது கருணாவின் உதவி அரசுக்கு கிடைத்திருக்காமல் போயிருந்தால் கிழக்கை கைப்பற்றியிருக்க முடியாமல் போயிருக்கும். கருணா மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமாயின் விடுவிக்கப்பட்ட 12ஆயிரம் முன்னாள் போராளிகளையும் தண்டிக்க வேண்டும்.



இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விநாயகமூர்த்தி முரளிதரன் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளமை வரவேற்கத்தக்கது. இறுதிப் போரின் போது கிழக்கை புலிகளிடத்திலிருந்து மீட்டெடுக்க அவர் பெரும் உதவியளித்திருந்தார்.

கருணாவின் ஒத்துழைப்பு கிட்டியிருக்காவிட்டால், கிழக்கை புலிகளிடத்திலிருந்து மீட்க முடியாது. 2004ஆம் ஆண்டில் அவர் புலிகளிடத்திலிருந்து விலகி வந்தமைதான் போரில் வெற்றிபெற எமக்குச் சாதகமானது.

அரந்தலாவ பிக்குகள் கொலைச் சம்பவத்தின் பின்னணியில் கருணா உள்ளார் என்று கூறப்பட்டாலும் அதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் இல்லை. போரின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு கருணாவைத் தண்டிக்க வேண்டுமாயின் கடந்த அரசால் விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் முன்னாள் போராளிகளையும் தண்டிக்க வேண்டும்.

தற்போதைய அரசு புலிகளை பாதுகாத்து மீண்டும் தலைதூக்க சக்தியை வழங்கி வருகின்றது. மறுபுறத்தில் இராணுவத்தைத் தண்டிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களை தூண்டிவிட்டுக் கொண்டிருப்பவர்கள் எழுக தமிழ் ஊர்வலத்தின் ஊடாக இராணுத்தினர் வடக்கிலிருந்து அனுப்பப்பட வேண்டும், தேசிய பாதுகாப்புக்கு வைத்துள்ள காணிகளை மீள வழங்க வேண்டும் உள்ளிட்ட காரணிகளை வலியுறுத்தி வருகின்றனர் - என்றார். (வ-4)

# கட்டுப்பாட்டு விலைகளை மீறி கிளிநொச்சியில் அரிசி விற்பனை

## மக்கள் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி,பெப்.14
நாடளாவிய ரீதியில் அரசால் அரிசிக்கு கட்டுப்பாட்டுவிலை அறிவிக்கப்பட்டுள்ள போதும், கிளிநொச்சி மாவட்டத்தின் வர்த்தக நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையையும் மீறி, மிகவும் அதிகமான விலைக்கே அரிசி விற்பனை செய்யப் படுகிறது. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.
விலைக் கட்டுப்பாட்டு அறிவிக்கப்பட்ட போதும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் பலவற்றில் அரிசியின் விலை 100 ரூபாவுக்கும் அதிகமாகவே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.
இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள வர்த்தக நிலையங்கள் பலவற் றில் விற்கப்படும் பொருள்கள் தொடர் பான விலைப்பட்டியல்கள் எவையும் காட்சிப்படுத்தப்படாத நிலை காணப் படுகின்றது. இதனால் உள்ளூர் வர்த்தக நிலையங்கள் பலவற்றில் அத்தி யாவசியப் பொருள்கள் கொள்ளை இலாபத்துக்கு விற்பனை செய்யப் படுகின்றன எனவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
மக்களின் அன்றாட உணவுத் தேவைக் கான, பிரதான உணவான அரிசியின் விலையைக் கட்டுப்பாட்டு விலையில் வர்த்தகநிலையங்களில்பெற்றுக்கொள் வதற்கு, கிளிநொச்சி மாவட்ட விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தாமதிக்காது உடனடி நடவடிக்கை எடுத்து உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அதேவேளை விவசாய மாவட்டமான கிளிநொச்சியில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வோர் ஒரு மூடை நெல் 2 ஆயிரத்து 600 ரூபா வுக்கே கொள்வனவு செய்கின்றனர். கிளி நொச்சியிலிருந்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட நெல் வெளிமாவட்டங்களுக்க மூடை மூடை யாக ஏற்றுமதி செய்யப் படுகின்றது.
இதேவேளை கிளிநொச்சி மாவட்டச் செயலர் நெல் சந்தைப்படுத்தும் சபை யில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெற் களஞ்சியங்களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உள்ளூர் அரிசி உற்பத்தி மில் ஆலைக்கும் தலா ஒரு இலட்சம் கிலோகிராம் நெல்லை வழங்குமாறும், அவ்வாறு வழங்கப்பட்டால் கிளிநொச்சி மாவட் டத்தின் அரிசித் தட்டுப்பாட்டைக் குறைக்க முடியும் எனவும், இதனால் அரிசியின் அதிகரித்த விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் எனவும் அண்மையில் அறிவித்தி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-426)



கொக்கட்டிச்சோலை 9 ஆம் வட்டாரத்தில் வீடு தீக்கிரையானதில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு, முனைப்பு சிறிலங்கா நிறு வனத்தால் கடந்த சனிக்கிழமை நிதியுதவி வழங்கப்பட்டது. முனைப்பு சிறிலங்கா நிறு வனத்தின் தலைவர் மாணிக்கப்போடி சசிகுமார், முனைப்பு சுவிஸ் அமைப்பின் உறுப்பினர் கேதீஸ், நிறுவனத்தின் செயலாளர் இ.குகநாதன், பொருளாளர் அ.தயாளந்தரவி உள்ளிட்ட குழுவினர் சேதமடைந்த வீட் டைப் பார்வையிட்டதுடன், நிதியுதவி யையும் வழங்கி வைத்தனர். (ஐ-46)

## முல்லை. வித்தியானந்தாவில் இன்றும் ஓவியக்கண்காட்சி

முல்லைத்தீவு,பெப்.14
'பெண்களுக்கு எதிரான வன் முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்' என்னும் தொனிப்பொருளில் வன் முறைகளற்ற வாழ்வுக்கான ஓவியர்கள் காண்பியக் கலைக் கண்காட்சி நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் முள்ளியவளை வித்தியா னந்தக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்று வருகிறது.
இந்தக் கண்காட்சியில் ஓவியர்கள் தங்களது கற் பனையில் உதித்த பெண் களுக்கு எதிரான வன் முறைகளை நவீன ஓவிய வடிவில் தத்ரூபமாகச் சித் திரித்துள்ளனர்.
அதுமட்டுமன்றி, பெண் களுக்கு எதிராக நிஜத்தில் நடைபெற்ற வன்முறைகள், குறிப்பாக இறுதிப் போரில் பெண்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட வன்முறை கள் தொடர்பாகவும் நவீன ஓவியங்களை வரைந்துள் ளனர்.
இந்தஓவியக்கண்காட்சியில் பிரபல ஓவியர்களான கமலா வாசுகி, சு.நிர்மலவாசன், ப.நிரஞ்சன், சி.யசோ தாரிணி, கௌதமி, மொ.சி. பா.நஜமியா, மு.தா.பா.ருக் சானா, கோ.மதீஸ்குமார், ஆகியோரின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.
இந்தக் கண்காட்சியானது இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிவரை இடம்பெறும் எனவும் ஏற் பாட்டாளர்கள் தெரிவித்த னர். (ஐ-102)

## யானை தாக்கி இளைஞன் சாவு

கொழும்பு,பெப்.14
மகியங்கனை மாபா கூவெலப் பகுதியில் காட்டு யானை தாக்கி, இளைஞர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு தாயின் அருகில் பரிதாபமாக உரிழந்ததார்.
குறித்த இளைஞர் தனது தாயுடன் பாதையில் பயணித்து கொண்டிருந்த போது, காட்டு யானை ஒன்று அவரைத் தாக்கியுள் ளது.
கொன்கொஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான இளைஞரே யானையின் தாக்குத லுக்கு உள்ளானார்.
எனினும் இளைஞனுடன் சென்ற தாயாருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட வில்லை எனத் தெரிய வருகிறது. (ஐ)


## நாடளாவிய ரீதியில் 9,886 பேருக்கு டெங்கு

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,பெப்.14
நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப் பகுதியில் 9 ஆயிரத்து 886 பேர் டெங்குத் தொற்றுக்கு ஆளாகினர் என்று இனங் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 12 பேர் உயிரிழந் துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இது குறித்து சுகாதார அமைச்சு வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:
நாட்டில் குறிப்பிட்ட காலப்பகுதியில் இதுவரை 9, 886 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறு இனங் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் தொகையானது கடந்த வருடத்தின் முற்பகுதி யல் கண்டறியப்பட்ட நோயாளர்களை விட அதிகரித்துள்ளது.
இதேவேளை கடந்த வருடத்தில் ஜனவரி மாத இறுதியில் 6 ஆயிரத்து 694 பேரே டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டிருந்த னர்.
கொழும்பு, கம்பகா, களுத்துறை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி யில் கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 776 பேரும், கம்பகா மாவட்டத்தில் ஆயிரத்து 102 பேரும், காலி மாவட்டத்தில் 772 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 553 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.
இதேவேளை சுகாதார அமைச்சால் நாட ளாவிய ரீதியிலான டெங்கு ஒழிப்பு நட வடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலை யில், கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது டெங்குத் தொற்று பரவக்கூடிய 102 பாடசாலைகள் இனங் காணப்பட்டுள்ளன. இதன்போது குறித்த பாடசாலைகளுக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.
இந்த நிலையில் தனியார் நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் தொடர்ந்தும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், டெங்கு பரவும் அபாயத்துடன் சூழலை வைத்திருப்போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.
பொது மக்கள் தங்களது சுற்றுப்புறச்சூழலில் டெங்கு பரவும் காரணிகளை அகற்றி சூழலைச் சுத்தமாக வைத்திருக்கவும், மூன்று நாள்களுக்கு மேல் தொடர்ந்தும் காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் அறிகுறிகள் காணப் படின் உடனடியாக வைத்திய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளவும் - என்றுள்ளது. (ஐ)

## கூட்டு அரசின் காலத்திலும் மதுபான விற்பனை அதிகரிப்பு

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு



கொழும்பு,பெப்.14
கூட்டு அரசின் காலத்தி லும் மதுபான விற் பனை 28 வீதமாக அதி கரித்துள்ளது என்று பிவித்துரு ஹெல உறு மய கட்சியின் தலை வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித் தார்.
கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:
2014 ஆம் ஆண்டில் 74 மில்லியன் லீற்றர் மதுபானம் விற்பனை செய்யப்பட்டது. தற்போது அந்த விற்பனை 94 மில்லியன் லீற்றராக அதிகரித்துள்ளது. அதன டிப்படையில், இது 300 சதவீத அதிகரிப்பாகும்.
கூட்டு அரசின் காலத்திலும் மதுபானத்துக்கு ஆதரவான கொள்கை காரணமாக இந்த நிலமை ஏற்பட் டுள்ளது. இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் நேரடியாக இலக்கு வைக் கப்பட்டுள்ளனர்.
அரசு கால்போத்தல் சாரா யத்தின் விலையை நாளுக்கு நாள் குறைத்து வருகிறது. மக்களுக்கு மது பானத்தை வழங்கி, அதில் கிடைக்கும் பணத்தை ஐக் கிய தேசியக் கட்சியின் நிதி யத்துக்கு அனுப்பி, அந்தப் பணத்தை 2020 ஆம் ஆண்டு நடைபெறும் தேர் தலுக்குப் பயன்படுத்த எண் ணியுள்ளது - என்றார். (ஐ)

## சட்ட விரோத ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க மோப்ப நாய்களைப் பயன்படுத்தத் திட்டம்

கொழும்பு,பெப்.14
சட்ட விரோத ஆர்ப்பட்டங்கள் மற்றும் பேரணிகளைக்கலைக்கபொலிஸ்கலகத் தடுப்புப் பிரிவுக்கு மேலதிகமாக பொலிஸ் குதிரைப்படை மற்றும் மோப்ப நாய் களைப் பயன்படுத்துவது குறித்து அவ தானம் செலுத்தப்பட்டுள்ளது.
அதன் பிரகாரம் சுவீடன் மற்றும் ஸ்கொட்லண்ட்யார்ட் ஆகியவற்றின் கலகத்தடுப்பு விசேட நிபுணர்கள் பொலிஸ் மோப்ப நாய்களுக்கு அது தொடர்பிலான அடிப்படைப் பயிற்சிகளையும் வழங்கியுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கண்டி பொலிஸ் மோப்ப நாய் தலைமை யகத்தில் 30 மோப்ப நாய்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஸ்கொட்லண்யார்ட் பொலிஸார் செயற் படும் பிரதேசங்களிலும், சுவீடனிலும் சட்ட விரோத பேரணிகளைக் கலைப் பதில் குதிரைகளும், மோப்ப நாய்களும் வெற்றிகரமான நடவடிக்கைகளைச் செய்துள்ளதாகவும், அதனை ஒட்டிய பயிற்சிகளே இவ்வாறு வழங்கப்படுவதா கவும் குறித்த பொலிஸ் அதிகாரி சுட்டிக்காட்டினார்.
வீடியோக் காட்சிகளைக் காட்டி இந்தப் பயிற்சிகள் நாய்களுக்கு அளிக்கப் பட்டுள்ளன.
அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்யும் போது குறித்த மோப்ப நாய்கள் எந்த தொந்தரவையும் ஆர்ப்பாட்டக்காரர் களுக்கு ஏற்படுத்தாது எனவும், எல்லை மீறிக் கல் வீச்சுப் போன்ற கலக நடவடிக் கையில் ஈடுபடும் போது இந்த நாய் கள் எதிர்ச் செயற்பாடுகளில் ஈடுபடும் என வும் குறித்த உயர் பொலிஸ் அதிகாரி சுட்டிக்காட்டினார். (ஐ)

# மொரகஹாகந்த நீர்ப்பாசனத்தை பார்வையிட மக்கள் படையெடுப்பு

கொழும்பு,பெப்.14

மொரகஹாகந்த நீர்ப்பாசனத் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக அதிகமானவர்கள் தற்போது வருகை தந்த வண்ணம் உள்ளனர். இரண்டு நாள்களில் மட்டும் இரண்டு இலட்சத்துக்கு அதிகமானவர்கள் வருகை தந்தனர் என்று குறித்த வேலைத் திட்டத்தின் பொறுப்பான மக்கள் தொடர்பு அதிகாரி டி. எம். தயாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிலுள்ள சகல பிரதேசங்களில் இருந்தும் மக்கள், இந்த நீர்ப்பாசனத் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தருகின்றனர்.

மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் இறுதித் திட்டம், மொரகஹாகந்த நீர்ப்பாசனத் திட்டமாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட இயற்கை இடர்களால் மொரகஹாகந்த நீர்த் திட்டத்தைச் சுற்றியுள்ள 11 கிராமங்கள் முழுமையாக அழிந்துள்ளன. இது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன– என்றார்.

மொரகஹாகந்த நீர்ப்பாசனத் திட்டத்தைப் பார்வையிட வருபவர்களுக்கு நீர்த்தேக்கத்துக்குள் இறங்குவதைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வில்பத்து பிரச்சினையை ஆராய்வதற்கு அரச தலைவர் ஆணைக்குழு அவசியம்

## அமைச்சர் நிரோஸன் பெரேரா கோரிக்கை

கொழும்பு,பெப்.14

வில்பத்து பிரச்சினை தொடர்பாக துரித விசாரணையை மேற்கொள்வதற்கு அரச தலைவர் ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் நிரோஸன் பெரேரா அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வில்பத்து வனப்பகுதி புத்தளம் மாவட்டத்துக்கு எல்லையாக இருக்கின்ற நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்டத் தலைவர் என்ற வகையில் நான் அரச தலைவரிடம் இந்த விடயத்தை முன்வைத்துள்ளேன்.

வில்பத்து வனப்பாதுகாப்பு மற்றும் அதனைச் சுற்றி அரசுக்குச் சொந்தமான பிரதேசம் அழிக்கப்பட்டு நாச வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு அது பற்றி எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை என்று ஊடகம் மற்றும் சமூக வலைத்தளங்களும் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தன.

இது கூட்டு அரசின் அடிப்படைத் தன்மைக்குப் புறம்பாக இருப்பதால் அரச தலைவர் ஆணைக்குழு ஊடாக விசாரணை நடத்தி அறிக்கையின் மூலமாக நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் – என்றார். (ஐ)

# சீமை கிழுவையை எரிபொருளாக பயன்படுத்தும் திட்டம் ஆரம்பிப்பு

கொழும்பு,பெப்.14

உயிரியல் வாயுவைப் பயன் படுத்தி நாட்டின் மின்சார தேவைப்பாட்டின் 50 சத வீதத்தை பூர்த்தி செய்ய முடியும் என மின்சக்தி மற்றும் மீளாக்க சக்திவலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

கிலிசரியாவை (சீமை கிழுவை) எரிபொருளாகப் பயன்படுத்தும் தேசிய நிகழ்வை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுயதொழில் வாய்ப்பாக கிலிசரியாவை (சீமை கிழுவை) வீட்டுத் தோட்டப் பயிராக அறிமுகப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எப்பாவலை வனப்பாதுகாப்பு காரியாலயத்தில் குறித்த கிலிசரியா பயிரிடும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப நடவடிக் கையாக 2 ஆயிரம் ஏக்கரில் கிலிசரியாவை பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



நிலக்கரி மற்றும் பெற்றோலிய எரிபொருளுக்காக நாட்டின் பெருமளவு நிதி வெளிநாடுகளுக்கு வழங்கப்படுகின்றது. அது நாட்டின் இறக்குமதிச் செலவில் 40 சதவீதமாக உள்ளது.

எனவே நாங்கள் மாற்று சக்திவலுவை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். நாம் இன்று ஆரம்பிக்கும் இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக நாட்டு மக்கள் சுயதொழில் வாய்ப்பையும் பெறுவர். அதே போன்று சக்திவலு உற்பத்திக்கும் இந்த முறைமை வழிவகுக்கும் – என்றார். (ஐ)

# வடமேல் மாகாண வாவி செயற்றிட்டம் நேற்று ஆரம்பம்

கொழும்பு,பெப்.14

வட மேல் மாகாண வாவி செயற்றிட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



வடமேல் மாகாண பொதுமக்களின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்த குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாக, தண்ணீரை விநியோகிக்கும் செயற்றிட்டம், அரச தலைவரின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மீ ஓயாவின் உயர்ந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் ஹக்வடுனா ஓயா நீர்த்தேக்கத்துக்கு மஹாவலி கங்கையின் நீரை திருப்பி குருநாகலை மாவட்டத்தின் வடக்குப் பிரதேசத்தில் உள்ள சில வாவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனூடாக விவசாயத்தை மேம்படுத்துவதற்கும், நீர் பற்றாக்குறையால் ஏற்படும் நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கும், வடமேல் மாகாண வாவி செயற் றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது. செயற்றிட்டம் நிறைவடைந்த பின்னர், மகாவலியின் நீரை ஒரு லட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புக் குப் பெற்றுக்கொடுப் பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

குறித்த பிரதேசத்தில் உள்ள 300 சிறிய குளங்களுக்கும், 8 பிரதான வாவிகளுக்கும் மகாவலியின் நீரைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# எல்லை... (தொடர்ச்சி)

கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே சிவ ஞானம்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமீப காலமாக குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. வாள் வெட்டுச் சம்பவங்கள், கஞ்சா கடத்தல்கள் போன்றன மீண்டும் தலை தூக்கியுள்ளன. வடக்கு மாகாண சபை இயங்கினாலும் இந்த விடயத்தில் சட்டம் சம்பந்தமான அதிகாரிகள் குறிப்பாக பொலிஸார் இதில் அக்கறை செலுத்தவேண்டும். குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தற்பொழுது பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் முக்கிய இடங்களில் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த விடயம் வரவேற்கத்தக்கது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதுடன் மட்டும் நின்றுவிடாது, அவற்றை மேலும் தொடரவிடாது கட்டுப்படுத்தவேண்டும் – என்றார். (வ-8)

**விற்பனைக்குண்டு**
70k.g புதிய உரபேக் மொத்த
விலை 26/50
உரபேக் மெசினில் தைப்பதற்கு
அனுபவமுள்ள ஆண்/பெண் தேவை.
**077 387 7075**

**பெயர்மாற்றம்**
பெரியகுளம் கட்டைக்காடு 3 ஆம் ஒழுங்கை என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **நாகன் பொன்னையா கேதீஸ்வரன்** ஆகிய எனது பெயரை இன்று முதல் **நாகன் பொன்னையா ஜெகதீஸ்வரன்** என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்புதிய பெயரையே பயன்படுத்துவேன். என்றும் இத்தால் இலங்கை சனநாயகசோசலிக குடியரசுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.
**நாகன் பொன்னையா ஜெகதீஸ்வரன்**

**பெயர் மாற்றம்**
**சிவராசா விஜயகுமாரி** ஆகிய நான்
இன்று முதல் எனது பெயரை **சிவராசா விஜயராணி** என மாற்றியுள்ளேன்.
இனிவரும் காலங்களில்
இதுதொடர்பான சகல
ஆவணங்களிலும் இவ்வாறே
கையொப்பமிடுவேன் என்பதையும்
உறுதிப்படுத்துகின்றேன்.
**சி.விஜயராணி**

**தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை**
இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் மட்டக்களப்பு கிளையில் 31.12.2016 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 25.02.2017ம் திகதி காலை 10.30 மணி முதல் இல.187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பிலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நியந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.
ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance
உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

**வீடு வாடகைக்குண்டு**
யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர்
கல்லூரிக்கு அருகில் இல.23 பிளெச்சர்
வீதியில் சகல வசதிகளும் கொண்ட
மூன்று அறை வீடு வாடகைக்கு
உண்டு.
077 724 9824, 071 444 2134

**வீடு வாடகைக்கு தேவை**
உப்புமடம் சந்தி. K.K.S. வீதி.
கோண்டாவில் மற்றும் இணுவில்
முத்தட்டு மட வீதிக்கு அண்மையாக
வீடு வாடகைக்கு தேவை.
077 333 7146

**காணி விற்பனைக்கு**
ஊரெழு வடக்கு. சுன்னாகம் வீதிக்கு
அருகில் நிலப்பரப்பு 50 விஸ்தீரணமான
தோட்டக்காணி மின்சார வசதியுடன்
விற்பனைக்கு உண்டு.
077 362 1176

**இந்திய சாஸ்திரியார் வருகை**
யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும்
வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள்
வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N.குமாரசாமி**
கைரேகை. ஜாதகம். எண்கணிதம் மற்றும்
திருமணத்தடை. கல்வித் தடையா.
குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில்
தொடங்க வேண்டுமா? தொழிலில்
முன்னேற்றம் இல்லையா? குடும்பப்
பிரச்சினையா? வெளிநாடு
செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப்
பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
**தினசரி காலை 8 மணி முதல் மாலை 6.00 மணிவரை**
இல.19, பலாலி வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
072 681 6681, 076 557 5394,
072 681 6691

## மகனைக் கொன்றவர்களுக்கு கடும் தண்டனை வழங்கவும்

### இளைஞனின் பெற்றோர் கோரிக்கை

'எமது மகனின் கொலையுடன் தொடர்புடையவர்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி, கடுமையான தண்டனைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்' -இவ்வாறு கட்டுகஸ்தோட்டை இளைஞனின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை, செனரத்கம பிரதேசத்தைச் சேர்ந்த சிந்தக்க கெலும் அலுகொல்ல (வயது-32) என்ற இளைஞன், இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். கைகள் கட்டப்பட்ட நிலையில், இளைஞனின் சடலம், கண்டி - கொழும்பு வீதி, பஸ்யாலையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது.

இது தொடர்பில் இளைஞனின் பெற்றோர் தெரிவித்ததாவது: 'எங்களது மகன், எவருக்கும் எந்தவித இன்னல்களையும் கொடுத்ததில்லை. அவர் அமைதியானவர். தொழில் நிமித்தமே பஸ்யாலைப் பிரதேசத்துக்குச் சென்றார். அவர் தொழிலுக்குச் சேர்ந்து, இரண்டு மாதங்களே ஆகின்றன. எமது மகன், கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய அனைவருக்கும் கடும் தண்டனையை வழங்க வேண்டும்.'-என்றனர். பஸ்யாலையிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றி வந்த குறித்த இளைஞன், வீட்டுக்குச் செல்வதாகக் கூறி, கடந்த 9 ஆம் திகதி இரவு பஸ்யாலையிலிருந்து புறப்பட்டுச் சென்ற நிலையிலேயே, காணாமல் போனார். எனினும், அவர் வரக்காபொலையிலிருந்து மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மறியல் நீடிப்பு

கொழும்பு,பெப்.14

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத் திறப்பு நிகழ்வின் போது, கலகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 25 சந்தேக நபர்களின் விளக்கமறியல், எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களை அம்பாந்தோட்டை மாவட்ட நீதிவான் மன்றத்தில் நேற்று முற்படுத்திய போது, நீதிவான் மஞ்சுள கருணாரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ஐ)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட லுணுகலை பிரதேச சபை செயலக கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் ஆகியோரால் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. (ஐ)

## மைத்திரியை ஏமாற்றுகிறது கூட்டு அரசு

### பந்துல குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.14

கூட்டு அரசு அபிவிருத்தி தொடர்பான ஒளிப்படங்களை அரச தலைவருக்கு காண்பித்து, அவரைத் தொடர்ந்து ஏமாற்றி வருகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

கூட்டு எதிர்கட்சியால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு அபிவிருத்தி என்ற போர்வையில் அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவை ஏமாற்றி வருகிறது. அபிவிருத்திகளுக்குச் சான்றாக ஒளிப்படங்களை அவர்கள் காண்பிப்பதால் அரச தலை வரும் அதனை நம்புகிறார். குளியாப்பிட்டியில் வொக்ஸ் வேகன் நிறுவனத்தின் உற்பத்திச் சாலையை அமைத்து 3 லட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுதரப்படும் என்று கூட்டு அரசு பொய் யான பரப்புரையைச் செய்தது.

இவ்வாறான போலியான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அபிவிருத்தித் திட்டங்கள் பெரிதளவில் முன்னெடுக்கப்படுவதில்லை.-என்றார். (ஐ)

**University of Jaffna, Sri Lanka**

**Translation of the Annual Report**

University of Jaffna will entertain applications from suitably qualified person,to translate from English version of the Annual report of the university of Jaffna,to Tamil and Sinhala version for the year 2015,which shouldbe providedin computer printing with hard and softcopies.

Payment will be made as per the Public Administration Circular.12/2003(III)

Those, who wish to apply for the above translation work, are hereby requested to send their applications with their names, address, telephone Nos and their experience in translating work, to the Registrar, University of Jaffna, on or before 18th March 2017. Top left hand corner of the Application envelopeshould be stated as "Translation work of the Annual report"

Registrar
University of Jaffna

தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான

## ராணுவத்தின் வசமுள்ள காணிகள் மீளக் கையளிக்கப்படவேண்டும்

### மு.காவின் பேராளர் மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு,பெப்.14

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தால் கைக்கொள்ளப்பட்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான தனியார் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட காணிகள் மீளக் கையளிக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27 ஆவது பேராளர் மாநாடு, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கட்சியின் தலைவரும், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன:

சகல இனங்களும் திருப்திப்படும் வண்ணம் தீர்வு காணும் நடவடிக்கையை, அரசு துரிதப்படுத்த வேண்டும். மாகாண சபைகளுக்கு, அரசமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் தடைகளின்றிப் பிரயோகிப்பதற்கு, அரசு வழிவகை செய்ய வேண்டும்.

அரசு உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுக்கான ஒரு மீள்குடியேற்றக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் நிலங்கள் தொடர்பிலான பிரச்சினைகளைக் கையாள்வதில் அரசும், அரச இயந்திரமும், வெளிப்படைத் தன்மையைக் கையாள வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கையாள்வதில் காட்டப்படும் பாரபட்சத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டிலுள்ள சகல இன மக்களும் தத் தமது நம்பிக்கை சார்ந்த மதங்களைப் பின்பற்றுவதற்கும், அவர்களது கலாசார விழுமியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும், முழுமையான சுதந்திரத்தை அரசு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

> நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் நிலங்கள் தொடர்பிலான பிரச்சினைகளைக் கையாள்வதில் அரசும், அரச இயந்திரமும், வெளிப்படைத் தன்மையைக்கையாள வேண்டும்.

அத்தோடு, வெறுக்கத்தக்க உரைகள், வன்முறைப் பிரயோகம் என்பவற்றைத் தடுப்பதற்கு, போதிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை, பழைய முறையில் அதாவது வீதாசார முறையில் மிகத் துரித மாக நடத்த அரசு ஆவன செய்ய வேண்டும். (ஐ)



# நிரந்தர வீடுகள் அமைக்கக் கோரி தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு,பெப்.14

இராகலை, சென்லெனாஸ் தோட்டத்தைச் சேர்ந்த 195 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், தமக்கு நிரந்தர வீடுகளை அமைத்துத் தருமாறு கோரி நேற்றுக் காலை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தத் தோட்டத்திலுள்ள 75 குடும்பங்கள், 6 வருடங்களாக வீடுகள் இல்லாமல், தற்காலிக வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். நிரந்தர வீடுகளை அமைத்துத் தருமாறு, தோட்ட நிர்வாகத்திடம் பலமுறை அவர்கள் கூறிய போதிலும் நிர்வாகம் அதனைக் கவனத்தில் கொள்ளத் தவறியுள்ளது.

இதேவேளை கடந்த வாரம், 35 வீடுகளை முதலில் அமைத்துத் தருவதாக தோட்ட நிர்வாகம் கூறியதுடன், நில அளவைக்காக தொழிலாளர்களிடமிருந்து ஆயிரத்து 500 ரூபா வீதம் பெற்றுக்கொண்டது. ஆனால், இது வரை நில அளவை முன்னெடுக்கப்படவில்லை எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

> தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்க அதிகாரிகளிடம் தெரிவித்த போதிலும், அவர்கள் இதனை கண்டுகொள்வதில்லை எனத் தெரிவித்த தொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீடுகள் இல்லாதவர்களின் பெயர்பட்டியலை பலமுறை, தோட்ட நிர்வாகம் சேகரித்திருந்தாலும், அதற்கான உரிய நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்க அதிகாரிகளிடம் தெரிவித்த போதிலும், அவர்கள் இதனைக் கண்டுகொள்வதில்லை எனத் தெரிவித்த தொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே, இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (ஐ)

# துமிந்தவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



கொழும்பு,பெப்.14

சாவுத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சுகவீனம் காரணமாக துமிந்த சில்வா நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்று சட்டத்தரணிகள் முன்வைத்த கருத்துக்களை அடுத்து, அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

குறித்த வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், துமிந்தவின் உடல் நிலை குறித்து அறிக்கை சமர்ப்பிக் குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், சட்ட வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, வைத்திய நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் நீதிபதி தெரிவித்தார்.

மூன்று வருட காலத்துக்கான சொத்து விவரங்களை உரிய முறையில் வெளியிடாத காரணத்துக்காக இலஞ்ச ஊழல் மோசடி ஒழிப்பு ஆணைக்குழு துமிந்த சில்வா மீது வழக்குத் தொடர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தோப்பூரில் மிதிவெடி மீட்பு

திருமலை,பெப்.14

திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் சந்தைக் கட்டடத் தொகுதி வளாகத்தில் மிதிவெடியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மீட்கப்பட்டது என்று தோப்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வடிகால் தோண்டிக் கொண்டிருந்த போது சந்தேகத்துக்கிடமான பொருள் ஒன்று தென்பட்டது. இதனையடுத்து தோப்பூர் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, இந்த மிதிவெடி மீட்கப்பட்டது.

குறித்த மிதிவெடி மீட்கப்பட்ட இடத்தில் முன்னர் தோப்பூர் பொலிஸ் காவலரண் ஒன்று இருந்துள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ)

# நுவரெலியாவில் இரண்டு தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்

நுவரெலியா நகரில் காணப்படும் தமிழ் மொழி மூலமான இரண்டு பிரதான பாடசாலைகள், துரித கதியில் அபிவிருத்தி செய்யப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் உறுதியளித்துள்ளார்.

புனிததிருத்துவக் கல்லூரி, புனித சவேரியார் கல்லூரி ஆகிய இருபாடசாலைகளுமே துரித கதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கான வேலைத் திட்டங்களை அமைச்சர் நேரடியாகச் சென்று பார்வையிட் டார்.

புனித சவேரியார் கல்லூரியின் முதற்கட்ட வேலைத்திட்டத் துக்கு 35மில்லியனும், புனித திருத்துவக் கல்லூரியின் வேலைத்திட்டத் துக்கு 20 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.(ஐ)

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை சிவலிங்கம்

(ஓய்வு நிலை முகாமையாளர், ப.நோ. கூ. சங்கம், புதுக்குடியிருப்பு)



வடமராட்சி அல்வாய் மேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை சிவலிங்கம் 11.02.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - பெரியபிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் செல்லமணியின் அன்புக் கணவரும், சிவகுமார் (லண்டன்), சாந்தகுமார் (சுவிஸ்), ஸ்ரீகௌரி (ஆசிரியை, கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மரஞ்சினி (லண்டன்), சுகந்தி (சுவிஸ்), செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹருணி, சியாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உந்தோடை,
அல்வாய் மேற்கு, திக்கம்.

தகவல்:
குடும்பத்தினர்

021 300 1752

## 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**புவனேஸ்வரி அரியராஜா (B.A)**

கற்றிட்ட தாயே நின் காதற் கணவனையும்
பெற்றிட்ட மைந்தனையும் பிரிந்து நீ சென்றாலும்
பற்றுடனே கற்றவுந்தன் பள்ளிச் சிறுவரெலாம்
பெற்றிட்ட பெருமையுமோ பேசற்கரிதம்மா

மலர்வு 30.09.1941
உதிர்வு 14.02.1991

அரியராஜா (கணவர்)
ஜெயந்தன் (மகன்)
தாவடி தெற்கு,
கொக்குவில்.

## பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



கடந்த 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குலவிளக்கு

**சிவசண்முகானந்தக் குருக்கள் கமலாதேவி**

தோற்றம் 01.02.1950
மறைவு 05.02.2017

அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல் எடுப்பு) இன்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறும். நாளை (15.02.2017) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் சபிண்டீகரணம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

வீரமாகாளி அம்மன் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சதாசிவம்
**தெட்சணாமூர்த்தி**
*(ஓய்வுபெற்ற முதலியார்)*
( திதி : சங்கடஹரசதுர்த்தி )



தோற்றம் 16.08.1947
மறைவு 30.01.2013

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த என்னுயிர்த் தெய்வமே !
விண்ணுலகம் சென்று இன்று நான்கு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

கஜபதி செட்டிலேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி – சிவயோகமணி

# வழித்தட அனுமதி பத்திரம் வழங்க விசாரணைக் குழு

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். நியமிக்கப்படவிருக்கும் 3 பேர் கொண்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையிலும், அமைச்சால் மேற்கொள்ளப்படவிருக்கும் கள ஆய்வின் அடிப்படையிலும் வழி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் நேற்றுமுன்தினம் வடக்கு போக்குவரத்து அமைச்சர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றது. பேருந்து உரிமையாளர்கள் 89 பேர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சேவை வழங்குநர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தொடர்பாக அதில் ஆராயப்பட்டது. வழித் தடங்களில் அளவுக்கு அதிகமான பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது. வழித்தடங்களில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் எண்ணிக்கையை சுழற்சி முறையில் குறைக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

இறுதிப் போரில் தமது பேருந்துகளை முள்ளிவாய்க்காலில் கைவிட்டுச் சென்றவர்கள், நீண்டகாலமாகச் சேவையில் ஈடுபடுபவர்கள், மீள்குடியமர்வின் பின்னர் சேவையில் ஈடுபடுவர்கள் என சேவை வழங்குநர்கள் மூன்று பிரிவாகக் காணப்படுகின்றனர். இதனாலேயே அதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்குத் தகுந்த பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு 3 பேர் கொண்ட விசாரணைக் குழு அடுத்த வாரமளவில் அமைக்கப்படும். அவர்கள் பேருந்து உரிமையாளர்களிடம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பார்கள். ஒவ்வொரு வழித்தடத்திலும் எத்தனை பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியும், சேவை வழங்குநர்கள் நட்டமடையாது இருப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் என்பன குறித்து அமைச்சின் ஊடாகக் கள ஆய்வுகள் நடத்தப்படும். அவற்றின் அடிப்படையில் பேருந்து உரிமையாளர்கள் பாதிப்பு அடையாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். நிரந்தர வழித்தட அனுமதிப் பத்திரம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது. (ற-4)



முல்லைத்தீவு, நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், காலணிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. 142 மாணவர்களுக்குத் தலா 2ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன. கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் எஸ்.கே. சோதிநாதனும் அவரது அணியினரும் உபகரணங்களை வழங்கினர். நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திதரன், மருத்துவர் ஜெயராஜா மற்றும் வித்தியாலய முதல்வர், ஆசிரியர், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-4)

## யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட 23 முதிரைக் குற்றிகள் சிக்கின

கிளிநொச்சி, பெப்.14

கிளிநொச்சி, முழங்காவிலில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி செல்லப்பட்ட 23 முதிரை குற்றிகள் கைப்பற்றப்பட்டன என்று பூநகரி பொலிஸ் நிலைய கடமை நேர பொறுப்பதிகாரி செனரத் பண்டாரா தெரிவித்தார் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து நேற்றுக் காலை 5 மணியள வில் சோதனை நடத்தப்பட்டது. உமி மூடைகளால் மறைக்கப்பட்ட நிலையில் லொறி ஒன்றில் கடத்தி செல்லப்பட்ட 23 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ற-6)

# பணித் தடையை விலக்கக் கோரி ஆசிரியர்கள் நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், பெப்.14

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் ஆசிரியர்கள் சிலருக்கு விதிக்கப்பட்ட பணித் தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் காலை 9.30 மணியளவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு முன்பாகப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

கஷ்டப் பிரதேசத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றிய ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்க வேண்டும் என்று கடந்த மாதம் கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரனுடனான தகராறின் பின்னர், 3 ஆசிரியர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுக்குப் பணித் தடை விதிக்கப்பட்டது. அவர்களுக்கான பணித்தடையை நீக்க வேண்டும் என்றும், வடக்கு மாகாண கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கு இழைக்கும் அநீதிக்கு நீதி வேண்டும் என்றும் வலியுறுத்தி இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாகாண கல்விப் பணிப்பாளரையும் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலரையும் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும், ஆசிரியர் இடமாற்றங்களில் பாரபட்சம் காட்டாதே, வடக்கு மாகாண கல்வி அமைச்சால் பணித்தடை செய்யப்பட்டமை குறித்து வடக்கு மாகாண க்ல்வியமைச்சின் சூட்சுமம் என்ன?, பணித் தடை செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு நீதி வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளையும் ஏந்திய வண்ணம் கோசமும் எழுப்பினர். (ற-4,8,106)

## பிலக்குடியிருப்பு போராட்டம் முன்னுதாரணமாக விளங்கும்

### வட்டு. இந்து வாலிபர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

எமது மக்களின் தாயக பூமியை ஆக்கிரமித்து வைத்திருக்கும் படைத்தரப்பை வெளியேற்றுவதற்கு பிலக்குடியிருப்பு மக்களின் சாத்வீக போராட்டம் முன்னுதாரணமாக விளங்கும். மக்கள் சிந்தித்துசெயற்படுவதற்கானகாலம் இதுவாக அமையட்டும்.

இவ்வாறு வட்டு இந்து வாலிபர் சங்கம் தெரிவித்தது.

பிலக்குடியிருப்பில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு வட்டு. இந்து வாலிபர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. அந்தச் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

போர் முடிந்து 7 வருடங்கள் கடந்த நிலையிலும், மக்களின் காணிகள் வழங்கப்படாது தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளன. முல்லைத்தீவு- கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை வழங்கக் கோரி 13 நாள்களாக விமானப்படை முகாமுக்கு முன்பாகத் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அனைவரையும் நம்பியது போதும், எமது நிலத்தை நாமே மீட்க முடியும் என்ற மன நிலையில் தொடர்ச்சியாக போராடி வரும் கேப்பாபிலவு உறவுகளுக்கு பலதரப்பட்ட அமைப்புக்கள் மற்றும் பல வழிகளில் ஆதரவு கிடைத்து வருகின்றன. இந்த மக்களின் நில மீட்புக்கான சாத்வீக போராட்டம் வெற்றி பெறவேண்டும்.

தமிழ் புலம்பெயர் அமைப்பான லண்டனைச் சேர்ந்த 'எதிர்காலத்துக்கான பாதை என்றஅமைப்பு'வட்டுகோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக கேப்பாபிலவு மக்களுடன் அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் உணவுப் பொதிகளையும், உதவிப் பொருள்களையும் வழங்கியது. (ற-10)

## கஞ்சா கடத்தியவருக்கு 85,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம்.பெப்.14

கஞ்சா கடத்திய வழக்கில் கைதானவருக்கு 85 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது யாழ்ப்பாண மேல் நீதிமன்று. 2015ஆம் ஆண்டு 2ஆம் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணம் சங்கானை தொட்டிலடிச் சந்தியில் டிமோ பட்டா வகை வாகனத்தில் 48 கிலோ 500 கிராமும் கஞ்சா கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் இளவாலைப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டார். மல்லாகம் மன்றில் விசாரணைகள் நடைபெற்று, 2016 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ஆம் திகதி சட்டமா அதிபரால் வழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றுக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு 50 ஆயிரம் ரூபாவும், அதைத் கட்டத் தவறும் பட்சத்தில் ஒரு வருடகால கடூழியச் சிறைத்தண்டனையும், இரண்டாவது குற்றச்சாட்டான கஞ்சா விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டுக்கு 35ஆயிரம் ரூபாவும், அதைக் கட்டத் தவறும் பட்சத்தில் ஒரு வருடகால சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாண மேல் மன்றின் நீதிபதி மா. இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (ற-ரி)



## உண்மை வெங்காய விதை உற்பத்திக்கு மானிய உதவி

அச்சுவேலி, பெப்.14

யாழ். மாவட்டத்தில் உண்மை வெங்காய விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 75 விவசாயிகளுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்பு மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒரு பரப்பு நிலத்தில் உண்மை வெங்கய விதை உற்பத்தியில் ஈடுபட வேண்டும்.

மத்திய அரசு வழங்கிய தேசிய உணவு உற்பத்தித்திட்ட நிதி மூலம் 75 விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான பயிர்ச்செய்கை தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

உண்மை வெங்காய விதையை மேடையில் விதைத்து, நாற்றை உற்பத்தி செய்து, 30 தினங்களின் பின்னர் நாற்றைப் பண்படுத்தி தோட்ட நிலத்தில் நடுகை செய்து பராமரிப்பதன் மூலம் 45 தினங்களின் பின்னர் வெங்காயத்தை அறுவடை செய்ய முடியும். மரபு வழியான வெங்காய குமிழ் நடுகை மூலம் ஏற்படக்கூடிய நோய்த் தாக்கம் மற்றும் பாதிப்புக்கள் இல்லாமல் இருப்பதோடு, உற்பத்திச் செலவும் குறைவாக இருப்பதால் விவசாயிகள் உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் பயிர்ச்செய்கையில் நாட்டம் செலுத்துகின்றனர். நாற்று மேடை உற்பத்தி விற்பனையிலும் கணிசமான அளவு விவசாயிகள் ஈடுபாடு கொண்டு, அதனையும் தொழில் முயற்சியாக மேற்கொண்டுள்ளனர்.

உண்மை வெங்காய விதை இந்தியா உட்பட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும்போது கிலோ ஒன்று ரூபா பத்தாயிரத்துக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது. உள்ளூரில் உற்பத்தி செய்யும்போது கிலோ ஒன்று ஏழாயிரம் ரூபாவுக்குக் குறைவான விலையில் உற்பத்தி செய்யய முடியும். உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் விதை முளைதிறன் வீதமும் அதிகம் என்று விவசாயத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-11)



# முனைப்பு நிறுவனத்தால் வாழ்வாதார, மருத்துவ உதவிகள் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு,பெப்.14
முனைப்பு நிறுவனத்தால், வாழ்வாதார மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நிறுவனத்தின் தலைவர்மா.சசிகுமார் தலைமையில் இடம்பெற்றது.

போர் மற்றும் இயற்கை இடர்களால் கணவனை இழந்த பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வா தாரத்தை உயர்த்துவதுடன், அந்தக் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியையும் முன்னெடுக் கும் நோக்கில் இந்த உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

சுயதொழிலுக்கான மா அரைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், ஆடு வளர்ப்புக்கான நிதி உதவி, சிற்றுண்டி தயாரித்து வழங்குவதற்கான நிதி உதவி, புடவைக் கடை அமைப்பதற்கான நிதி உதவி, மருந்து வத்துக்கான உதவி என் பன வழங்கப்பட்டன.

நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் சி.தவராசா, முனைப்பு சுவிஸ் அமைப்பின் நிர்வாக உறுப்பினர் கிருபா, முனைப்பு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.அருணன், முனைப்பின் செயலாளர் இ.குகநாதன், பொருளாளர் அ.தயாநந்தரவி, ஆலோசகர் க.புஸ்பராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் வாழ்வாதார மற்றும் கல்வி அபிவிருத்தித் திட்டங்களை பிரதானமாக மேற்கொண்டு வரும் முனைப்பு நிறுவனம் மருத்துவ உதவிகள், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் உயிரிழக்கும் ஏழைகளின் சடலங்களை வீடுகளுக்கு ஏற்றிக் கொடுக்கும் வேலைத்திட்டங்கள், அநாதரவற்றவர்களின் சடலங்களையும் அடக்கம் செய்வதற்கான உதவிகள், இயற்கை இடர் இழப்புக்களுக்கான உதவிகள் என்பவற்றை வழங்குகின்றது. (ஐ)

# கிண்ணியா ஈரநிலங்கள் மக்களால் ஆக்கிரமிப்பு

## தடுத்து நிறுத்துவது பெரும் சவால் என்கிறார் பிரதேச செயலர்

கொழும்பு,பெப்.14
கிண்ணியா பிரதேசத்துக்கு தனியான அடையாளத்தைக் கொடுக்கும் ஈரநிலங்கள் பொது மக்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அதைத் தடுத்து நிறுத்தும்போது ஆக்கிரமிப்பவர்களிடமிருந்தும், அரசியல்வாதிகளிடமிருந்தும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகிறோம். -இவ்வாறு கிண்ணியா பிரதேச செயலர் எம்.ஏ.அனஸ் தெரிவித்தார்.

கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய சுற்றால் படையணியினருக்கு சின்னம் சூட்டும் வைபவம், பாடசாலை அதிபர் திருமதி என்.எஸ். அமீன்வாரி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிண்ணியா பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 63 சதவீதமானவை ஈரநிலப் பிரதேசங்களாகும். கிண்ணியா பிரதேசத்துக்கு என்று தனியான அடையாளத்தையும், அழகையும் இந்தப் பிரதேசங்கள் கொடுக்கின்றன. இவற்றின் பெறுமதி தெரியாது,

> “ தற்போது இருக்கின்ற ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், ஏற்கனவே வீடு கட்டியிருக்கும் அயலவர்களுக்கு ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை என்று அவர்கள் எங்களிடம் கேள்வி கேட்கின்றனர்.

அவற்றை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளில் மக்கள் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.

சொத்தாசை பிடித்தவர்களும், வசதிபடைத்தவர்களுமே இந்த நிலங்களைப் பிடித்து வேலி அமைப்பதிலும், மதில் கட்டுவதிலும், வீடு கட்டுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போனால், அரசியல்வாதிகளிடமிருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அத்தோடு, தற்போது இருக்கின்ற ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், ஏற்கனவே வீடு கட்டியிருக்கும் அயலவர்களுக்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர்கள் எங்களிடம் கேள்வி கேட்கின்றனர். இங்கே தான் நாங்கள் சட்ட ரீதியான சவால்களையும் எதிர்நோக்குகின்றோம்.

இவர்கள் 25 வருடங்களுக்கு மேலாக குடியிருந்ததற்கான ஆதாரங்களை முன்வைக்கிறார்கள், அவர்கள் எங்களுக்கு எதிராக நீதிமன்றம் செல்கின்றார்கள். சட்ட ரீதியான சிக்கல்களையும் எதிர்நோக்கிய வண்ணம் நிர்வாகத்தை நடத்த வேண்டியிருக்கிறது. இருந்தும், பல் வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் 25 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறோம்.

பருவமழை காலத்தில் இந்தப் பிரதேசத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கு இந்த ஈரநில ஆக்கிரமிப்பே பிரதான காரணமாக இருக்கின்றது. பெரியாற்று முனைப் பிரதேசத்தில் அதிகமானோர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்குக் காரணம் பொதுமக்கள் அந்தப் பிரதேசத்தில் உள்ள கரையோரப் பகுதிகளில் குப்பை கூளங்களை கொட்டி வருவது தான். -என்றார். (ஐ)

# 50 சதவீதமான அரச அதிகாரிகள் மக்களின் குறைகளை கேட்கத் தயாரில்லை

செங்கலடி, பெப்.14
மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் 50 சதவீதமான அரச அதிகாரிகள் மக்களின் குறைகளைக் கேட்பதற்குத் தயாரில்லை. இவ்வாறு கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது. இங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்பதற்காக நேரத்துக்கு வருகை தருகிறோம். ஆனால், அதிகமான அதிகாரிகள் கூட்டங்களுக்கு வருகை தரவில்லை.

கூட்டத்துக்கு வருகை தாராதவர்கள் எவ்வாறு மக்களுக்காக வேலை செய்யப்போகிறார்கள். கூட்டத்தில் ஆராயப்படும் விடயங்கள் தொடர்பாக பதில் கூற முடியாத அதிகாரிகள், கூட்டங்களுக்கு வருகை தர வேண்டாம். இவ்வாறு பதிலளிக்காதவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது நாட்டில் தகவலறியும் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. சகல அதிகாரிகளும் கேட்கும் விடயங்களைத் தருவார்கள். இந்த உரிமையை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 27 திணைக்களங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட, போதிலும் 16 திணைக்களங்கள் சார்பில் எவரும் சமுகமளிக்கவில்லை. இது தொடர்பாக குறித்த திணைக்களங்களின் தலைவர், மாகாண மற்றும் மத்திய அமைச்சின் செயலாளருக்கும், ஜனாதிபதி, பிரதமர் செயலகத்துக்கும், மாவட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கும் அறிவிக்குமாறு பிரதேச செயலாளருக்கு அமீர் அலி உத்தரவிட்டார். (ஐ-ய-47)

# கடல் மண்ணை ஏற்றியவர் கைது

அம்பாறை,பெப்.14
அம்பாறை, நிந்தவூர் பிரதேசத்தில் கடல் மண்ணை, உழவு இயந்திரத்தில் ஏற்றிய குற்றச்சாட்டில், சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார் என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகநபர் கடல் மண்ணை ஏற்றுவதற்குப் பயன்படுத்திய உழவு இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## டிஜிற்றல் முறையிலான வைத்தியசாலைகள் திட்டத்துக்கு

# களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை தெரிவு




மட்டக்களப்பு,பெப்.14
அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் டிஜிற்றல் முறையிலான வைத்தியசாலைகள் திட்டத்துக்கு, மட்டக்களப்பு மாவட்டத்தில், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலத்திரனியல் அரசு எனும் திட்டத்தின் ஊடாக, வைத்தியசாலைகளை டிஜிற்றல் முறைக்கு மாற்றும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் 300 வைத்தியசாலைகள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக 45 வைத்தியசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், குறித்த முதற்கட்டத்தெரிவில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வைத்திய சாலையில் அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயப் படுத்தப்படவுள்ளதுடன், எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதற்கட்டமாக வெளி நோயாளர் பிரிவில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்குத் தற்போது கடதாசிச் சிட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் பிரகாரம் கடதாசிச் சிட்டைக்குப் பதிலாக, நோயாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படும். இந்த அடையாள அட்டை ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படும். இந்த அட்டையில் நோயாளியின் சொந்த தகவல், நோய் பற்றிய தகவல், மருந்து, மாத்திரை போன்ற அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்படும்.

நோயாளி ஒருவர் சிரமமின்றி மருத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், மருத்துவநடவடிக்கைகள் அனைத்தையும் இலகுவாகத் தங்குதடையின்றி முன்னெடுப்பதற்குத் இந்தத்திட்டம் துணைபுரியும்.

'இந்தத் திட்டத்தில் முதற் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது வைத்தியசாலை தேர்ந்தெடுக்கப்பட்டமை சந்தோசம் அளிக்கிறது' என்று வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஜி.சுகுணன் தெரிவித்தார். (ஐ)

முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, கருநாட்டுக்கேணி அ.த.க.பாடசாலை, கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை, ஒதியமலை அ.த.க.பாடசாலை, அலைகல்போட்டகுளம் தமிழ்க்கலவன் பாடசாலை, மாமடு பழம்பாசி அ.த.க.பாடசாலை, தண்டுவன் அ.த.க.பாடசாலை போன்ற பாடசாலைகளுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு காணப்படும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு க.யோகாநந்தனின் நிதிப்பங்களிப்புடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ம-10)



# பலக்குடியிருப்பு போராட்டத்துக்கு தனியார் பேருந்து துறையும் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 14

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் நடத்தி வரும் போராட்டத்துக்குத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபடும் மக்களை வடக்கு மாகாண சபை அமைச்சர்களான பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ரி.ரவிகரன் ஆகியோரும், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவகரன், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் சந்தித்தனர்.

தமக்கு ஒரு நிலையான தீர்வு கிடைக்கும்வரை தாம் பாடசாலைக்குச் செல்லப் போவதில்லை என்று அங்குள்ள மாணவர்கள் கூறியிருந்த நிலையில், பெற்றோரின் முடிவின் அடிப்படையில் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வார்களானால் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டும் என்றும், முல்லைத்தீவு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அதற்குரிய உதவிகளை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# புதர்கள் மண்டிக் காணப்படும் எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை

## துப்புரவாக்கி மக்கள் பாவனைக்கு விடவேண்டும் எனக் கோரிக்கை



தென்மராட்சி, பெப்.14

எழுதுமட்டுவாழ் தெற்கில் அமைக்கப்பட்ட சந்தை மக்கள் பாவனைக்கு விடப்படாது பற்றைகள் வளர்ந்த நிலையில் காணப்படுகின்றது. ஏ-9 வீதியில் உள்ள அந்தச் சந்தைப் பகுதியை துப்புரவு செய்து மக்கள் பாவனைக்கு விட வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

2011ஆம் ஆண்டு எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். தமது பிரதேசத்தில் சந்தை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மு.சந்திரகுமாரின் கோரிக்கையை அடுத்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நவீன முறையில் சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்டது. பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா அதைத் திறந்தார்.

வியாபாரிகள் வராததால் சந்தை தொடர்ந்து இயங்கவில்லை. தற்போது சந்தை அமைந்துள்ள பகுதி பற்றைக்காடாக மாறியுள்ளது.

பொதுச் சந்தைக்கு அருகே ஆயுள்வேத மருந்தகம், கடைத் தொகுதி என்பவை இயங்குகின்றன.

வருடா வருடம் சந்தையைக் குத்தகைக்குக் கொடுப்பதற்காக பிரதேச சபையால் கேள்வி கோரப்படுகின்ற போதும் குத்தகைக்கு எடுக்க எவரும் முன்வருகின்றார்களில்லை.- என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

பிரதேச சபையில் குறிப்பிட்ட அளவு சுகாதாரத் தொழிலாளர்களே உள்ளனர். அவர்களைக் கொடிகாமம் நகரப் பகுதி துப்புரவு மற்றும் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்துவதால் எழுதுமட்டுவாழ் சந்தை வளாகத்தில் உள்ள பற்றைகளைத் துப்புரவு செய்ய முடியவில்லை. கடந்த வருடம் சந்தை வளாகம் துப்புரவு செய்யப்பட்ட போதிலும் அண்மையில் பெய்த மழையால் மீண்டும் பற்றைகள் வளர்ந்துள்ளன. விரைவில் துப்புரவு செய்யப்படும்.

சந்தை அமைக்கப்பட்ட அடுத்த வருடம் குத்தகைக்கு விடப்பட்டது. அங்கு ஓரிரு வியாபாரிகள் மட்டும் கொடிகாமத்திலிருந்து பொருள்களை கொண்டு வந்து விற்பனை செய்தனர். அவர் கைவிட்டதால் குத்தகையாளர் சிறிது காலத்தில் குத்தகையை இடைநிறுத்து மாறு கோரினார்.

பின்னர் சபைத் தீர்மானப் பிரகாரம் கோழி இறைச்சி விற்பனைநிலையம் அமைக்கப்பட்டு அந்த வருடம் குத்தகைக்கு விடப்பட்டது. பின்னர் ஆண்டுதோறும் கேள்வி அறிவித்தலில் எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை குத்தகைக்கு விடப்படவுள்ளது என்று அறிவித்தல் வழங்கப்பட்டும் எவரும் குத்தகைக்கு எடுக்கவில்லை. அதனால் சந்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு விடப்படவில்லை. - என்றார். (ம-9)

# பரவிப்பாஞ்சான் மக்கள் காணிகள் படைகளுக்குத் தேவை

## பிரதேச செயலருக்கு இராணுவம் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 14

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் இராணுவம் நிலைகொண்டுள்ள 9 ஏக்கர் காணிகளை தொடர்ந்து இராணுவத்தினரின் பயன்பாட்டுக்கு வழங்க வேண்டும் என்று பிரதேச செயலரிடம் இராணுவத்தினர் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பரவிப்பாஞ்சான் கிராமத்தின் பெரும் பகுதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். மக்களின் நிரந்தர உறுதிக்காணிகள் பலவும் இராணுவத்தினரின் வசமுள்ளன. அவற்றை விடுவிக்க வேண்டும் என்று மக்கள் நீண்டகாலமாகப் பல போராட்டங்கள் நடத்துகின்றனர்.

போராட்டங்களை அடுத்து சில பிரதேசங்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டன. தற்போது 27 குடும்பங்களின் காணிகளும், பொதுக் கட்டடங்களும் உள்ளடங்கலாக 9 ஏக்கர் காணி இராணுவத்தின் வசமுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் , வங்கிக் கட்டடம் , புலிகள் சமாதானச் செயலகம் அமைந்திருந்த காணி என்பனவும் அதற்குள் அடங்குகின்றன.

மக்களின் குடியிருப்பாக இருந்த 27 குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 4.5 ஏக்கர் நிலத்தை விடுவிக்க வேண்டும் என்று மக்கள் போராட்டம் நடத்தியபோது அவை விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது 9 ஏக்கர் நிலமும் முழுமையாக படையினரின் பயன்பாட்டுக்குத் தேவையாகவுள்ளது என பிரதேச செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (ம-10)

# இலத்திரனியல் நூலகங்களை வடக்கில் உருவாக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 14

வடக்கு மாகாணத்தில் ஆறு நூலகங்களும், கிழக்கு மாகாணத்தில் 4 நூலகங்களுமாக 10 நூலகங்கள் இலத்திரனியல் மயப்படுத்தப்படவுள்ளன. இலங்கை முழுவதும் இவ்வாறு 40 நூலகங்கள் இலத்திரனியல் மயப்படுத்தப்படவுள்ளன.

உலக வங்கி மற்றும் ஆஸ்திரேலிய அரசு என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வேலைத் திட்டம், வடக்கு மாகா ணத்தில் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது என வேலைத் திட்டத்தின் இணைப்பாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த உதவி நூலகருமான எஸ்.கேதீஸ்வரன் தெரிவித் தார்.

வடக்கு மாகாண இணைப்பாளராக கேதீஸ்வரனும் கிழக்கு மாகாண இணைப் பாளராக கிழக்குப் பல்கலைக்கழக மூத்த உதவி நூலகர் எம்.ரவிக்குமாரும் செயற்படுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் கொக்குவில் பொது நூலகம், சாவகச்சேரி நகர சபை நூலகம், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை நூலகம், தலைமன்னார் பொது நூலகம், மாந்தை கிழக்குப் பொதுநூலகம், வவுனியா வடக்குப் பிரதேச சபை பொதுநூலகம் என்பவை குறித்த செயற்றிட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தில் நூலகங்கள் சமூகத்துக்கு வழங்கிய பயனுள்ள சேவைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

நூலகங்களை இலத்திரனியல் மயப்படுத்தும் வேலைத் திட்டத்தின் முதற்கட்டமாகக் குறித்த நூலகங்களிலுள்ள நூல் விவரங்களைக் கணினி மயப்படுத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி இந்த விவரங்கள் வலையமைப்புடன் இணைக்கப்படும். அதன் பின்னர் ஏனைய பணிகள் முன்னெடுக்கப்படும்.

வவுனியா நெடுங்கேணியில் எதிர் வரும் 15 ஆம் திகதி தெரிவு செய் யப்பட்ட குறித்த நூலகங்களின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இலங்கையிலேயே முதன் முறையாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டம் வாசகர்களின் தேடலை இலகுபடுத்தும் வகையிலும், வாசகர்களின் நூலகம் நோக்கிய வருகையை அதிகரிப்பதாகவும் அமையும் எனவும் கல்வியியலாளர்கள் தெரிவித்தனர். (ம-4)

# மதுபோதையில் சாரத்தியம்: சாரதிக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், பெப்.14

முச்சக்கர வண்டியை மது போதையில் செலுத்தியவருக்கு நீதிமன்று தண்டம் விதித்தது.

மதுபோதையில் முச்சக்கரவண்டியைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரின் வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் நீதவான் மன்றில் நடைபெற்றது. குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றில் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு 7ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், ஒரு வருட காலம் சாரதி அனுமதிப்பத்திரத்தை இடை நிறுத்துமாறும், 200 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப் பட்டது. (ம-ரி)

# முஸ்லிம் காங்கிரஸை பிளவுபடுத்த முடியாது

## கட்சியின் தலைவர் ஹக்கீம் உறுதி

கொழும்பு,பெப்.14

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கத்தைப் பிளவுபடுத்துவதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் .-இவ்வாறு காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின், 27ஆவது மாநாடு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பேரியக்கத்தைப் பல வீனப்படுத்த நினைக்கின்ற பல சக்திகள் வரிந்து கட்டிக் கொண்டு இருக்கின்றன. மிகுந்த அடக்கத்தோடும், திறந்த மனதோடும் எங்களின் உள் விவகாரங்களை முழுமையாக அலசுகின்ற, எந்த ஒளிவு மறைவும் இல்லாமல் பேசுகின்ற எதிர்நோக்குகின்ற சவால்களைக் கூட்டாகத் தீர்ப்பதற்கானதொரு முயற்சியில் இறங்குவதற்கு இந்தக் கட்சி தயாராகி வருகின்றது.

இன்று ஆட்சியிலே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளுக்கும் நிறைய சவால்கள் சூழ்ந்திருக்கின்றன. கட்சிகளுக்குள்ளே நிறையக் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடக்கும் ஒரு நிலவரம். நாளும் பொழுதும் அதை நாங்கள் பார்க்கின்றோம். எங்களு டைய கட்சிக்கு மட்டும் விதிவிலக்கான பிரச்சினைகள் அல்ல. ஆனால், எங்களுடைய கட்சிக்குள்ளே பூதாகரமாகப் பிரச்சினைகள் இருப்பதைப் போன்று, வெளியிலே காட்ட முயற்சிக்கின்ற சக்திகளுக்கு நாங்கள் தீனி போட வேண்டிய அவசியம் கிடையாது. எனவே, மிகத் திறந்த மனதோடு விடயங்களைப் பேச வேண்டிய அவசியம் இருக்கின்றது.

கட்சிக்குள்ளே பேச வேண்டிய விடயங்களை வெளியிலே பேசித் தாங்கள் தோண்டிய குழியில், தாங்களே விழுந்திருக்கின்ற நிலவரங்கள் ஒரு சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம். யாரையும் ஒதுக்கி வைக்க வேண்டும், தூர வைக்க வேண்டும், கட்சியிலிருந்து துரத்த வேண்டும் என்ற உணர்வோடு இந்தத் தலைமை எதையும் செய்யவில்லை.

ஆனால், சற்றுப் பொறுமை தேவை. இன்றிருக்கின்ற இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கு, எங்களைத் தயார்படுத்துவதற்கு சட்ட ரீதியிலான சில அதிகாரங்களை ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்குத் தலைமையை நீங்கள் பலப்படுத்த வேண்டும். இந்த வேண்டுகோளைத் தான் இன்றும் முன்வைக்கின்றேன்.

என்னைப் பொறுத்தமட்டில் தலைமைகள் வரலாம் போகலாம். ஆனால், இந்த இயக்கம் நேர்மையான தலைமைகளின் கைகளுக்கு மாற வேண்டும். நேர்மையாக அதற்கான தேவைகள் வருகின்ற போது, தாராளமாக அதைத் தட்டில் வைத்துத் தாரை வார்க்க நான் தயாராக இருக்கின்றேன்'- என்றார்.(ஐ)

# இந்திய அரசின் நிதியுதவியுடன்

# மலையகத்தில் 335 வீடுகள்

## நேற்று அடிக்கற்கள் நடப்பட்டன



நுவரெலியா,பெப்.14

இந்திய அரசின் நிதியுதவியுடன் மலையகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 4 ஆயிரம் தனி வீடமைப்பு வேலைத் திட்டத்துக்கமைவாக, 335 வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று காலை நுவரெலியா மாவட்டத்தில் பொகவந்தலாவ பொகவனா தோட்டத்தில் நடை பெற்றது.

மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 355 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிக்கற்கள் நடப்பட்டன.

மலையக மக்களின் 200 வருட தொடர் வீட்டு வாழ்க்கை முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், இந்தியாவில் இருந்து இறுதியாக வரவழைக்கப்பட்ட மலையக இந்திய வம்சாவளி மக்களுக்குமாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் இந்திய நிதி உதவியின் கீழ், இந்தப் புதிய வீடுகள் ஏழுபேர்ச்காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் அரிந்தம் பக்ஷி, இலங்கைக்கான கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் ராதா வெங்கட்ராமன், தேசிய சுகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், எம்.ராம், சரஸ்வதி சிவகுரு, சிங் பொன்னையா, மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் வீ.புத்திரசிகாமணி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டனர். (ஐ)

# விமலின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,பெப்.14

கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் விளக்கமறியல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விமல் வீரவன்ச பிணை கோரி தாக்கல் செய்திருந்த மனுவுக்கு எதிர்ப்புகள் இருக்குமாயின், அதனை அடுத்த வழக்கில் தெரிவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரச வாகனங்களைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டார். அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சொத்து விவரங்களை வழங்காத அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை

கொழும்பு,பெப்.14

சொத்து விவரங்களை வெளியிடாத அரசியல்வாதிகளுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கொழும்பு ஊடகமொன்றுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பொதுத் தேர்தலின் போது போட்டியிட்டு இதுவரையில் சொத்து விவரங்களை வெளிப்படுத்தாத 300 அரசியல்வாதிகள் தொடர்பிலான விவரங்கள் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் அரசியல்வாதியொருவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அடுத்த தேர்தல்களில் போட்டியிட முடியாது.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் பிரதேச சபைத் தலைவர்கள், முன்னாள் மாநகர மேயர்கள், முன்னாள் நகரசபைத் தலைவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் உள்ளடங்குகின்றனர். பட்டியலிடப்பட்ட 300 அரசியல்வாதிகளைத் தவிர்ந்த கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஏனையவர்கள் சொத்து விவரங்களை ஒப்படைத்துள்ளனர்.

இதன்படி குறித்த அரசியல்வாதிகள் 300 பேருக்கு எதிராக லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அரசியல் கட்சிகளின் அதிகாரிகளுக்கும் சொத்து விவரங்களை வெளிப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சொத்து விவரங்களை அறிவிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக சொத்து விவரங்களை வெளியிடத் தவறும் அரசியல் கட்சிகளின் அதிகாரிகள் தொடர்பிலான தகவல்களும் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.-என்றார். (ஐ)

# சு.கவைத் தோல்வியடையச் செய்ய மகிந்தவுக்கு இடமளிக்க முடியாது

கொழும்பு,பெப்.14

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, போரை முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பதற்காக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தேர்தலில் தோல்வியடையச் செய்ய அவருக்கு இடமளிக்க முடியாது. இன்று கட்சியில், இருவகைக் கருத்துக்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதனை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்காக, கட்சியைக் கூறுபோட இடமளிக்க முடியாது. -இவ்வாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்யின் கண்டி, குண்டசாலைத் தொகுதி அமைப்பாளர் சுனில் அமரதுங்கவினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறி.சு.கவின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா முன்வைத்த கட்சியின் கோட்பாடுகளுக்கு அமைவாக, ஓர் அரசை உருவாக்குவதே எமது இலக்கு. வரலாற்று ரீதியாக கடந்த காலத்தை மறந்து, தற்காலத்தையும் மறந்து எதிர்காலத்தை எம்மால் திட்டமிட முடியாது.

நாம் 1815 ஆம் ஆண்டு முதல், வெள்ளையர்களுக்கு அடிமையாக இருந்து வந்துள்ளோம். எமக்கென்று அல்லது இலங்கைக்கென்றே தனியான அரசியல் கலாசார அடையாளம் ஒன்று தேவை என எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா கருதினார். அந்தவகையில், அமைக்கப்பட்டது தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, போரை வெற்றிக்கொ்ண்ட காரணத்தால், கிராமப்புற மக்கள் அவருக்கு அன்பையும், ஆதரவையும் காட்டுகின்றனர். போரை வெற்றிக்கொண்டமைக்காக, மகிந்த ராஜபக்சவுக்கு, ஆதரவை வழங்காதிருக்க முடியாது. ஆனால், அதற்காக கட்சியை இரு கூறாக்க முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தோல்வியடையச் செய்ய முடியாது.

இதற்காகவே, நாம் மகிந்த ராஜபக்சவை அண்மையில் சந்தித்தோம். ஆனால், அந்த சந்திப்பில் சிறிலங்கா.சு.கவின் கொள்கை, கோட் பாடுகளை எடுத்துக்கூற வந்திருந்தவர்களை நினைக்கும் போது, எமக்குச் சிரிப்பாகத்தான் உள்ளது. அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்குமாகக் கட்சித்தாவிப் பதவிகளைத் தக்க வைத்து கொண்டிருந்தவர்கள் தான், அன்றைய சந்திப்பில் எமக்குக் கட்சியின் கொள்கை கோட்பாடுகளைக் கூற வந்திருந்தனர்.

அவர்கள் சுந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதே உண்மை. அன்றைய சந்திப்பில் இதுதான் நடந்தது. எனவே, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்கள் என்ற வகையில், கட்சியைத் தோல்வியடைய இடமளிக்க முடியாது.

தேர்தல் ஆணையாளரின் கூற்றுப்படி ஆடுகளம் தயாரானால் போட்டியை வைக்கலாம். ஆம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்ற கிரிக்கெட்டை விளையாடு வதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆடுகளம் தயாராக வேண்டும்.

மத்தியஸ்தர் ஆடுகளம் பொருத்தமில்லை என்று கூறினால், ஆடுகளத்தின் மீது, நான்குதரம் தண்ணீர் ஊற்றி அதனை மட்டப்படுத்தி மீண்டும் ஆடுகளத்தைச் சரிப்படுத்த வேண்டும். அதுவே தற்போது நடக்கிறது' -என்றார். (ஐ)

# 8 ஆண்டுகள் தடுப்பில் உள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள்

## இதுவரை நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை என சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.14

2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இருவர் இதுவரை எந்த நீதிமன்றத்திலும் முற்படுத்தப்படாது பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் பிடியில் உள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு போர் நிறைவுற்ற காலப்பகுதியில் கொலைக் குற்றச் சாட்டு என்னும்பெயரில் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இருவர் எந்த நீதிமன்றத்திலும் முற்படுத்தப்படவில்லை. இவர்கள் விடயத்தில் கடந்த 8 வருடங்களாக பொலிஸார் வேண்டுமென்றே சட்டத்தை மீறும் வகையில் செயற்படுகின்றனர். இதனால் கொலைக் குற்றச்சாட்டும் போலியானதா என்கின்ற சந்தேகமும் எழுகின்றது.

பயங்கரவாதத்தடுப்புப்பொலிஸாரின் விசாரணையே 8 ஆண்டுகளாக முடிவுறாத நிலையில், நீதிமன்ற விசாரணைகள் எத்தனை ஆண்டுகள் தொடரும்?. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கவேல் நிமலன் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கனகரத்தினத்தின் மகன் ஆதித்தன் ஆகிய இருவரையுமே தற் போது வரை பூசாவிலே தடுத்து வைத்திருக்கின்றனர்.

இத்தகைய நிலையில், இந்த அரசில் நாம் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும். இவர்களைத் தனிப் பிரிவில் வைத்திருக்காது குறைந்த பட்சம் சிறைக்காவது அனுப்பியிருக்க வேண்டும். அதைக்கூட இந்த அரசு செய்யவில்லை.- என்றார். (ற-101)

# புதிய உபாயம் மூலம் நகர்த்தப்படுகின்றது யாப்பு உருவாக்கம்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட யாப்பு தற்போது புதிய உபாயம் மூலம் நகர்த்தப்படுகின்றது. இதன் வெளிப்பாடே, கடந்த 12 தினங்களாக சுதந்திரக் கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் அது தொடர்பில் விமர்சனம் தெரிவிக்காதிருப்பது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட யாப்பின் வழி நடத்தல் குழுவின் அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தற்போது புதிய உபாயம் மூலம் நகர்த்தப்படுகின்றன.

இராணுவம், தனியார் காணிகளை விட்டு அரச காணிகளுக்குச் செல்ல வேண்டும் என்பது அரசின் நிலைப்பாடு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு இடங்களில் இடம்பெறும் மக்கள் போராட்டங்களில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மக்கள், பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற பேச்சுக்கு வந்தார்கள். தனியார்களுடைய காணிகளை விட்டு இராணுவம் அகல வேண்டும் என்ற அவர்களது கோரிக்கை நியாயமானது என்று பிரதமரும் ஏற்றுக்கொண்டார்.

மாற்றீடாக அரச காணி அண்மையில் எங்கு உள்ளது என மாவட்டச் செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டு அறிந்து இராணுவம் அந்த இடத்துக்கு செல்ல வேண்டும் என்ற பணிப்புரை அன்றையதினமே பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு விடுக்கப்பட்டது. இராணுவம் தனி யார் காணிகளை விட்டு அரச காணிகளுக்கு செல்ல வேண்டும் என்பது அரசின் நிலைப்பாடு. அது கைகூடும் என எதிர்பார்க்கிறோம்.

மக்களின் கவனவீர்ப்புப் போராட்டங்கள் மூலம் தான் இந்தப் பேச்சுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமை துர்ப்பாக்கியம். 2011 ஆம் ஆண்டில் இருந்து ஒத்திவைப்புப்பிரேரணையில் இந்த விடயம் தொடர்பில் எடுத்து கூறியுள்ளோம். பல தடவைக் கூறினோம். அரசு செவிசாய்க்கவில்லை இப்போது மக்களின் போராட்டத்தின் பின்னர் செவி சாய்த்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு மக்கள் பிரதமருடனான பேச்சுக்கு அன்று வரவில்லை. அவர்களும் வந்திருந்தால் தீர்வு கிடைத்திருக்கும். இது தொடர்பில் நாமும் அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம்.

நாம் கேப்பாபிலவு மக்களின் காணி மீட்புச் சம்பந்தமான போராட்டம் தொடர்பாக நாடாளுமன்றில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தோம். 243 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது என்று கூறியதை அமைச்சர்கள் ஏற்றார்கள். அந்த நிலங்கள் விடுவிக்கப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் விடுவிக்கப்படவுள்ள பகுதி இராணுவத்தினரிடம் உள்ள பகுதி. அதை மக்கள் தவறாக விமானப் படையினரின் பகுதியெனப் புரிந்து கொண்டார்கள் என்று தெரிவித்தனர்.

விமானப்படை வைத்திருக்கும் பகுதிகளையும் விடுவிப்பதற்காக பிரதமரிடம் பேச்சு நடத்த அண்மையில் மக்கள் அழைக்கப்பட்டார்கள். அன்று விமானப்படை அதிகாரிகளும் வந்திருந்தனர். மக்கள் பேச்சுக்கு வரவில்லை. வந்திருந்தால் ஒத்திவைப்புப் பிரேரணையில் அமைச்சர் றுவான் விஜயவர்தன தெரிவித்த கருத்து உண்மையானதா? இல்லையா என்ற தெளிவு வந்திருக்கும். அதன் அடிப்படையில் நாங்களும் தொடர்ச்சியாக அது குறித்து அரசுக்கு அழுத் தம் கொடுத்திருக்கலாம்.

இவ்வாறான சந்திப்புக்கள், பேச்சு என்பவற்றுக்கு அந்த மக்கள் நடத்திய போராட்டமே வழி ஏற்படுத்தியது.-என்றார். (ற-101)

# நமசிவாய ஆராதனையும் பிரார்த்தனை பவனியும்

யாழ்ப்பாணம், பெப். 14

வன்னியில் முதன்முறையாக ஓம் நமசிவாய சிவ ஆராதனையும் பிரார்த்தனைப் பவனியும் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பிரார்த்தனை வீணாகான குருபீடத்தால் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்ப்பாணம், சித்தன்கேணி குருமார் சந்நிதாச் சாரியார் சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் தெரிவித்தார்.

காலை 9 மணிக்கு கிளிநொச்சிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பிரார்த்தனைப் பவனி ஆரம்பமாகி கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலை வந்தடையும். வேத, திருமுறை பாராயணம், வீணா, வேணு, நாதஸ்வர, நிருத்த, சங்கீத பஜனை, உபசாரங்கள் நடைபெறும். உபசார சமர்ப்பணத்தின் போது அடியார்கள் தமது கைகளால் சிவலிங்கத்துக்கு திருமஞ்சன அபிசேகம் செய்ய முடியும் என்று அவர் தெரிவித்தார். (ற-10)

# யாழ். கலாசார மண்டப கட்டுமானத்தில் தடங்கல்

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு அருகில் இந்தியத் துணைத்தூதரகத்தின் அனுசரணையில் அமைக்கப்படும் கலாசார மண்டப கட்டுமானப் பணியில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரி விக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் கலாசார மண்டபம் ஆயிரத்து 300 மில்லியன் ரூபா நிதிச் செலவில் அமைக்கத்திட்டமிடப்பட்டது. அதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன. கட்டுமானப் பணிகள் இந்திய நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப்பட்டன. கடந்த செப்ரெம்பர் மாதம் அடிக்கல் நடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின.

கட்டுமானப் பணிகளுக்காக இந்தியாவில் இருந்து பெரும் இயந்திரங்கள் கொண்டு வரப்பட விருந்தன. அவற்றுக்கான இறக்குமதித் தீர்வை தொடர் பில் தற்போது சிக்கல் எழுந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றுக்குப் பெருமளவு தீர்வை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உள்ளூர் இயந்திரங்களைக் கொண்டு பணிகளை முன்னகர்த்த முயன்றபோதும், கணிக்கப்பட்ட தொகை யை விட அதிக செலவு ஏற்படும். ஒப்பந்தம் மேற் கொண்ட நிறுவனம் இத னால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாட்டு அரசுகளும் மேற்கொண்ட ஒப்பந்தத்தில் குறித்த பணிக்கான இயந்திரங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி தற்போது ஆராயப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

இந்தத் தடங்கல்களால் கலாசார மண்டபம் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ற-101)

# வெளி மாவட்ட மீனவர்களால் பாதிப்பு

கிளிநொச்சி, பெப்.14

பூநகரிக் கடலில் அயல் மாவட்ட மீனவர்கள் அத்து மீறுவதால் தொழில் பாதிக்கப்படுகின்றது என்று அந்தப் பிரதேச கடற் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

பூநகரி, பள்ளிக்குடா பகுதியில் அட்டை பிடிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீனவர்கள் அவற்றைப் பிடித்துச் செல்கின்றனர். நடுக்கடலில் வேறு மாவட்ட மீனவர்கள் டைனமைற் பயன்படுத்துகின்றனர். கடற்படையும் அதை அனுமதிக்கின்றது.

இது போன்ற செயற்பாடுகளால் எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. இவற்றைத் தடுத்து நிறுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-6)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் நாகலிங்கம் தவமணிநாயகம்

தோற்றம் 25.06.1928
மறைவு 15.01.2017

அன்பின் தெய்வமாய் ஆருயிர்
- கணவனாய்
அன்புநிறை அப்பாவாய் பாசமுள்ள
- பாட்டனாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
- எம்மை வழிப்படுத்தி
பதைபதைப்பு இன்றி பக்குவமாய்
இறைவனடி சேர்ந்தனையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்....

அன்னாரின் அந்தியேட்டிக்
கிரியைகள் இன்று (14.02.2017)
செவ்வாய்க்கிழமை காலை
கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும்
வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள்
16.02.2017 வியாழக்கிழமை
மு.ப.11.00 மணி யளவில்
எமது இல்லத்திலும் நடை பெறும்.

உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

உதயதாரகை,
கோணப்புலம் ஒழுங்கை,
மல்லாகம்.



# சொத்துக் குவிப்பு வழக்கு: இன்று தீர்ப்பு வெளியாகும்

சென்னை, பெப். 14

வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களைக் குவித்தனர் என, ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாரகன் ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று அறிவிக்கப்படும் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்களைக் குவித்தனர் எனத் தெரிவித்து முதலமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு 4 ஆண்டுசிறைத்தண்டனைவிதித்து கர்நாடக சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாயும், மற்றவர்களுக்கு 10 கோடி ரூபாயும் அபராதமாக விதித்தது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த கர்நாடக உயர்நீதிமன்றம், ஜெயலலிதா உள்ளிட்ட அனைவரையும்விடுதலை செய்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரின் விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் ஆதாரங்கள் என் பனமன்றில் ஒப்படைக்கப்பட்டன. வழக்கின்விசாரணைகளும்அனைத்துத் தரப்பு வாதங்களும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி நிறைவடைந்தது. எனினும் தீர்ப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. இன்னும் ஒரு வாரத்தில் தீர்ப்பு வழங்கப்படும் என்று உச்சநீதிமன்றம் கடந்த வாரம் அறிவித்தது. கடந்த வாரம் தீர்ப்பு வரவில்லை. இதனால் இன்று தீர்ப்பு வெளியாக அதிகள வான வாய்ப்புள்ளது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. சசிகலா தரப்பினரது வற்புறுத்தலின் அடிப்படையிலேயே தான் பதவி விலகினேன் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு குறிப்பிட்டார். புதிய ஆட்சியை அமைக்கும் முனைப்பில் சசிகலாவும், தனது ஆட்சியைத்தக்கவைக்கும் முனைப்பில் பன்னீர்செல்வமும் உள்ளனர். இருதரப்புக்கருத்துக்களையும் கேட்டறிந்து அது தொடர்பில் பரிசீலனை செய்து வருகிறார் ஆளுநர் வித்யாசாகர் ராவ். எனினும் அவர் இந்த விடயம் தொடர்பில் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. மன்றின் தீர்ப்பின் பின்னரே அவர் தனது நிலைப்பாட்டை வெளியிடுவார் என்பதும் சிலரது கணிப்பாக உள்ளது. இந்த நிலையில் இன்றைய நாள் மிகவும் பரபரப்பு வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது. (ம)

## வடகொரியாவின் நடவடிக்கைக்கு ஜப்பான் கடும் கண்டனம்

டோக்கியோ, பெப். 14


கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா கடந்த சனிக்கிழமை சோதித்தது. இந்த நடவடிக்கைக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்தது ஜப்பான்.

அமெரிக்காவும் - வடகொரியாவுக்கும் இடையில் ஏவுகணை விவகாரத்தில் முறுகல் நிலை தொடர்ந்துகொண்டே செல்கிறது. ஒபாமாவின் காலத்தில் அந்த நாடு ஏகப்பட்ட ஏவுகணைகளைச் சோதித்தது. ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் வடகொரியா சோதித்த முதல் ஏவுகணையாக இது அமைந்தது. அமெரிக்கா, தென்கொரியா ஆகியன தமது கண்டனத்தை ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில் ஜப்பானும் வடகொரியாவின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்தது.

ஐக்கிய நாடுகள்ன சபையின் விதிகளை மீறி வடகொரியா தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இதை



ஒருபோதும் ஏற்றுக்கொள்ள இயலாது. ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு விதிகளை ஜப்பான் நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஜப்பான் அதிபர் அபே தெரிவித்தார். (ம)



நியூசிலாந்தின் தென் தீவுப்பகுதியில் நூற்றுக்
கடந்த சில நாள்களாகவே இவ்வாறான சம்ப
தெரிவித்தனர். உயிருடன் கரையொதுங்கும் 
பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

## அல் பாப் நகருக்குள் அடிவைத்தது துருக்கி



பெய்ரூட், பெப். 14

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள சிரியாவின் அல் பாப் நகரை மீட்பதற்கு துருக்கிப் படைகள் களமிறங்கியுள்ளன என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரிய அரசு, தனக்கெதிரான கிளர்ச்சிக் குழு, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு என்று இருமுனைப் போரில் சிக்கித் தவித்தது. சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போ அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவிடமிருந்தது. இதை ரஷ்யாவின் உதவியுடன் அண்மையில் மீட்டது சிரியா.

தற்போது, சிரிய அரசு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் தீவிரம் காட்டி வருகிறது. சிரியாவுக்கு உதவியாக துருக்கியும் களத்தில் உள்ளது. அப் பாப் நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கோட்டைகளில் ஒன்றாக விளங்குகின்ற நிலையில், அதை மீட்பதற்காக நகருக்குள் நேற்றுமுன்தினம் துருக்கிப் படைகள் நுழைந்தன. தரைமூலமாகவும் வான்வெளித் தாக்குதல்களும் ஆரம்பித்து விட்டன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## சட்டமன்ற உறுப்பினர்களை நேற்றும் சந்தித்தார் சசிகலா

சென்னை, பெப். 14

அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள கூவத்தூர் நட்சத்திர விடுதிக்கு நேற்றுக்காலை குறித்த கட்சியில் பொதுச்செயலாளர் சசிகலா சென்றார்.

முதல்வராக ஓ.பி.எஸ். தொடரவேண்டுமாயின் சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். அதேபோல் ஓ.பி.எஸ்ஸை பதவிவிலக வைக்கசசிகலாபெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். இதனால்சட்டமன்றஉறுப்பினர்கள் அத்தனை பேரையும் சசிகலா நட்சத்திர அந்தஸ்துப்பெற்றகூவத்தூர் விடுதி ஒன்றில் தங்க வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினமும், கடந்த சனிக்கிழமையும் அவர் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடினார். இந்த நிலையில் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்றும் அவர் கூவத்தூர் நட்சத்திர விடுதிக்குச் சென்றார். அ.தி.மு. கழகத்தைப் பிரித்து ஆட்சிசெய்ய ஓ.பி.எஸ். சதி செய்கிறார் என சசிகலா தெரிவித்தார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்திய குண்டு மீட்பு

கிரேக்க நாட்டில் தெசாலோகினி என்ற இடத்தில், இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்தப்பட்டு வெடிக்காத நிலையில் இருந்த குண்டொன்று செயலிழக்கச் செய்யப்பட்டது.

250 கிலோ வெடி மருந்து கொள்ளளவு கொண்ட குறித்த குண்டு, கடந்த வாரம் இனங்காணப்பட்டது. இதையடுத்து தெசா லோகினியில் வசித்துவந்தபல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். பாதுகாப்புநடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் குண்டுசெயலிழக்கச்செய்யப்பட்டது. (ம)

## விடுதியில் இருந்து விடுவிக்கக்கோரி ச

சென்னை, பெப். 14

கூவத்தூர் நட்சத்திர விடுதியில் இருந்து தம்மை விடுவிக்கக்கோரி 40 சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுச் செயலாளர் சசிகலாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர் என்று சில இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

கடந்த செல்வாய்க்கிழமை இரவு அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராக பல விமர்சனங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். தான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினார் என்றும் அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சசிகலா ஓ.பி.எஸ். இடையே தற்போது பெரும் வார்த்தை மோதல்கள் இடம்பெற்று

முதல்வராக ஓ.பி.எஸ். தெ
சட்டமன்ற உறுப்பினர்களில்
நிரூபிக்க வேண்டும். அதே
பதவிவிலக வைக்க சசிக
யை நிரூபிக்க வேண்டும்.
உறுப்பினர்கள் அத்தனை

ook : UTHAYAN.PRINT
r : UTHAYANPRINT





...ுக்கணக்கான திமிங்கிலங்கள் இறந்த நிலையிலும் சில உயிருடனும் கரையொதுங்கி வருகின்றன. ...சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதுவரை 300 திமிங்கிலங்கள் சாவடைந்தன என்று அதிகாரிகள் ...ும் திமிங்கிலங்களைக் காப்பதற்கு விலங்குநல ஆர்வலர்கள் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர் என்று (ம)

# 15 பேர் எரித்துக் கொலை ஐ.எஸ். அமைப்பு அட்டூழியம்

பக்தாத், பெப். 14

ஈராக்கின் கிர்குக் நகரில் 15 பொதுமக்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர். அவர்களில் குழந்தைகளும் அடங்குவர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கிர்குக் நகரின் அல் ஜரா என்ற கிராமம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஜாரவில் இருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவில் சலாகுதீன் என்ற கிராமம் உள்ளது. இந்தக் கிராமம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்குத் தெரியாமல் கிர்குக் கிராமத்தில் இருந்து சலாகுதீனுக்கு பல மக்கள் அவ்வப்போது செல்கிறார்கள். அவ்வாறு சென்ற 15 பேர் கொண்ட குழு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் பிடிபட்டதை அடுத்து அவர்கள் 15 பேரையும் எரித்துக் கொன்றனர். எரித்துக் கொல்லப்பட்ட 15 பேரில், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குகின்றனர் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)




# பொலிஸாரின் பணிப்புறக்கணிப்பால் பிரேசிலில் குற்றங்கள் அதிகரிப்பு

றியோ டி ஜெனிரோ, பெப். 14

பிரேசிலில் பொலிஸார் கடந்த ஒரு வாரமாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் நிலையில், எஸ்பிரிட்டோ சான்போ நகரில் மட்டும் இந்தக் காலப் பகுதியில் 100 கொலைச் சம்பவங்கள் பதிவாகின என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பள உயர்வைக் கேட்டே, பொலிஸார் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் புறக்கணிப்பைத் தமக்குச் சாதகமாக ஆயுதக் குழுக்கள் பயன்படுத்த ஆரம்பித் தன. இதனையடுத்து கிட்டத்தட்ட ஆயிரத்து 500 இராணுவச் சிப் பாய்கள் களமிறக்கப்பட்டு நிலமை ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் ஒலிம்பிக் மற்றும் பரா ஒலிம்பிக் ஆகிய தொடர்கள் நடைபெற்றன. இந்தத் தொடர்களின் பொதும் பொலிஸார் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். ஒலிம்பிக் தொடரை பார்க்க வரவேண்டாம். இங்கே உங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி விமான நிலையங்களுக்கு முன்பாகவும் ஏனைய இடங்களிலும் அவர்கள் போராட்டங்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)




# சுரங்க விபத்தில் 9 பேர் சாவு

யாங்கூன், பெப். 14

மியன்மாரின் வடக்குப் பகுதியில் உள்ள கச்சின் என்ற இடத்தில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

மரகதச் சுரங்கம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது. சுரங்கத்தைத் தோண்டிச் செல்லும் போது குவிக்கப்படும் மண் மீண்டும் சரிந்து சுரங்கத்துக்குள் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது விழுந்ததை அடுத்தே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த 9 பேரைத் தவிர இன்னும் சிலர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# சுவர்கள் இடிக்கப்பட வேண்டியவையே; ட்ரம்புக்கு எதிராக மெக்சிக்கோ மக்கள்


வொஷிங்டன், பெப். 14

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக மெக்சிக்கோவில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவின் அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்றுள்ளார். தனது தேர்தல் பரப்புரைகளில் அவர் அயல் நாடான மெக்சிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்பப்படும் என்பதை வலியுறுத்தி வந்தார். தற்போது அதை நடைமுறைப்படுத்தும் பணிகளிலும் துரிதமாக ஈடுபட்டு வருகிறார். எல்லையின் சில இடங்களில் தற்காலிக சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த நிலையில் ட்ரம்பின் நடவடிக்கைகளைக் கண்டித்து மெக்சிக்கோவின் மெக்சிக்கோ சிட்டியில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் ஒன்றுதிரண்டு நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நாடுகளுக்கு இடையே சுவர்கள் இடிக்கப்பட்டு பாலங்கள் அமைக்கப்பட வேண்டுமே தவிர சுவர்கள் அமைக்கப்படுதல் பிற்போக்கானது என்று ஆர்ப்பாட்டங்காரர்கள் வலியுறுத்தினர்.

முன்னதாக, இதே கருத்தை பாப்பரசரும் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)




# ...சட்டமன்ற உறுப்பினர்கள் போர்க்கொடி

...று வருகின்றன.
...தொடரவேண்டுமாயின்
...ளில் பெரும்பான்மையை
...தேபோல் ஓ.பி.எஸ்ஸை
...சிகலா பெரும்பான்மை
...ும். இதனால் சட்டமன்ற
...னைபேரையும் சசிகலா

நட்சத்திர அந்தஸ்துப்பெற்ற கூவத்தூர் விடுதியில் தங்கவைத்துள்ளார்.

கடந்த 6 நாள்களாக சட்டமன்ற உறுப்பினர்களில் எவரும் வெளியில் செல்ல முடியாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள், தமது குடும்ப உறுப்பினர்களைப் பார்க்வோ அல்லது அவர்களுடன் அலைபேசியில் உரையாடுவதற்கோ அனுமதிக்கப்படவில்லை. இதனால் 40 சட்டமன்ற உறுப்பினர்கள் சசிகலாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். தம்மை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர் என்று இந்திய ஊடகங்கள் சில குறிப்பிட்டன. (ம)

# உள்நாட்டு வைத்திய முறைமையை மேம்படுத்த நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கருத்துரைப்பு

வணிகம்

"இலங்கையில் உற்பத்திச் செய்யப்படும் ஆயுள்வேத மருந்துகளுக்கு வெளிநாடுகளில் சிறந்த வரவேற்பு உள்ளது. அமெரிக்காவில் மருந்தொன்றுக்குரித்தான அனுமதி வாங்குவது என்பது மிகவும் கடினம். இந்த ஆயுள்வேத முறைமையின் கீழ் தயாரிக்கப்பட்டதான பிராணஜீவ மருந்து அந்த அனுமதியைப் பெற்றுள்ளது."



"செத்சுவ ஆயுள்வேத வைத்தியசாலை தயாரிக்கும் செத்சுவ பிராணஜீவ மருந்தானது, உலகின் பல நாடுகளில் சந்தைப் படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் ஆர்ப்பிக்கோ மற்றும் பூட்சிட்டி விற்பனை நிலையங்களில் இவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

### பயனுறுதி

இருதய நோய், புற்றுநோய் என்பவற்றை தடுப்பதுடன் இயற்கை நோய் எதிர்ப்புச் சக்தியை விருத்தியாக்குகின்றது. உடல் பருமனை தடுத்தல், எலும்பு மற்றும் மூட்டு நோய்கள், தொய்வு, ஜலதோசம், கொலஸ்ரோல், நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சிறுநீரக நோய்கள் உள்ளிட்டவற்றுக்கு சிறந்த நிவாரணியாக இது காணப்படுகின்றது.

உள்நாட்டு வைத்திய முறைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதான கருத்துரைப்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் வெளிப்படுத் தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி மேற்குலக நாடுகளால் அடைய முடியாத வைத்திய இலக்குகளை இலங்கையின் ஆயுள்வேத முறைமையால் எட்டுவதற்கு அரசு எதிர்ப்பார்த்துள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கையில் ஆயுள்வேத வைத்திய முறைமையின் கீழாக தயாரிக்கப்பட்ட மருந்தான பிராணஜீவ அறிமுக நிகழ்வில் தலைமை அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்ட விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இயற்கை மூலப்பொருள்களைக் கொண்டு உரிய பதப்படுத்தலுடன்-சிறந்த கண்காணிப்பின் கீழ் தயாரிக்கப்படும் இந்த மருந்தானது, இலங்கையில் பாரம்பரிய ஆயுள்வேத மருத்துவ முறைமையின் கீழான மற்றுமொரு மகத்துவம் என்பது குறித்து நோக்கத்தக்கது.

அதில் மேலும் இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

"ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே இலங்கைக்கு மேலத்தேய வைத்திய முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. எமது உள்நாட்டு வைத்திய முறையில் பல்வேறு சிறப்புகள் இருந்தாலும், அவை இன்றைய கால கட்டத்திலே மறைக்கப்பட்டும் நடைமுறையில் இருந்து குறைந்தளவிலான பாவனையிலேயும் உள்ளன. ஆயுள்வேத மருத்துவ முறைமைகளை அறிந்தவர்கள் அது தொடர்பில் மற்றவர்களுக்குச் சொல்வதில்லை. அந்த விடயங்கள் பரம்பரை வழியாகவே செல்கின்றது.

அனைத்து வைத்திய முறைமைகளையும் தெரிந்து கொண்டவர் உயிரிழந்துபோனதும் அவருடனேயே அந்த வைத்திய முறைமையும் அழிந்துவிடுகின்றது.

இவை தொடர்பிலான தகவலளிப்புகள் புத்தகங்களில் இருந்தாலும் அவையும் முழுமையான முறையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காரணப்படுகின்றது.

ஆனால், மேற்குலகநாடுகளில் இவ்வாறான நிலைமைகள் இல்லை. அவர்கள் எதையாவது புதிதாக கண்டுபிடிக்கும்போது அதனை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துகின்றனர். குறித்த கண்டுபிடிப்புக்கான உரிமையைப்பெற்றுக்கொண்டு மற்றவர்களின் பயன்பாட்டுக்கு அதனை வழங்குகின்றனர்.

கொரியாவை எடுத்துக்கொண்டால், அங்கு 85 சதவீதம் உள்நாட்டு வைத்திய முறையே பயன்படுத்தப்படுவதுடன் அங்குள்ளவர்கள் ஆரோக்கியமாக உள்ளனர். இலங்கையிலும் உள்நாட்டு வைத்திய முறையின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்"-என்றார்.

# இ - வணிக செயற்பாடுகளை முன்னெடுக்கும் 'சிம்பிளெக்ஸ்'

வீட்டு வாசலுக்கே பொருள்களைக் கொண்டு வந்து விநியோகிக்கும் இ - வணிக சேவை வழங்குநரான 'சிம்பிளெக்ஸ் விநியோகம்' தனது செயற்பாடுகளை கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் நாடு முழுமைக்குமாக விரிவாக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி மிகவும் குறுகிய காலப்பகுதியில் வாடிக்கையாளர்களின் பொருட்களை நாட்டின் பின்தங்கிய பகுதிகளுக்கும் துரிதமாகக் கொண்டு சென்று விநியோகிக்கும் திறனை சிம்பிளெக்ஸ் விநியோகம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முக்கியமாக சிம்பிளெக்ஸ் விநியோகச் செயற்பாடுகளுக்கு சிங்கப்பூர் மற்றும் இலங்கையை தளமாகக் கொண்ட உள்நாட்டு தொழில்நுட்பம்சார் வியாபாரங்களில் முதலீடுகளை மேற்கொள்ளும் வென்ச்சர் முதலீட்டு நிறுவனமான பி.ஓ.வி முதலீடு குறிப்பிடத்தக்களவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இது குறித்து கருத்துரைத்துள்ள டறஸ் சிறிலங்காவின் பொருள் களஞ்சியக் கையாளல் பிரிவின் தலைமை அதிகாரி தர்ஷிக அத்தநாயக்க,

"சிம்பிளெக்ஸ் விநியோகம் என்பது டறஸ் இன் பெறுமதி வாய்ந்த பங்காளராக கடந்த இரு ஆண்டு காலமாக செயலாற்றி வந்துள்ளது. இதனூடாக சிறந்த சேவை மற்றும் விநியோகம் போன்றன மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது முதலாக சிறப்பான வளர்ச்சியை இவை பதிவு செய்துள்ளதுடன் மறுநாள் விநியோக செயற்பாடுகளை இணையவழி கண்காணிப்புசேவைகளுடன்வழங்கிவருகிறது. நிறுவனத்தினால் தொடர்ச்சியான செயன் முறை மேம்படுத்தல்கள் பின்பற்றப்படுகின்றன. அத்துடன் உயர் வாடிக்கையாளர் அனுபவ நியமங்களை பேண பங்களிப்பு வழங்குகிறது" - என்றார்.




# ஒளியைப் பயன்படுத்தி அச்சிடும் தொழில்நுட்பம் அறிமுகம்

## கலிபோர்னிய விஞ்ஞானிகள் கண்டறிவு

நுட்பம்


தற்போது நடைமுறையில் உள்ளதான அச்சிடல் தொழில்நுட்பத்தில் காணப்படும் அதிக செலவினத் தன்மைகளைக் கருத்தில் கொண்டு, ஒளியைப் பயன்படுத்தி அச்சிடும் தொழில்நுட்பத்தை கலிபோர்னிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி இந்தப் புதிய தொழில்நுட்பமானது செலவைக் குறைப்பதுடன் மிக எளிமையானதாக விளங்குகிறது. இதற்காக சிறப்பான அச்சிடல் தாள் ஒன்று பயன்படுத்தப்படுகிறது. அந்த தாளில் வண்ணத்துக்காக பிரஸ்ஷியன் நீலம் உபயோகப்படுத்தப்படுகிறது.

பிரஸ்ஷியன் நீலம் மற்றும் டைட்டேனியம் டை ஒக்சைட் என்பதான வேதிக் கலவைகள் மீது எலக்ட்ரோன்களை செலுத்தும்போது அச்சிடல் தாளில் உள்ள எழுத்துக்கள் வெளித்தோன்றுவதுடன், சிறந்த பிரதிபலிப்பை வெளிப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது.

குறிப்பாக தாளில் உள்ள எழுத்துக்கள் நீல வடிவில் அச்சாவதுடன், எழுத்துக்கள் இல்லாத பிற இடங்கள் அத்தனையும் வெள்ளை நிறமாக மாறுகிறது. இதன் வெப்பநிலையை 120 பாகை செல்சியஸ் வரை மாற்றும்போது வெவ்வேறு வண்ணங்களில் எழுத்துக்கள் அச்சிடப்படுவதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் எழுத்துக்களின் நிறத்துக்காகவே பிரஸ்ஷியன் நீலம் மற்றும் டைட்டேனியம் டைஒக்சைட் பயன்படுத்தப்படுவதுடன், தாளில் அச்சிடப்படும் விடயங்கள் ஒரு வார காலப்பகுதிக்கு அழியாமல் இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அதன்பின்பாக அழிந்துவிடுகிறது. ஆனாலும், அந்தத் தாளை மீண்டும் பயன்படுத்த முடிவதாகவும், இந்த நவீன தொழில்நுட்பம் மூலமான அச்சடித்தல் செயன்முறையிலே பயன்படுத்தப்படுவதான மை,தாள், மற்றும் மின்சாரம் என்பன மீதப்படுத்தப்படுவதாகவும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.





# காதல் அன்றும் இன்றும்

எஸ்.மல்லிகா

பிரபஞ்சப் பூச்செடியில் காலத்துக்கும் சிரிக்கும் அபூர்வ மலர்தான் காதல். மனுக்குலத்தின் இடையறா இயக்கத்துக்கு உந்து சக்தி அளிக்கும் மூன்றெழுத்து மந்திரம் காதல். அனைத்து உயிர்க்கும் இன்பத்தை இறைக்கும் அன்புச் சுரங்கம் காதல். இந்தக் காதலைப் பழந்தமிழ் இலக்கியம் போற்றியது. புவியெனும் ஏணியில் ஏற்றியது. அன்று மகிமை பெற்ற இந்தக் காதல், இன்று பெருமை இழந்துள்ளது.

### காதல் உள்ளம்

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்ற கால் மாக்ஸின் தத்துவ வரிகளுக்கேற்ப, காதலிலும் நுழைந்தது மாற்றம். மனித மனங்களிலும் புகுந்தது மாற்றம். இயந்திரங்களுக்கு அடிமையான மனிதன், இதயத்தில் இயல்பாய் ஊற்றெடுக்கும் காதலை அனுபவிக்க மறந்தான். காசேதான் அனைத்தும் என்று அலைந்தான். போலிக் காதலர்கள் பெருகினர். உண்மைக் காதலர்கள் கருகினர். ஆனால், அன்றைய காதல் அவ்வாறில்லை.

### எல்லா உயிர்க்கும் இன்பம் அளிப்பது

தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும் (தொல்காப்பியம்) என்கிறார் தொல்காப்பியர். அதாவது, எல்லா உயிர்க்கும் இன்பம் அளிப்பது காதல் என்கிறார். இந்த உயரிய காதல் இருபாலார் மனங்களிலும் மலரும் தருணம், உணர்ச்சிகள் பெருக்கெடுத்து இடம்மாறிப் பாயும். காமத் தீயினால் மேனியது காயும். இருதயம் அடிக்கடி துடித்தபடி இருக்கும். அவர்கள் நேரில் சந்திக்கையில்,

### அண் நோக்கும்கால் நிலம்நோக்கும் பெண்

தான்நோக்கி மெல்ல நகும் (குறள் ) என்கிறார் வள்ளுவர். அதாவது, ஆண்மகன் பெண்ணை நோக்குகின்றபோது, பெண்ணோ நிலத்தைப் பார்ப்பாள். அவளை அவன் நோக்காதபோது, அவனைப் பார்த்துப் புன்னகைத்து மகிழ்வாள் என்கிறார். பெண்ணுக்குள் இயல்பாகக் குடிகொண்டிருக்கும் நாணம்தான் அவளை இப்படித் தலைகுனிய வைக்கிறது. இதனைக் கண்ணதாசன், முறையுடன் மணந்த கணவன் முன்னாலே பரம்பரை நாணம் தோன்றுமோ? என்று தனது நாணமோ... இன்னும் நாணமோ... என்ற பாடல் வரிகளில் சுட்டியுள்ளார். கணவன் முன்னும் பெண்கள் நாணம் கொள்ளும் அளவுக்கு அவளை வளர்த்துவிட்டது தமிழ்ப் பண்பாடு. இன்று அது படுகிறது பெரும்பாடு.

### மனப் பொருத்தம்

காதலுக்கு மிக அவசியம்- மனப் பொருத்தம். ஆனால், இன்று அது பணப் பொருத்தத்தில்தான் இணைகிறது. இரு மனங்கள் இணைவதற்குப் பதில், இரு குடும்பங்கள் இணையும் அளவுக்கு இருக்கிறது. அன்று மனப் பொருத்தமே முதன்மை வகித்தது காதலில். இதனை,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலதானையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை யின்றே" (தொல்காப்பியம். நூ. 90) என்று அழகாகக் கூறுகிறார் தொல்காப்பியர்.

அதாவது, ஒத்த தன்மையுடைய (மனதால் ஒத்திருத்தல்) ஆணும் பெண்ணும் எதிர்ப்படுவர். அவர்கள் உள்ளக் கிளர்ச்சியும் தேடல் வயப்பட்ட எண்ணமும் ஒன்று கூடுகிறது. அந்நிகழ்வு புதிய ஆக்கத்தை உருவாக்கும். அவர்கள் ஐயுறுவர். குறிப்பாக, ஆண், பெண்ணைக்கண்டு மயங்குகின்றான். அவள் பெண் தானோ? என ஐயுறுகின்றான். பின்னர் அவள் மானுட மகளே எனத் தெளிகின்றான். (இருவருக்கும் இயற்கையாய்ப் புணர்ச்சி- காதல் ஏற்படுகிறது.) அந்த வேளையில் அவர்களுடைய வார்த்தைகள் மௌனிக்க, கண்கள் பேசுகின்றன. இதனை,

"கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின்
வாய்ச்சொற்கள்"
என்ன பயனும் இல (குறள். 1100) என்கிறார் வள்ளுவர். காதலுக்குரிய இருவரும் ஒருவர் கண்ணோடு மற்றவர் கண்கள் பார்வையால் ஒத்துப்போக, வாயால் பேசும் சொற்களுக்குப் பயனில்லாமல் போகும் என்பது போல, இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்கின்றனர். இன்றைய காதல் இவ்வாறு இல்லை. இதயத்துடன் பேசும் நேரத்தைவிட, அது இயந்திரத்துடன்தான் அதிகம் பேசுகின்றது. முகநூல் முதல் வாட்ஸ்அப் வரை கொடிகட்டிப் பறக்கிறது. ஈற்றில், கல்லறையில் துயில்கிறது. ஆனால், பழந்தமிழ்க காதல் காலத்துக்கும் வாழ்கிறது. அந்தக் காதலுக்கெல்லாம் முத்தாரமாய் அமைந்த பாடல் இதோ-

"யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல"
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே
(குறுந்தொகை. 40)

ஆண்- பெண் அன்புடை நெஞ்சமாகி செம்புலத்தினில் விழும் நீராய் ஒன்றுடன் ஒன்று கலந்து நிற்க, இயற்கையான புணர்ச்சி (காதல்) நிலை தோன்றுகின்றது. ஆணின் குறிப்பைப் பெண் ஏற்கின்றாள். ஆண்மகன் அவளைத் தன்வயப்படுத்த முயலுகின்றான். கண்ணால் கண்ட பின்னர் எல்லையில்லாத ஈர்ப்பு உருவாகின்றது. காதல் சிறகை காற்றில் விரித்து, அவர்கள் வான வீதியில் பறந்தனர்.

"தோழியைக் கெஞ்சுதலை விட்டு தலைவியின் காதல் வேட்கையைப் புரிந்து கொண்டு தலைவியைத் தழுவிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படத் தழுவிக்கொள் கின்றான். எல்லாம் அறிந்த தோழி ஐயப்பட்டுத் தலைவியைச் சந்திப்பதை மறுக்கும் போதெல்லாம் தன் பெருமையைக் கூறி வேண்டுகின்றான். காதல் நிகழாவிடின், மடலேறுவேன் என எச்சரிக்கின்றான். இவை யாவும் காதலில் ஆண் மகனுக்கு நிகழும் செயல் களாம்."

### காதல் மயக்கம்

காதல் மேலீட்டில் இருவரும் ஒருவரை ஒருவர் நினைத்து உணவு உண்ணாமலும் மனம் கலங்கியும் நிற்க, உடல் மெலிவு ஏற்படுகிறது. உடல் மெலிவு கடந்து வெட்க நிலை உண்டாகிறது. புற உலகில் பார்ப்பது எல்லாம் தம் காதலரே என எண்ணுகின்றனர். மோகத்தால் மயங்கி இனி வாழ்தல் அரிது என்ற முடிவுக்கு வருகின்றனர்.

இந்நிலையில், ஆண் மகன் பெண் மகளைக் காண்கிறான். தன்னை முன்னிலைப்படுத்தித் தம் சொல்லை அவள் கேட்குமாறும் அவளின் அழகு, பண்பு முதலியவற்றைப் புகழ்ந்து கூறியும் மகிழ்விக்கிறான். தம் காதல் உணர்வால் ஏற்பட்ட மெலிவை இரங்கிக் கூறித் தலைவி மீதான காதலை உறுதியுடன் எடுத்துரைக்கின்றான். இவற்றை இயற்கைப் புணர்ச்சி எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

மேலும், தலைவியை அடிக்கடி கண்டு மகிழ்கின்றான் தலைவன். அவளைப் பிரிகின்ற போது கலங்குகிறான். நிலையான இல்லற வாழ்வை நினைத்து, அடுத்து நிகழ வேண்டியதையும் உணர்ந்து பெண்ணிடம் உரைக்கின்றான். அவன் நண்பன் (பாங்கன்) அவனிடம் அவன் செயலைக் குற்றமாக எண்ண, அதனைக் களைந்து தம் காதலை விளக்குகின்றான். காதலியோடு நெருக்கமுடைய அவள் தோழியைக் கண்டு தலைவியை அடைய உதவுமாறு இரங்கி வலியுறுத்துகின்றான். தினைப்புனத்திலோ அல்லது வேற்றிடத்திலோ தம் காதலியைக் காணும்போது, உன் ஊர் எது? உன் பேர் என்ன? என மென்மையான வினாக்களைத் தொடுக்கின்றான். தலைவி மீதுள்ள குறையைக் கூறி தோழி உண்மையை அறியும்படி கூறுகின்றான். திரும்பத் திரும்பக் கெஞ்சியே நிற்கின்றான். தோழி அலைக்கழிக்கின்ற போதெல்லாம் இரங்கி நிற்கின்றான்.

தோழியைக் கெஞ்சுதலை விட்டு தலைவியின் காதல் வேட்கையைப் புரிந்துகொண்டு தலைவியைத் தழுவிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படத் தழுவிக்கொள்கின்றான். எல்லாம் அறிந்த தோழி ஐயப்பட்டுத் தலைவியைச் சந்திப்பதை மறுக்கும் போதெல்லாம் தன் பெருமையைக் கூறி வேண்டுகின்றான். காதல் நிகழாவிடின், மடலேறுவேன் என எச்சரிக்கின்றான். இவையாவும் காதலில் ஆண்மகனுக்கு நிகழும் செயல்களாம். முன்னோர் காட்டிய நெறிப்படி,

"காமத்திணையில் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்தினம் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள் வயினான"
(தொல்காப்பியம். நூ. 106)

நாணும் மடனும் பெண்மைக்குரியதால், குறிப்பினாலும் தம் வேட்கையை வெளிப்படுத்துவாள் பெண். இது பெண்ணின் பண்பாக அமையும் பெண்மகள் காதலனை மறைந்து நின்று பார்க்கின்றாள். குறிப்பாக, தலைவன் தன்னைக் காணுமாறு நிற்கின்றாள். நிரம்பிய காதல் வேட்கை மிகுதியால் காதலன் கூறிய சொல் கேட்டு எதிர்மொழி கூறாமல் நிற்கின்றாள். காதலன் காதல் வேட்கையை அறிந்து காதலியைக் கெஞ்ச உடன்படாமல் மறுத்து நிற்கின்றாள். பின்னர் தலைவன் சொல்லை ஏற்கின்றாள்.

(23 ஆம் பக்கம் பார்க்க...)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தடுப்பு நடவடிக்கை என்ன?

உயிர் கொல்லி நோயான பன்றிக் காய்ச்சல் என்று சொல்லப்படும் எச் 1 என் 1 இன்புளுவென்சா தொற்று வடக்கில் ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் 3 சிறுவர்கள் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனினும் இதுவரையில் இந்த நோயிலிருந்து மக்கள் தம்மைக் காத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் எவையும் கொழும்பு அரசாலோ, அல்லது வடக்கு அரசாலோ வெளியிடப்படவில்லை.

நேற்றுவரையில் மேலும் 4 பேருக்கு இந்த நோய் தொற்றியிருக்கிறது என்று அஞ்சப்படுகிறது. அவர்களில் ஒருவருக்கு நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்டும் இருக்கிறது. கடந்த சில மாதங்களாகவே எச் 1 என் 1 வகை வைரஸால் இலங்கையில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்டியில் இந்த எச் 1 என் 1 வைரஸால் பாதிக்கப்பட்ட பலர் கண்டறியப்பட்டனர். நோய் வேகமாகப் பரவியதை அடுத்து தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன.

தற்போது வடக்கில் எச் 1 என் 1 நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கிறது. பறவைகள் வலசை வரும் காலப்பகுதி என்பதால், வடக்கில் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று தற்போது கருத்துத் தெரிவிக்கும் வடக்கு அரசின் சுகாதாரத்துறை அமைச்சரும் அவரது துறையினரும், அது தொடர்பான விழிப்புணர்வையோ தடுப்பு முறைகளையோ ஏற்படுத்தியிருக்கவில்லை. வருமுன் காப்பதே சிறப்பு என்பது சுகாதாரத்துறையின் தாரக மந்திரமாக இருந்தாலும்கூட, அதனைச் செயற்படுத்தவதில் அவர்கள் காட்டியிருக்கும் இந்த மந்த நிலை கண்டனத்திற்குரியது.

போதாததற்கு தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர்கூட விழிப்புணர்வு நடவடிக்கைகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை. மாறாக, இது பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு கடும் துன்பப்பட வேண்டிய நிலையே காணப்படுகின்றது. மக்களைத் தேவையற்று பயப்பீதிக்கு உள்ளாக்கக்கூடாது என்பதற்காகவே தகவல்கள் குறித்த இரகசியம் பேணப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால், சரியான தகவல்கள் மக்களைச் சென்றடையாமல் மறைப்பதே பதற்றத்துக்கும் பயப்பீதிக்கும் காரணமாகிவிடும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

வடக்கில் நிலவும் குளிர் காலநிலையால் ஏற்கனவே காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் அதிகளவில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுவரும் நிலையில், பன்றிக் காய்ச்சல் குறித்தும் விழிப்புணர்வுடன் இருக்குமாறு அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலதிகமாக எந்தவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தகவல்கள் இல்லை.

அயல் அரசான தமிழகத்திலும் பன்றிக் காய்ச்சல் வேகமாகப் பரவி வரும் நிலையில், அதன் தொற்று இங்கும் ஏற்பட்டிருப்பது கவனத்திற்குரியது. தமிழகத்தில் தை மாதம் 27ஆம் திகதி முதல் 18 நாள்களில் 20 பேர் பன்றிக் காய்ச்சலால் உயிரிழந்திருக்கின்றனர் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களின் ஒருவரான மருத்துவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்திக்கிறார். அவர் இந்திய நடுவண் அரசில் சுகாதார அமைச்சராகவும் பணியாற்றியவர். இது தொடர்பான விடயங்களில் அனுபவமும் உள்ளவர். கடந்த 8 ஆண்டுகளாக இந்த நோயின் தாக்கம் தமிழகத்தில் காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

“பன்றிக் காய்ச்சலைத் தடுப்பூசி மூலம் தடுக்க முடியாது என்றபோதிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நோய் தாக்காமல் காப்பாற்றிக்கொள்ள முடியும்” என்று அன்புமணி ராமதாஸ் தெரிவிக்கிறார். ஆனால் தமிழக அரசு அந்த நடவடிக்கையைச் செய்யவில்லை என்றும் அவர் குற்றஞ் சாட்டுகிறார்.

இங்கும் நிலைமை அதுவேதான். விழிப்புணர்வு நடவடிக்கையோ, முன்னெச்சரிக்கை நடவடிக்கையோ எதுவும் எடுக்கப்படவில்லை. அரசுகளின் இந்தப் போக்குகளைக் கண்டித்து பிரச்சினையைக் கிளப்பியிருக்கவேண்டிய எதிர்க்கட்சிகளும் அது குறித்துக் கண்டுகொள்ளவில்லை என்பதுதான் பரிதாபம்.

எல்லோரும் அவரவருக்கு வந்ததன் பின்னர்தான் இதுபற்றிப் பேசவிளைவார்கள் எனில், எதிர்க் கட்சி என்பது எதற்கு என்கிற கேள்வியே எழுகிறது.

அசமந்தங்களைத் தூக்கி ஓரமாகப்போட்டுவிட்டு, விரைந்து நடவடிக்கையில் இறங்கவேண்டிய காலம் இது. அமைச்சரும் அதிகாரிகளும் கவனிப்பார்களா?

# அரசியலில் விரவிக் காணப்படும் ஊழல்களும் மோசடிகளும்

சேரலாதன்

அரசியலுக்குள் நுழைவதே ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்காகவே என்பது போன்று அநேக மான அரசியல்வாதிகள் நடந்து கொள்கின்றனர்.

ஊழல், மோசடிகள் என்றாலே, ஆசிய நாடுகள்தான் நினைவில் நிழலாடுகின்ற நிலை காணப்பட்டது. தற்போது உலகின் ஏனைய நாடுகளிலும் இந்தத் தவறான கலாசாரம் பரவி விட்டது. பணத்துக்காக மட்டுமன்றி, தமது ஏனைய பல நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் அரசியல்வாதிகள் தவறான செயல்களில் ஈடுபட்டமையும், ஈடுபட்டு வருகின்றமையும் தெரிந்த விடயங்களாகும்.

### உலக நாடுகள் பலவற்றிலும் அரசியலில் ஊழலும் மோசடிகளும் இருந்துள்ளன

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த றிச்சார்ட் நிக்சன். எதிர்த் தரப்பு அரசியல்வாதிகளின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதான குற்றச்சாட்டின்பேரில், விசாரணைகளை எதிர்கொண்டதுடன், தமது ஜனாதிபதிப் பதவியையும் அவர் இழக்க நேர்ந்தது. இதேபோன்றுதான் ஊழலில் ஈடுபட்ட சில வெளிநாடுகளைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் தமது பதவிகளை இழக்க நேர்ந்தது.

இதேவேளை, இந்தியா மிகப் பெரியதொரு ஜனநாயக நாடு என்பதுடன், உலக மக்கள் தொகையில் சீனாவுக்கு அடுத்த நிலையில் விளங்குவதும் தெரிந்த விடயமே. இந்திய நாட்டில் ஊழல், மிகப்பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துக் காணப்படுகின்றது.

அரசியல்வாதிகள், குற்றவாளிகள், அரச அலுவலர்கள் இணையும்போது ஊழல், மோசடிகள் ஆரம்பமாகின்றன. அரசியல்வாதிகள் கையூட்டுப் பெறுவதற்காகக் குற்றவாளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பின்னர் தமது செல்வாக்கையோ அல்லது பணத்தையோ காட்டி அரச அலுவலர்களைத் தமது வழிக்குக் கொண்டு வருகின்றனர். இறுதியில் ஊழல் நிறைந்த சட்ட விரோதச் செயற்பாடுகள் அரங்கேறுகின்றன. பொலிசாரிடமும் தமது செல்வாக்கைப் பிரயோகிப்பதன் மூலமாகத் தமக்கு வேண்டிய குற்றவாளிகளை விடுவிப்பதற்கு அரசியல்வாதிகளே காரணமாகிவிடுகின்றனர். நாட்டின் அதிகாரம், அரசியல்வாதிகளிடம் உள்ளதால் எதையும் செய்கின்ற திறமை படைத்தவர்களாக அவர்கள் விளங்குகின்றனர்.

போபர்ஸ் பீரங்கிகளைக் கொள்வனவு செய்ததில் பெருந் தொகைப் பணத்தை தனிப்பட்ட முறையில் பெற்றதாக முன்னாள் இந்தியப் பிரதமரான மறைந்த ராஜீவ் காந்தி மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதுதொடர்பான விசாரணைகள் இறுதிக் கட்டத்தை நெருங்கியபோது ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதால் அதன்பின்னர் இந்த விவகாரம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

அதேவேளை, ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த அரசியல்வாதிகள் சிறைவாசம் அனுபவித்தார்கள். இவர்களில் லாலு பிரசாத் யாதவ், சுரேஷ் கல்மாடி, விசிசுக் ராம், ஓம் பிரகாஸ் சௌதாலா, மதுகோடா, தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சரான ஜெயலலிதா, கர்நாடகாவின் பி.எஸ். எடியூரப்பா, ஆந்திராவின் ஜெகன்மோகன் ரெட்டி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் சிலர் மீதான ஊழல் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் தமிழ்நாட்டில் அரசியல் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவு இதற்கொரு பிரதான காரணமாகும்.

### இலங்கை அரசியலிலும் ஊழல் மோசடிகளுக்குக் குறைவே இல்லை

எமது நாட்டைப் பொறுத்த வரையிலும்கூட, அரசியல்வாதிகளின் ஊழல் செயற்பாடுகள் பெருமளவில் இடம்பெற்றிருக்கின்றன. மகாவலி அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரியதொரு அபிவிருத்தித் திட்டமாகும். இதற்குப் பொறுப்பாக இருந்த ஐ.தே.க. அமைச்சர் ஊழலில் ஈடுபட்டுப் பெருமளவு பணத்தைச் சம்பாதித்ததாக அப்போது கூறப்பட்டது. அரச தலைவருக்கு இந்த அமைச்சர் மிகவும் நெருங்கியவராகக் காணப்பட்டதால் இவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதேபோன்று தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஊழல் அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்கின்றமை சாதாரண விடயமாகிவிட்டது. கடந்த ஆட்சியின் போது கூட அரசில் அங்கம் வகித்த முக்கிய அரசியல்வாதிகள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பாகப் புதிய அரசு ஆட்சியில் அமர்ந்த போது பரபரப்புச் செய்திகள் வெளியாகின. சிலருக்கு எதிராக விசாரணைகளும் இடம்பெற்றன. ஆனால் இதுவரை எவருமே நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படவில்லை. இந்த நிலை தொடருமானால் ஊழலையும் மோசடிகளையும் இந்த நாட்டில் எவராலும் ஒழித்து விடமுடியாது.

மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட்டு ஜனநாயக ரீதியான நன்மைகளை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே அரசியல் முறைமை உருவாக்கப்பட்டது. நாட்டின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர். நாட்டின் தலை விதியையும் இவர்களே தீர்மானிக்கின்றனர். ஆனால் அரசியல்வாதிகளால் ஊழல்கள் ஏற்படும்போது முழு நாடுமே பாதிக்கப்படுகின்றது.

அரசியல் என்பதொரு சாக்கடை என்றார் பேரறிஞர் பேர்னார்ட் ஷோ. அரசியல்வாதிகள் அந்த அறிஞரின் கூற்றை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தச் சாக்கடையைச் சீர் செய்வதற்கு அவர்கள் முன்வர வேண்டுமே யொழிய அதை மேலும் மோசடி நிலைக்குக் கொண்டு செய்யக்கூடாது.

ஆனால் இன்றைய அரசியல்வாதிகளில் பலர் பேர்னார்ட் ஷோவின் கூற்றை மெய்ப்பிப்பது போன்றே நடந்து கொள்கின்றனர். அந்த வகையில் நாட்டில் ஊழல் மோசடிகளை முற்றாக ஒழிப்பதென்பது சுலபமான காரியமாகத் தெரியவில்லை.

# நெடுந்தாரகை ஓர் அரசியல் வெள்ளோட்டம்

வந்தியத்தேவர்

நெடுந்தீவின் அபிவிருத்திக்கென அரசால்மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், பெரும்பாலும் வீதிப் புனரமைப்புக்கேபயன்படுத்தப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குறைபட்டு வந்தனர். நெல்சிப் திட்டத்தில் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில், கடற்பயணத்துக் காக ஒரு புதிய படகைக் கட்ட நடவடிக்கைஎடுக்கவேண்டும் எனவும் மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். அதற்கமைய நெடுந்தீவு பிரதேச சபை புதிய படகு ஒன்றைக் கட்ட முன்வந்தது. எனினும் படகுக்கென ஒதுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறை காரணமாகத் திட்டத்தைச் செயற்படுத்த முடியாத நிலை நிலவியது. இந்த நிலையில் உலக வங்கி வழங்கிய நிதி உதவியுடன் ஆஸ்திரேலிய அரசின் உதவியும் பெறப்பட்டு, இப்போது நெடுந்தாரகைப் படகு நெடுந்தீவுக்கான சேவையில்இணைந்துள்ளது.



### நெடுந்தீவுக்கான படகுச்சேவை பயன்தர வல்லது

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி வடக்கு மாகாண முதல்மைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நெடுந்தாரகையின் வெள்ளோட்ட நிகழ்வு, குறிகாட்டுவான் துறைமுகத்தில் இடம்பெற்றது. அத்னைத் தொடர்ந்து நெடுந்தீவில் பிரதேச சபையால் பொதுக் கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. புதிய படகு நெடுந்தீவு பிரதேசசபையின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. படகுக் காப்புறுதிக்கு மட்டும் வருடம் ஒன்றுக்கு ரூபா 36 லட்சம் தேவை. முதல் ஒரு வருடத்துக்கான செலவை ஆஸ்திரேலிய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

பெரிய வருமானங்கள் எதுவுமின்றித் திண்டாடிக் கொண்டிருக்கும் நெடுந்தீவு பிரதேசசபை, எதிர்காலத்தில் இந்தப் படகுக்கான பராமரிப்புச் செலவுக்கான நிதியை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகிறது. சபையிடம் கூடு தல் வருமான்ங்களைப் பெறக்கூடிய திட்டங்கள் எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை. அரசு இந்தப் படகுப் பயணிகள் சேவையைக் கட்டணம் அறவிடாது இலவசமாக மேற்கொள்ளத் தீர்மானித்தது. 1937 இல் 'சில்வஸ்பிறே' படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், ஆயச் சேவையாக ஒரு பயணியிடம் 50 சதம் மட்டும் அறவிடப்பட்டது. இந்தக் கட்டணத்தை ரூபா ஒன்றாக அதிகரிக்கத் தீர்மானித்த சமயம், மக்கள் அதற்கு ஆதரவளிக்காததால் கட்டணம் உயர்த்தப்படவில்லை.

பின்னாளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செல வினங்களைக் கருத்திற்கொண்டு ரூபா 7ஆகவும், பின்னர் ரூபா 10 ஆகவும் அறவிட்டு வந்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தச் சேவை இலவச சேவையாக அறிவித்தார்.

பிரதேச சபை இந்தச் சேவையை வசமாக நடத்துவது என்பது முடியாத காரியம். ஆனால் ஒரு பயணிக்கு கட்டணமாக ரூபா 80 அறவிட யோசனை உள்ளதாகவும் கூறப்படுகின்றது. முதலமைச்சரின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரனிடம் இது பற்றிக்கேட்டபோது, இலவசமாக இதனைச் செய்வது இயலாத ஒன்று. கட்டணம் பற்றி எதுவும் தீர்மானிக்கப் படவில்லை. வெளிநாடுகளில் இருந்து வரும் உல்லாசப் பயணிகளிடம் முதலில் ஒரு தொகையை அறவிடலாம் எனப் பொது வாகக் குறிப்பிட்டார்.

பிரதேச சபையால் நடத்தப்பட்ட கூட்டத்தில் இவை குறித்து முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், போதிய அறிவிப்பின்மையால் இந்தக் கூட்டத்தில் ஒரு சில பொதுமக்களைத் தவிர வேறு எவரையும் காணமுடியவில்லை. கட்டண விவகாரம் மக்களுடன் ஆலோசிக்கப்படுவதே சரியானது.

அவர்கள் இப்போது இலவசத்துக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள். அரசு செய்வதுபோல் உள்ளூராட்சிச் சபையால் செய்யமுடியாது என்பதையும் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டமைக்கு உரிமைகோரும் தரப்புக்கள்

முன்னதாகக் குறிகாட்டுவானில் இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய முதலமைச்சர் விக்னேஸ்வரன், படகுக் கட்டுமானத்துக்காக நிதி வழங்கியவர்கள், தொழில்நுட்பப் பிரிவினர், ஆஸ்திரேலிய அரசு, டொக்யாட் நிறுவன உத்தியோகத்தர்கள், பணியாளர்களென பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றியைக் கூறித் தனது உரையை முடித்துக் கொண்டார். நிகழ்வில் உரையாற்றிய ஆஸ்திரேலியத் தூதுவர் பிறைட் கட்சன், தமது அரசு மக்களுக்கு உதவத் தயாராக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

நெடுந்தீவுப் பிரதேசசபை வருமானம் மிகக் குறைவான ஒரு சபை என்பது உள்ளூராட்சி அமைச்சர் திணைக்கள அதிகாரிகள் அறியாததல்ல. நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர்கள் பைசர் முஸ்தபா, திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் ஆகியோர் இந்த விடயம் தொடர்பாக எந்தவோர் கருத்தையும் முன்வைக்கவில்லை. இந்த நிகழ்வை ஒரு அரசியல் வெள்ளோட்டமாகவே நோக்கியுள்ளனர்.

சுமந்திரன் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடியதான அரசமைப்புக் கிடைக்கும். சில அதிகாரங்களுடன் கூடிய மாகாணசபை அல்ல, முழு அதிகாரங்களுடன் கூடிய மாகாண அரசு எதிர்பார்க்கப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றுகையில், எமது மக்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்பதால் கடந்த அரசு எமது மக்களுக்குரிய தேவைகள் எதனையும் நிறைவேற்றவில்லை என ஆரம்பித்து, வேறு இடங்களில் மாகாணசபைகள் பல சேவைகளைச் செய்கின்றன. வடக்கில் எமது முதல்வருக்கும் சபைக்கும் அதிகாரங்கள் மறுக்கப்படுகின்றனஎனக் குறிப்பிட்டதுடன், நெடுந்தாரகை கிடைக்க இன்றைய அரசே காரணம் எனவும் முடிச்சுப் போட்டார்.

இவை ஒருபுறம் இருக்க, நெடுந்தாரகை படகுச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமைக்குத் தாங்களே காரணம் என ஈ.பி.டி.பி கட்சி துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலம் உரிமை கொண்டாடியுள்ளது. மொத்தத்தில் இடம் பெற்ற நிகழ்வுகள் ஓர் அரசியல் வெள்ளோட்டமாகவே தென்பட்டதாகப் பலர் தெரிவித்தனர்.



## வாசகர் திருமுகம்

### நல்லாட்சியும் கட்டுப்பாட்டு விலைகளும்

பொருள்களின் விலைவாசிகளை கட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது நல்லாட்சியின் ஓர் அங்கமே. அந்த வகையில் கடந்த வாரம் சீனி, அரிசி உள்ளிட்ட சில அத்தியாவசிய பொருள்களுக்கு அரசு கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயம் செய்திருந்தமை வரவேற்கத்தக்கது. ஆனால், விலைக் குறைப்பின் நன்மைகள் பொது மக்களைச் சென்றடையும்போது தான் அது ஒரு பயனுறுதிமிக்க கட்டுப்பாட்டு விலையாக அமையும். தனியார் துறை வர்த்தகர்கள் மூலம் எத்தனையோ மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளதாக பத்திரிகைவாயிலாக வெறுமனே அறிக்கைகளை விடுவதில் பயன் ஏதும் இல்லை. இந்த அரிசிக்கு என்ன நடந்தது என்று பொறுப்பு கூறவேண்டியவர்கள் யார்? அரசியல் செல்வாக்குப் படைத்த சில வர்த்தக பெருச்சாளிகளுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதுதான் நல்லாட்சியா?

கொழும்பு உட்பட ஒரு சில இடங்களுக்கு பொருள்களை கட்டுப்பாட்டு விலைக்கு இறக்குமதி செய்துவிட்டு நாடு முழுவதும் விலை நிர்ணயத்தை நடைமுறைப்படுத்துவது எவ்வளவு தூரம் பொருத்தமானது? போலியான செயல் திறனற்ற கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்து பொதுமக்களையும் ப.நோ.கூ. சங்கங்களையும், சாதாரண வர்த்தகர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தி வேடிக்கை பார்ப்பது தான் நல்லாட்சியா? அரசின் இப்பொறுப்பற்ற செயலால் சட்ட நடவடிக்கைகளுக்கு அகப்பட்டு பலிக்கடா ஆவது ப.நோ.கூ.சங்கங்களும் சாதாரண வர்த்தகர்களும் தான் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக பெற்றோலிய உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு விலை நிர்ணயம் செய்யப்பட்டால் அன்று நள்ளிரவு தொடக்கம் அது நடைமுறைக்கு வந்து விடும். காரணம் அன்றைய தினமே வழங்கல் கட்டளைகளைப் பிறப்பித்து புதிய விலைக்கு பொருள்களை கொள்வனவு செய்யமுடியும். இதுவே செயல் திறன்மிக்க ஒரு கட்டுப்பாட்டு விலைப் பொறிமுறை ஆகும். எனவே கட்டுப்பாட்டு விலைகளின் நன்மைகள் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் அரசு நேரடியாகப் பொருள்களை இறக்குமதி செய்து, மாவட்டச் செயலகங்களால் நிர்வகிக்கப்படும் அரச களஞ்சியங்கள் மூலம் ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக பொருள்களை விநியோகிக்க முன்வர வேண்டும்.

மக்கள் எதிர்நோக்கும் இந்த சமகால பிரச்சினைகளை கவனத்தில் கொள்ளாது எமது தமிழ் நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர் வாய்மூடி மௌனிகளாக இருப்பது தான் வேதனைக்குரிய விடயம்.

*யோ.தெய்வேந்திரன்*
*மீசாலை மேற்கு.*



**மேடம்:** மனதில் இரக்க குணம் மிகுந்திருக்கும். விழிப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.



**இடபம்:** பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். உறவினர்களால் ஓரளவு நன்மை உண்டாகும்.



**மிதுனம்:** பேச்சு, செயலில் வசீகரம் நிறைந்திருக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.



**கடகம்:** முக்கிய பணிகளை தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.



**சிங்கம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ்வீர்கள். எதிரி தொல்லை மறையும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.





**கன்னி:** பயன் தராத விடயங்களில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர் பணி விடயமாக வெளியூர் செல்வர். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நலலது.



**துலாம்:** மனம், செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.



**விருச்சிகம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உருவாகும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டு பெறுவர். கூடுதல் சொத்து சேர்க்கை கிடைக்க யோகமுண்டு.



**தனுசு:** எதிர்மறையாகப் பேசுவோரிடம் விலகி இருக்கவும். தொழில், வியாபாரத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். லாபம் சீராக இருக்கும். பெண்கள் குடும்பச் செலவுக்காகக் கடன் வாங்குவர். வாகனப் பாதுகாப்பில் கவனம் செலுத்தவும்.



**மகரம்:** சுயதேவையை நிறைவேற்ற ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். குடும்பத்துக்கான செலவு அதிகரிக்கும்.



**கும்பம்:** உங்கள் மனதில் நல்லெண்ணம் வளரும். நற்செயல்களில் ஈடுபட்டு நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் நிறைவேறும். கூடுதல் பண வரவால் வாழ்க்கைத் தரம் உயரும்.



**மீனம்:** குடும்பத்தினரின் ஆதரவால் முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியைக் கண்டு பலரும் வியப்படைவர். ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பதவி உயர்வு கிடைக்கும்.




## சினிமாவானது ஏ.ஆர்.ரகுமானின் இசை நிகழ்ச்சி

உலக புகழ்பெற்ற பாடகரும், நடன கலைஞருமான மைக்கல் ஜாக்சனின் இசை நிகழ்ச்சிகளை தொகுத்து 'தி இஸ் இட்' என்ற பெயரில் திரைப்படமாக உருவாக்கப்பட்டு, உலகம் முழுவதும் வெற்றிகரமாக ஓடியது. அதேபோன்று இசை அமைப்பாளர் ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரகுமான் அமெரிக்காவின் 14 நகரங்களில் நடத்திய இசை நிகழ்ச்சிகளை தொகுத்து ஒன் ஹார்ட் என்ற பெயரில் திரைப்படமாக்கி உள்ளனர்.

ஒய்.எம். மூவீஸ் மற்றும் கிரேப் வென்சர்ஸ் நிறுவனங்கள் இணைந்து இந்தப் படத்தை உருவாக்கி உள்ளன. இதில் ஏ.ஆர்.ரகுமானின் பேட்டி, இசை நிகழ்ச்சிக்கு அவர் செய்யும் ஒத்திகைகள், ரசிகர்களின் கொண்டாட்டம், அவர்களின் பேட்டி என ஒரு முழுமையான இசை திரைப்படம் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவாகி உள்ளது.

இதன் முன்னோட்ட காட்சி கடந்த 5 ஆம் திகதி கனடா நாட்டின் ரொறன்ரோவில் உள்ள ஸ்காட்டியா பேங் திரையரங்கில் அண்மையில் திரையிடப்பட்டது. இதில் ஏ.ஆர்.ரகுமான் கலந்து கொண்டார். ஆங்கிலத்தில உருவாகி உள்ள இந்தப் படம் ஏப்ரல் மாதம் உலகம் முழுவதும் வெளியாகிறது. தமிழ்நாட்டில் தமிழ் வர்ணனையுடன் வெளியிட ஏற்பாடு நடந்து வருகிறது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 9 | 5 | 2 | 1 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 2 | 9 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 5 | 7 | 9 | 8 | 3 |
| 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




ஆத்தா! எப்படியோ உன்னை காலி பன்னியாவது. முதல்வர் ஆகலாம் என்று நினைச்சேன். ஆனா இவனுங்க விட மாட்டேங்கிறாங்களே!



மூதேவி இது எம்.ஜி.ஆர். சமாதி அம்மா சமாதி அங்கே இருக்கு!

அன்பே இந்த வருஷம் காதலர் தினம் நா உன்னை பார்த்தே ஆகனும்







பார்த்தாய் என்டால் நீ செத்திடுவாய்

சசிகலாவுடன் ஆளுநர் வித்தியாசாகர் ராவ் சந்திப்பு - செய்தி



ஆளுநர்: ஆமா, ஜெயலலிதா எப்படி செத்தாங்க ஆயா?

செந்தில் மீம்ஸ்



ஆயா: இவனுக்கு எப்படியோ உண்மை தெரிஞ்சிருச்சு. இவனுக்கும் ஒரு பாயசத்தை ஊத்த வேண்டியது தான்!

இப்படி ஒரு கண்றாவியான முகத்துடன் என் மனைவியை இதற்கு முன் பார்த்ததுண்டா யுவர் ஆனர்?



எதோ பாழடைந்த பழைய பங்களாவுக்கு வெள்ளை அடித்ததுபோல் உள்ளது எனது பொண்டாட்டியின் மூஞ்சி

# 2017 பெப்ரவரி மாத பலன்



## துலாம்

நடக்காது என்று எதையும் நினைக்காமல் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற துடிப்புடைய துலா ராசியினரே! இந்த காலகட்டத்தில் ராசியாதிபதி சுக்கிரனும், ராசியில் சஞ்சாரம் செய்யும் குருவும் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார்கள். சுபகாரியங்களில் இருந்து வந்த தடங்கல்கள் நீங்கும். ஆனாலும் மற்ற கிரகங்களின் சஞ்சாரத்தால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை ஆலோசித்துச் செய்வது நல்லது. மனம் நிலை கொள்ளாமல் ஏதாவது சிந்தித்துக் கொண்டே இருக்கும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது. ஆனால், ராசியைப் பார்க்கும் தனாதிபதி செவ்வாயால் பணவரத்து அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம்பெறும். தொழில் ஸ்தானத்துக்கு நாடிப்படி செவ்வாய் சுக்கிரன் சனி ஆதிக்கம் பெறுகின்றனர். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் வரும். தேவையான சரக்குகள் கையிருப்பில் இருக்கும். புது நபர்கள் கூறும் வியாபாரம் தொடர்பான விடயங்களில் முடிவு எடுக்கும்போது கவனமாக இருப்பது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் அல்லது புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். உங்களது பணி திறமையால் மேல் அதிகாரிகள் திருப்திஅடைவார்கள். குடும்பாதிபதியான செவ்வாய் ஆறாம் ஸ்தானத்தில் மறைந்தாலும் அவர் தனது எட்டாம் பார்வையால் ராசியைப் பார்க்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாகப் பேசும் சூழ்நிலை ஏற்படும், கவனமாக இருப்பது நல்லது. மனைவி குழந்தைகளின் உடல்நலத்தில் கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. வயிறு தொடர்பான நோய் வந்து நீங்கும். பெண்கள் சதா எதையாவது யோசித்துக் கொண்டே இருப்பீர்கள். எந்தக் காரியத்திலும் முடிவு எடுக்கும் முன்பு தீர ஆலோசிப்பது நல்லது.

கலைத்துறையினர் யுக்திகளைக் கையாண்டு தொழிலில் முன்னேறுவீர்கள். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். உதவிகளின் மூலம் வெற்றி காண்பீர்கள். மிகவும் நன்றாகவே இருக்கும். அரசியல் துறையினருக்கு முன்னேற்றம் கிடைக்கும். தாங்கள் மேன்மையடைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும், வெளிநாடு வாய்ப்புகள் வரலாம், வாய்ப்புகள் குவியும், வீண் அலைச்சல் ஏற்படலாம், வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும், மாணவர்களுக்கு கல்வியை பற்றிய எண்ணங்கள் அதிகரிக்கும், பாடங்களை படிக்கும்போது மனதை ஒருமுகப் படுத்தி படிப்பது நல்லது.

**பரிகாரம்:**
சுமங்கலி பூஜை செய்து சுக்கிர பகவானுக்கு அர்ச்சனை செய்ய குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். பொருள் சேர்க்கை உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
திங்கள், வெள்ளி.

# வரலாற்றில் இன்றைய தினம்

1349 - ஸ்ராஸ்பேக்கில பல நூற்றுக்கணக்கான யூதர்கள் எரியூட்டப்பட்டுக் கொல்லப்பட்டதுடன் எஞ்சியோர் அங்கிருந்து பலவந்தமாக விரட்டப்பட்டனர்.

1400 - இங்கிலாந்தின் இரண்டாம் றிச்சாட் சாவடைந்தார். யஹன்றி பொலின்பேர்க்கின் பணிப்புக்கு அமைவாக அநேகமாக இவர் பட்டினியில் சாவடைந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

1849 - பதவியிலிருக்கும்போது புகைப்படமெடுக்கப்பட்ட அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியானார் ஜேம்ஸ் நொக்ஸ் போல்க்.

1852 - சுகவீனமுற்ற சிறுவர்களுக்கென கிறேற் ஓர்மொண்ட் சென் மருத்துவமனை திறக்கப்பட்டது. இங்கிலாந்தில் நோயாளிகளுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு கட்டில் வசதி வழங்கிய மருத்துவமனை இதுவாகும்.

1876 - அலெக்ஸாண்டர் கிரகம்பெல் தொலைபேசிக்கான காப்புரிமத்துக்கு விண்ணப்பித்தார்

1918 - சோவியத் யூனியன் கிரகோரியன் நாள்காட்டியைப் பின்பற்றத் தொடங்கியது.

1920 - சிக்காக்கோவில் பெண்களின் வாக்களிப்போர் சங்கம் தொடங்கப்பட்டது.

1945 - அமெரிக்க சவூதி அரேபிய ராஜரீக உறவு உத்தியோகபூர்வமாகத் தொடங்கப்பட்டது.

1949 - இஸ்ரேலிய நாடாளுமன்றம் முதன் முதலாகக் கூடியது.

1961 - 103 ஆவது மூலகமான லோவ்ரன்சியம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டது.

1989 - இந்தியாவின் போபாலில் இடம் பெற்ற விசவாயுக் கசிவுக்கு அடித்ததுக்கு இழப்பீடாக இந்திய அரசுக்கு 470 மில்லியன் டொலர் வழங்க யூனியன் கார்பைட் நிறுவனம் சம்மதித்தது.

1990 - இந்தியாவின் பெங்களூரில் இந்திய விமான சேவை விமானம் 605 விபத்துக்குள்ளாகியதில் 92 பேர் உயிரிழந்தனர்.

1997 - அரசியல்வாதிகளின் ஆயுதங்களைக் களைவதற்காகப் பெரும் தேடுதல் கையளிக்கப்படாத நிலையில், 7 ஆயிரம் துப்பாக்கிகள் எனத் தெரிவிப்பு.

2005 - பெரியளவான வீடியோ பரிமாற்றம் தொடர்பான வலைத் தளமான யூரியூப் கல்லூரி மாணவர்கள் சிலரால் தொடங்கப்பட்டது.

2011 - அரபு வசந்தத்தின் தொடர்ச்சியாக பாஹ்ரைனில் தொடர் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின.

2014 - ஜொவாப் பிரேரணையின் நோக்கம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதே என ரஷ்ய அதிகாரிகளிடம் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு.

2014 - கொழும்பில் காணாமற்போனால் சாட்சியம் பதிவு செய்ய முடியாதென ஆணைக்குழுவினர் கைவிரிப்பு.

2014 - 65 தலிபான்களை விடுவித்தது ஆப்கான் அரசு. இதற்கு அமெரிக்கா அதிருப்தி தெரிவிப்பு.

2014 - மனிதப் புதை குழிகள் குறித்து மௌனத்தில் பொதுபல சேனா என முஸ்லிம் காங்கிரஸ் குற்றச் சாட்டு.

2016 - இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் பாடுபடப் போவதாக புதிய ஆளுநர் தெரிவிப்பு.

2016 - வடக்கு மாகாண ஆளுநராக றெஜினோல்ட் குரே நியமனம் பெற்றார்.

2016 - வடக்கில் படைவசமுள்ள காணிகள் விடுவிக்கும் முடிவை இந்த மாத இறுதியில் ஜனாதிபதி வெளி யிடுவாரென ராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு.

2016 - மக்கள் ஒப்புதல் வழங்கினாலே கடல் நீரை நன்னீராக்கும் திட்டமென நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு.

## நாளை

**மாசி-03**

புதன்கிழமை -15.02.2017
திதி: சதுர்த்தி கா. 07.26
நட்சத்திரம்: அத்தம் பி.ப.01.03
சுபநேரம்:05.03-06.33 வரை
ராகுகாலம்:12.33-02.03 வரை

# ஏனம்மா சின்னம்மா! உங்களுக்கு ஏன் இந்த தேவையில்லாத அவசரம்?

தமிழ்நாட்டு மக்களை நினைக்கும்போது பரிதாபமாக இருக்கின்றது. அந்த மக்களின் மனஉணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்கின்ற சிலரால் ஒட்டுமொத்தத் தமிழர்களும் தலை குனிந்து நிற்கின்றனர்.

எம்.ஜி.ஆர். என்ற அந்த மகத்தான மனிதரால் உருவாக்கப்பட்டது அ.தி.மு.க. கட்சி. இது ஆரம்பித்தது தொடக்கம் அவரது இறுதிக் காலம் வரை எவராலுமே அ.தி.மு.கவை அசைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. தமிழக மக்களின் பேராதரவு அந்த அளவுக்கு அவருக்குக் கிடைத்திருந்தது. பின்னர் ஜெயலலிதாவின் தலைமையிலும் அந்தக் கட்சி தமிழகத்தின் ஆட்சியைப் பல தடவைகள் கைப்பற்றியது. ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர்தான் பிரச்சினையே ஆரம்பித்துள்ளது.

ஜெயலலிதாவுக்கு இரண்டு தடவைகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டதால் அவரால் முதலமைச்சர் பதவியில் தொடர்ந்து இருக்க முடியவில்லை. இதனால் தமது முழுநம்பிக்கைக்கும் பொறுப்பானவராகக் காணப்பட்ட ஓ.பன்னீர்செல்வத்தைத் தாம் வகித்த பதவியில் அமர்த்தினார். பன்னீர்செல்வமும் ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பொய்யாக்கவில்லை, விசுவாசமாகவே நடந்து கொண்டார்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னரும், பன்னீர்செல்வமே முதலமைச்சரானார். ஆனால், ஜெயலலிதாவின் தோழியாக வலம் வந்த சசிகலா என்ற பெண், பதவி ஆசை பிடித்துக் காணப்படுவதே தற்போது தமிழ் நாட்டில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்குக் காரணமாகும். முதலமைச்சர் என்று கூடப் பார்க்காது பன்னீர்செல்வத்தைச் சசிகலா தரப்பினர் அவமானப்படுத்தியதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. மேலும், தம்மை மிரட்டியதன் காரணமாகவே தாம் பதவி விலகல் கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்ததாகப் பன்னீர்செல்வமும் கூறியுள்ளார். சொத்துக் குவிப்பு வழக்கின் இறுதித் தீர்ப்பு இந்த வாரம் வெளியாகவுள்ளது. இதில் சசிகலா குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்கப்படுமாயின் அவரால் வெளியில் கூட நடமாட முடியாது. சிறைக்கம்பிகளையே எண்ணிக் கொண்டிருக்க வேண்டியதுதான். இந்த நிலையில் அவர் முதலமைச்சரின் கதிரையில் அமர்வதற்கு அவசரப்படுவதன் காரணம் புரியவில்லை.

இதேவேளை-பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு பெருகிக் கொண்டே போகின்றது. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அ.தி.மு.கவின் முக்கிய நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் எனப்பலரும் சசிகலாவிடமிருந்து விலகிப் பன்னீர்செல்வத்துடன் இணைந்து வருகின்றனர். இதனால் சசிகலா பொறுமையிழந்து கூச்சல்போடும் அளவுக்குப் பலவீனமான நிலைக்குக் கீழிறங்கி விட்டார்.

பதவி ஆசை கண்ணை மறைத்ததால் சசிகலா ஆடிய ஆட்டம் ஓய்ந்துவிடும் நிலை தான் தற்போது ஏற்பட்டுள்ளது. ஏனம்மா சின்னம்மா உங்களுக்கு ஏனம்மா தேவையில்லாத அவசரம்?



## மரண அறிவித்தல்கள்

### திருமதி சற்குணதேவி முத்துலிங்கம்

**(இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர் - யா/ வயாவிளான் மத்திய கல்லூரி)**



பெற்றோல் நிலைய ஒழுங்கை, உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சற்குணதேவி முத்துலிங்கம் 13.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் வீ.முத்துலிங்கத்தின் (இளைப்பாறிய உத்தியோகத்தர் இ.போ.ச. கோண்டாவில்) அன்புமனைவியும் நவகாந்த் (ஆசிரியர், யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), ஷாமிலா (ஆசிரியர், யா/ கோண்டாவில் இராமகிருஷ்ணர் மகாவித்தியாலயம்), மைதிலி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் முருகதர்ஷினி (ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), குகநாதன் (ஆசிரியர், யா/இந்து மகளிர் கல்லூரி), சிவமயூரன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் கோமுகி, பிறவீனா, டிரோசன், சதுர்சன், ஹவிசன், ஜஸ்விகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, சிவபாதசுந்தரம், சிவலோகநாதன் (லண்டன்), சிவானந்தன் (கனடா), சாந்தி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் பஞ்சலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி) காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் ஜெயதேவி, சதாஜினி, சற்குணதேவி, காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் தவமலர், பரமயோகன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெற்றோல் நிலைய வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

தகவல்:
குடும்பத்தினர்
077 596 3550, 077 624 4910

### திருமதி சுசிலாதேவி (சுசிலா) தவராசா



பிறப்பு 05.03.1952 இறப்பு 12.02.2017

பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசிலாதேவி (சுசிலா) தவராசா (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் பாலன், ரதி (இத்தாலி), நந்தா (இத்தாலி), கோடீஸ்வரன், ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), இராசதுரை, கமலநாதன், அனுசியா, தேவி, இராசன் இராசாத்தி, குஞ்சர் ஆகியோரின் சகோதரியும் கந்தசாமி, தேவமனோகரி, கனகராசா, செல்வராசா காலஞ்சென்ற தவராணி (தேவி) மற்றும் திருச்செல்வம் (இத்தாலி) ஆகியோரின் மைத் துனியும் ராஜ்குமார் (றதன்), ரவிதாஸ் (ரவி), இராஜேஸ்கண்ணா (கண்ணன் - சுவிஸ்) காலஞ்சென்ற முரளிதாஸ் (முரளி) மற்றும் ரஞ்சித்குமார், துஷ்யந்தன், சுஜீதா (சுவிஸ்), தக்சன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயசித்திரா, வாணிஸ்ரீ, கவிதா, அமுதா, கம்சா, சுகந்தி, லோகராஜா (கண்ணன் - சுவிஸ்) ஆகியோரின் மாமியும் நிறேக்காந், நிரோஜா, நிரோஜன், வேணுஜா, சிவதாஸ் - திவ்வியா, விவிதா - அசோக்குமார், புவி (ஜேர்மனி), கஜீபன், லக்சன், றொபின்சன், டர்ஷனா, கர்ஷனா, ரிஷிகபின், சக்ஷனா, சஞ்சு, கேசிகா, கிருஷாந், ஹாஸ்றித், நிதுசன்ஜா, ஹன்சிகா, ஆதவன், காருண்யா, தூரிகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அக்ஷயன், ஜெர்சிகா, ஜெனீபர், அபிஷேக் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிறவுண் வீதி,**
**கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்.


(தொடர்ச்சிகள்)

## வடக்கில்...

உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்தது. எச்1என்1 வைரஸ் காய்ச்சலின் தாக்கத்துக்கு இலக்காகிய 3 சிறார்கள் கடந்த வாரம் வன்னியில் இணங்காணப்பட்டனர். அவர்களுக்கு கிளிநொச்சி வைத்தியசாலை தனிப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படுகிறது.
இந்த வைரஸ் தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேற்று 4 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 30 வயதுடைய ஒருவருக்கு இந்தத் தொற்று உள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. ஏனைய 3 பேர் தொடர்பான பரிசோதனை அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என்று சுகாதாரத் திணைக் களத்தால் கூறப்பட்டது. (வ-4,10)

## மரண அறிவித்தல்கள்

### காசி சின்னத்தம்பி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05.07.1947 | 13.02.2017 |

காரைநகர், கள்ளித் தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசி சின்னத்தம்பி நேற்று (13.02.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காசி-சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் ஐயன்-சீதை தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி, ஜெயகுமரன், சதீஸ்குமரன், சுரேஸ்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிக்குமார், நிகாரா, கேமலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் வனிதா, டர்சினி, தர்மிகா, கம்சிகன், கிசோத், யனுசன், பவித்திரா, அக்ஷ்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் வள்ளியம்மை, சிவக்கொழுந்து, இரத்தினம், சோமன் ஆகியோரின் சகோதரனும் இராமன், கணேசன், கண்மணி(ஜேர்மன்), சந்தனம், செல்லாச்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னுத்துரை பாலசிங்கம்



பிறப்பு : 29.12.1950
இறப்பு : 13.02.2017

பெருங்குளம், பிள்ளையார் கோயிலடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கற்குளி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசிங்கம் நேற்று (13.02.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை சௌந்தரம் தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான பிச்சைப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சுதாசினி, சுதாகரன், தீபா(கனடா), நிரஞ்சினி(றூபா-லண்டன்), சுதர்சன் ஆகியோரின் அருமைத் தந்தையும் ரமேஸ், றஞ்சினி, ராஜிதன் (கனடா), பாஸ்கரன் (லண்டன்), ஸ்ரீவாணி ஆகியோரின் அருமை மாமனும் பெரி, டிலக்சனா, சதுசனா, சரணிகா, ஜானுஜா, அனீசியா, லக்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வலட்சுமி, காலஞ்சென்ற கனகரத்தினம், செல்வதி, இராஜேஸ்வரி, பத்மாவதி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜானகி, சின்னத்துரை, மகாலிங்கம், நடராஜா(சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே. இலக்கங்கள்**
077 179 3905
077 628 3667
077 801 8108

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆஸிக்கு...

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. மெல்போர்ண் விமான நிலையத்தை நேற்று இரவு வந்தடைந்த தலைமை அமைச்சரை விக்டோரியா மாநில தலைமை அமைச்சர் டானியல் அண்ட்ருஸ், இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் கட்சிசன், ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சோமசுந்தரம் ஸ்கந்த குமார் ஆகியோர் வரவேற்றனர்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவரது பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அயலுறவுத் துறை பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா, தலைமை அமைச்சரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மேலதிக செயலாளர் சமன் அத்தாவுட ஹெட்டி ஆகியோர் அடங்கிய குழுவினரும் இணைந்துள்ளனர்.
தலைமை அமைச்சர் ரணில் இன்று மெல்போர்ணில் பல்வேறு சந்திப்புக்களில் பங்கேற்கவுள்ளார். (வ)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி புஸ்பமலர் குமாரசாமி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1948.08.10 | 2017.02.13 |

மாப்பாணவூரி, வலந்தலை காரைநகரை பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பமலர் குமாரசாமி நேற்று (13.02.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாப்பாணவூரி,**
**வலந்தலை, காரைநகர்**

தகவல்:
குடும்பத்தினர்

### கோவிந்தசாமி நல்லமுத்து



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.02.1953 | 13.02.2017 |

நுவரெலியா, ரம்பொடையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், மணியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி நல்லமுத்து 13.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் அரியமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்ரன் விஜிதரன், பார்த்தீபன் (செலான் வங்கி), டினேஸ், குகதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆரோக்கியபுரம் மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் ஆரோக்கியமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

***காதல்.... (17 ஆம் பக்கத் தொடர்ச்சி...)***

குற்றமில்லாமல் குறு நகைப்பை வெளிப் படுத்துகின்றாள். பின்னர் இணைவதற்கு உடன்பட்டு நிற்கின்றாள். தலைவன் கையகப்பட்டதும் என்ன செய்தோம் எனக் கலங்கியும் நாணப்பட்டும் நிற்கின்றாள். காதலன் பிரிய வருந்துகிறாள். ஆனால், இன்றைய காதலர்கள்- ஒன்று இல்லையென்றால் இன்னொன்று, இனிதாய்ப் பிரிவோம் என்று கூறி ஆளுக்கொரு திசையாய்ச் சென்றுவிடுகின்றனர்.

**நாணமுறும் பெண்**

ஓர் ஆண்மகனைக் கண்டு தீராத வேட்கை கொண்ட பின்னர் நிகழும் உடலியல் செயல்களை, உள்ளத்தில் நிகழும் ஈர்ப்பின் வெளிப்பாடுகளைத் தொல்காப்பியர் மெய்ப் பாட்டியலில் அழகுற வெளிப்படுத்துகின்றார். முதல் அவத்தையாக,

புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைபு பிறர்க்கு இன்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப (தொல்காப்பியம். நூ. 1207) என்கிறார். அதாவது, ஆண்மகனின் புதிய முகத்தினைக் காணுதலால் புதிய நாட்டம் ஏற்படுகிறது. அதனால் சற்று நாணத்தால் நடுக்கமுறப் பெண்ணின் நெற்றியில் வியர்வை வெளிவருகிறது. அவன் மீது கொண்ட விருப்பத்தின் விளைவால் முகத்தில் புன்முறுவல் ஏற்பட, அதை மறைத்து முகத்தில் சிரிப்புத் தோன்றாதவாறு இருக்கின்றாள். அவனால் அவள் உள்ளம் சிதைவுபடு கிறது. அது பிறருக்குத் தெரியாதவாறும் மறைக்கின்றாள். (அவன் மீது கொண்ட ஈர்ப்பால்) உடலில் ஏற்படும் மாற்றத் தைப் பிறர் அறியாதவாறு மறைக்கின்றாள்.

பின்னர் தன் கூந்தலை விரிக்கிறாள். தன் காதில் அணிந்த அணிகலனைக் களைகிறாள். முறையாக அணிந்த பிற அணிகலன்களைச் சீர்செய்கிறாள். ஆடை நெகிழ்கிறதோ என ஐயமுற்று ஆடையைக் களைந்து பின்னர் உடுத்துவாள். இவை இரண்டாம் நிலையில் நிகழும் மெய்ப்பாடுகள் என்கிறார் தொல்காப்பியர்.

மூன்றாவதாக, காதலின் தீராவேட்கையால் தன் அல்குல் பகுதியான அடிவயிற்றுப் பகுதி ஆடையினைத் தடவிச் சீர்செய்வாள். அணிந்த அணிகலன்கைள மீண்டும் சீர் செய்வாள். காத லால் வலிமையற்று இருக்கும் பெண்மகள், தான் வலிமை மிகுந்தவளாகக் காட்டத் துணிவாள். காதலின் ஈர்ப்பு மிகுதியாக நாணமடைந்து, தனது இரு கைகளையும் மேலெடுத்து நிற்பாள். நான்காவது அவத்தையாக,

பாராட் டெடுத்தல், மடந்தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றுஅலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகை,
எடுத்த நான்கே நான்கென மொழிப (தொல்காப்பியம். நூ. 1210) என்று ஆண்மகன் பெண்களைக் கண்டு பாராட்டுகிறான். அப்போது மடம் நீங்கி பெண்மகள் சில கருத்துக்க ளைக் கூறுவாள். பின்னர் காதலை மறுக்கும் சுற்றத்தாரை எண்ணி நாணுகிறாள். ஆண்மகன் கொடுக்கும் பொருளை ஏற்றுக்கொள்கிறாள். ஐந்தாவதாக, தமது காதல் விருப்பத்தால் ஆண்மகனோடு விருப்பம் கொண்டு தெரிந்து அவன் எண்ணங்களுக்கு உடன்படுகிறாள். கூடி நிற்கும் செயல் தவிர்த்து மறுக்கிறாள். மறைந்து நின்று அவன் காணாத நிலையில் நிற்கிறாள். அவன் கண்ட பின்பு மகிழ்வாள். ஆறாவது அவத்தையாக,

புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையளவு உரைத்தலொடு
புலம்பிய நான்கே ஆறென மொழிப (தொல்காபிபியம், நூ. 1212). அதாவது, தன் உடலின் புறத்தே ஒப்பனைகள் செய்தும் சிதைவுற்றும் காணப்படுவாள். தனிமையில் புலம்புதல், மனம் கலங்கி நிற்றல், தன் செயலற்ற நிலையைப் பிறரிடம் உரைத்தல்- இவை யாவும் நிகழும்.

**பத்துப் பொருத்தங்கள்**

குலப்பிறப்பு, குடிமைச் சிறப்பு (ஒழுக்கம்), வினைச் சிறப்பு (தொழில்), வயது, வடிவம், காம நிகழ்வுக்குரிய உள்ளத்துக் கிளர்ச்சி, சால்பு, அருளுடைமை, உள்ளக் குறிப்பை அறிந் தொழுகும் அறிவு, உயர்தன்மை ஆகிய பத்துப் பொருத்தங் கள் இருபாலாருக்கும் ஒத்து இருக்கும் போதுதான் காதல் ஒழுக்கத்தின் இயல்புநிலை சிறப்புறும் என்கிறார் தொல்காப்பியர். இதனை,

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல்காப்பியம், நூ.1219) என்ற பாவில் குறிப்பிட்டுள்ளார்.

இரு கண்களில் இருந்து, மனதினில் புகுந்து, உயிரினில் கலந்த அன்றைய காதல் போல் இன்றைய காதல் இல்லை. கண்டதும் காதல் என்றாகி, நோய் கொண்டதும் சாதல் எனவாகி நிற்கிறது இன்றைய பாதிக் காதல். மணம் ஒன்றிய நிலை அரிதாகி, பணம்தான் எல்லாம் என்றாகி இருக்கிறது மீதிக் காதல். உயிரும் உயிரும் ஒன்றிய காதல் மலையேறி, உடலும் உடலும் உரசும் காதல் அரங்கேறி, காதல் என்றாலே வெறுக்கும் அளவுக்கு ஆகிநிற்கிறது இன்றைய காதல். இதனை ஆராதிக்க ஒரு தினம் தேவைதானா?

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1340
சீட்டிழுப்பு திகதி 2017.02.13
வெற்றி இலக்கங்கள்
07 40 50 65 K
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 17,521,459/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 615
சீட்டிழுப்பு திகதி 13.02.2017
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
27 46 47 61 L
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.50,168, 023/=
Web: www.dlb.lk

## பதவி வெற்றிடம்

வடமாகாணத்தின் முன்னணி புத்தக மற்றும் ஸ்ரேசனறி வியாபார நிலையத்திற்கு தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றனர்.

◇ சிட்டை எழுதுநர்
◇ விற்பனைப் பிரதிநிதிகள் } ஆண் / பெண்

கணினி அறிவுள்ளவர்கள், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள், பட்டதாரிகளுக்கு முன்னுரிமை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நேரில் சமுகம் தரவும். மு.ப. 10.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை.

**"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"**
**212,214 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**acdil@ymail.com**

## கேள்விமனு கோரல்

UNDP நிறுவனத்தின் நிதியுதவியுடன் "வாழை சார் உற்பத்தி" செயற்பாடுகளை மேற்கொள்ளும் வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து) நிறுவனத்திற்கான வியாபாரத் திட்டம் தயாரித்தல், வியாபார அபிவிருத்தி மற்றும் முகாமை ஆலோசனை வழங்குவதற்கான முன்மொழிவுகள் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து கோரப் படுகின்றது.

இது தொடர்பான கேள்விப் பத்திரங்களை கீழ்வரும் முகவரியில் பெற்று 2017.02.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி :- வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, நீர்வேலி.

**மேலதிக விவரங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.**

**தலைவர் : 077 613 9620**
**பொது முகாமையாளர் : 077 354 7046**

அபிவிருத்தி
இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 49
சீட்டிழுப்பு திகதி 2017.02.13
வெற்றி இலக்கங்கள்
15 27 34
27
5,076,520/=

## தரம் 5 பரீட்சைத் தொடர் - 05
## பாராட்டுப் பெறுவோர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பூரண அனுசரணையுடன் கடந்த டிசம்பர் மாதம் ஒளி அரசி மூலம் இடம்பெற்ற தரம் - 5 தபால் மூலமான பரீட்சைத் தொடரில் உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமைசாலிகளை ஒளிஅரசி, புலமைச்சுடர் குழுமத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| க. தேஜஸ்றீ | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 184 |
| லோ. திவ்வியன் | யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | 184 |
| ம. சொவ்யா | வ/ சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை | 184 |
| த. தியான் | யா/ சுழிபுரம் ஐக்கிய சங்கசைவ வித்தியாலயம் | 184 |
| வி. ஸஜீவன் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 184 |
| ப. டனுசாந் | வ/விபுலானந்தக் கல்லூரி | 183 |
| மோ. கபிஷா | வ/ இலங்கைத் திருச்சபை த.க.பாடசாலை | 183 |
| ஹீ. டிலக்ஷினி | வ/விபுலானந்தக் கல்லூரி | 183 |
| வி. மிரஜா | வ/ பூந்தோட்டம் மகா வித்தியாலயம் | 183 |
| ச. போஷதன் | மா/ ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலை | 183 |
| ரா. ஸருவன் | கொழும்பு | 183 |
| ம. மில்ஷன் | யா/சென்ஜோன்ஸ் கல்லூரி | 182 |
| கி. அஸ்வினி | கொ/விவேகானந்தாக்கல்லூரி | 182 |
| எப்.எப்.சமீரா | வ/விபுலானந்தக் கல்லூரி | 181 |
| ர. அக்ஷயா | கொ/கணபதி இ.ம.ம.வித்தியாலயம் | 181 |
| தே. சிவாம்ஷன் | யாழ். இந்து ஆரம்ப பாடசாலை | 181 |
| ஜெ. ஜூம்சவர்த்தனி | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 181 |
| பா. கேசாத்மி | வ/விபுலானந்தக் கல்லூரி | 181 |
| மொ.ப.பிரஷா | | 181 |
| க. சிவப்பிரியன் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 180 |
| தே. அபிஷாலினி | மன்/தோட்டவெளி அ.த.க.பாடசாலை | 180 |
| எச்.பாத்திமா சாறா | அக்/அஸ்ஸிறாஜ் கனிஷ்ட பாடசாலை | 180 |
| கி.சுரபி | யாழ். இந்து ஆரம்ப பாடசாலை | 180 |
| அ. வியூட்சன் | வ/பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலை | 178 |
| சி. அபிரேகா | யா/ஏழாலை மேற்குசைவசன்மார்க்க வித்தியாலயம் | 178 |
| டோ. பிரதீப் | வ/பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலை | 178 |
| ஆர். ஜதுர்ஷன் | கொ/விவேகானந்தாக்கல்லூரி | 178 |
| ம. ரித்திகா | வ/விபுலானந்தக் கல்லூரி | 177 |
| வி. ரோகித்பிரசாத் | வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | 177 |
| ச. கலையரசன் | மு / பொன்னகர் தமிழ் வித்தியாலயம் | 177 |
| க. மதுமிலன் | வ/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை | 177 |
| ச. பவிஷன் | வ/ இலங்கைத் திருச்சபை த.க.பாடசாலை | 177 |
| ப. கிருஷா | வ/விபுலானந்தக் கல்லூரி | 176 |
| யூ. யேரிஸ்கா | வ/ இலங்கைத் திருச்சபை த.க.பாடசாலை | 176 |
| பை.ருக்கையாஹானி | நாத்தாண்டியா | 176 |
| சி. அகார்ஷன் | வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 176 |
| சந்திக்ஷயா | கொ/கணபதி இ.ம.ம.வித்தியாலயம் | 176 |
| ஜெ. சங்கவி | வ/ சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை | 175 |

*(தொடர்ச்சி நாளை)*

**உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் 0718628351 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.**

## இதோ வெளிவந்துவிட்டது
## உங்கள் குடும்ப முன்னேற்ற சஞ்சிகை

காதலர் தின
பெப்ரவரி மாத இதழ்!

2016 -
A/L
பொக்கிஷங்கள்
கூறிடப்பவை

காதலிப்பதால்
காதலர்
இல்லை

திருத்தற்
சேவை
யுடன்
தரம்-5
பரீட்சை




சிறப்பு கவிதை
கையேடு உள்ளே

தமிழ்
எங்கள்
உயிர் மூச்சு

மணமகனே!
கொஞ்சம்
கேள்!!

Free
போட்டிப்
பரீட்சை
கையேடு

- சுந்தரர் பரவையார் காதல்
- தீயவர்களிடமிருந்து பெறும்
- சினேகிதனின் காதலிக்கு
- உருகும் உணர்வுகள்
- எப்போதும் ஜெயிக்க
- இது துரோகம் அல்ல
- வாழ்க்கை அழகாக
- உங்களை நம்புங்கள் வெற்றி நிச்சயம்
- வாசல் தேடிய வசந்தம்

* நடைமுறை பொது அறிவு
* பொது விவேக பயிற்சிகள்
* புதிர் வினாக்கள்
* வர்ணம் தீட்டும் போட்டிகள்
* தரம் 5 பெறுபேறுகள்

குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள:- கொழும்பு- 071- 8628372 வடக்கு: 077-6569617/071-8628369, கிழக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726, மலையகம்: 071 - 8724056, ஏனைய மாவட்டங்கள்: 071 - 4114990

உதயன், சுடர்ஒளி முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

## மக்கள்...

பெறாத நிலையில், இன்று முதல் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக மக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். இதனை விடுவிக்குமாறு கோரி, கடந்த 3ஆம் திகதி, பிரதேச செயலக வாசலில் காணி உரிமையாளர்கள் அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

கடந்த 9ஆம் திகதி கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்தனர். மக்களின் காணிகளில் தங்கியுள்ள இராணுவத்தினரை அரச காணிக்கு இடமாற்றிவிட்டு, காணிகளை விடுவிப்பதற்கு தலைமை அமைச்சர் இணங்கியிருந்தார்.

தலைமை அமைச்சரின் உறுதிமொழிக்கு அமைவாக ஏற்பட்ட முன்னேற்றம் என்ன என்பதை அறிவதற்கு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபனை, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் நேற்றுச் சந்தித்தனர். அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் பங்கேற்றார்.

தலைமை அமைச்சரின் உறுதிமொழிக்கு அமைவாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை, பிரதேச செயலர் மக்களிடம் தெரிவித்தார். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

இதனையடுத்து தமது அமைதியான போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினர். இன்று தொடக்கம் சுழற்சி முறையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்வது என்று அவர்கள் தீர்மானித்தனர். 48 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் மூவர் மூவராக இருந்து நடத்துவது என்று அவர்கள் அறிவித்தனர். (வ-5-7)

## யாழ். சிறையில்...

கள் நீதிமன்ற உத்தரவுப்படி யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பல மாதங்களாக தாம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தமது குடும்பங்களை இழந்து பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது படகுகளை விடுவிக்குமாறும் வலியுறுத்தி இந்த உணவுத் ஒறுப்புப் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தம்மை விடுவிக்குமாறு வலியுறுத்தி முன்னெடுத்துள்ள உணவு ஒறுப்புப் போராட் டம் குறித்து யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் இந்திய துணைத்தூதுவ ருக்கும் எழுத்து மூலமாகத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்களால் அறிவிக்கப்பட்டது என்று கூறப்பட்டது. (வ-4,106)

## 14 ஆவது...

மக்கள் பெரும் அசௌகரியங் களை எதிர்கொண்டனர் அவர்களின் போராட்டத்துக்கு , வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம் மக்கள் நேற்று நேரில் வந்து தங்களது ஆதரவைத் தெரிவித் தனர்.

சிறிலங்கா வான்படையினரால் பலாத்காரமாக தங்களிடமிருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட நிலத்தை விடுமாறு கோரி கடந்த 14 நாள்களாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் பிலக்குடியிருப்பு மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மக்களுக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருகின்றது. நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள மக்களும் பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களின் பெண்கள் அமைப்பினர், பிலக்குடியிருப்புக்கு நேற்று வருகை தந்து தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட பெண்கள் அமைப்பினரும் பிலக்குடியிருப்புப் போராட்டக்களத்துக்கு நேற்று வருகை தந்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா ஆகியோரும் பிலக்குடியிருப்பு மக்களுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புமாறு, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் பிலக்குடியிருப்புக்கு நேற்று நேரில் வந்து கோரிக்கை விடுத்த போதும் மக்கள் அவரின் கோரிக்கையை நிராகரித்து விட்டனர். (வ-5-7)

## கூட்டு...

நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தங்காலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று மக்களின் வாழ்வதற்கான உரிமை தடைப்பட்டுள்ளது. அரசு அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை தீர்மானித்துள்ளது. அந்தக் கட்டுப்பாட்டு விலைக்கு சந்தையில் அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. சந்தையில் அரிசி ஒரு கிலோ 100 ரூபாவையும் தாண்டியுள்ளது.

மத்தளை வானூர்தி நிலையத்தை நெல் களஞ்சியசாலையாக மாற்றுவதாகக் கூறிய அரசுக்கு என்ன நடந்தது?

அரசு ஆட்சிக்கு வந்தது தொடக்கம் மக்களுக்கு வழங்கிய நலன்கள் என்ன? உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தள்ளிப் போட்டு வருகின்றது. நடத்தினால் தோல்வியைச் சந்திக்க வேண்டிவரும் என்பது அரசுக்குத் தெரியும். நாட்டின் அனைத்து இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள்தான் நடக்கின்றன.

இந்த நாட்டின் நிர்வாகம் குழப்பம் நிறைந்ததாக மாறியுள்ளது. நாளுக்கு நாள் பொருள்களின் விலை அதிகரிக்கின்றது. தேர்தலை பிற்போட்டு வருகின்றனர். அரசு இதனைத்தான் மக்களுக்காக செய்து வருகின்றது. இன்று அல்லது நாளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரும் என்று மக்கள் எதிர்பார்த்துள்ளனர் -என்றார். (வ-4)

## வாக்கு...

புதுக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் பிரதேச செயலாளரிடம் நேற்று நேரில் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் கூட்டு அரசை விமர்சிக்கும் வகையில் பல்வேறு பதாகைகளை நேற்றுக் கட்டியிருந்தனர்.

'வாக்கு கேட்க மைத்திரி காணி பிடிக்க இராணுவமா? மீள்குடியேற்றம் உமக்கா எமக்கா?', 'வரச்சொல் வரச்சொல் மைத்திரியை வரச்சொல், தரச்சொல் தரச்சொல் காணியை தரச்சொல்', 'கதியால் அரக்க பக்கத்து வீட்டானை கத்தியோடு துரத்தும் காணி ரோசக்காரனே, வெளியால் வந்து வீரத்தை காட்டுங்கள், விடுதலைபெற வேறுவழியில்லையே' என்ற வாசகங்கள் அதில் அடங்கியிருந்தன.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மதியமளவில், பிரதேச செயலரைச் சென்று சந்தித்தனர். பிரதேச செயலகத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டால் பொலிஸாரிடம் முறையிடுமாறு எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட பிரதேச செயலர் ம.பிரதீபன், இதுவரை அவ்வாறான நிலை ஏற்படவில்லை என்றார்.

எங்களது காணிகள் விடுவிக்கப்படாவிட்டால் நாம் போராடும் வடிவத்தை மாற்ற வேண்டி ஏற்படும். அப்போது நிர்வாக முடக்கத்தையும் மேற்கொள்ள வேண்டி வரலாம் என்று மக்கள் தெரிவித்தனர்.

மக்களின் போராட்டம் தொடர்பில் மாவட்டச் செயலர் ஊடாக உரிய இடங்களுக்கு அறிவித்துள்ளதாகவும் பிரதேச செயலர் இதன் போது குறிப்பிட்டார். (வ-5-7)

## மக்கள்...

ளின் கருத்துகளும் யோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான மக்களின் கருத்துக்களை அறியும் குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான லால் விஜேயநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை தயாரிப்பதற்காக மக்களின் கருத்துக்களை அறிய 20 பேர் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது. 25 மாவட்டங்களிலுள்ள மக்களின் கருத்துக்களும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டபின்னர் 300 பக்கங்களை கொண்ட அறிக்கையை குழு தயாரித்திருந்தது. அரச தலைவர், தலைமை அமைச்சர், சபாநாயகர் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிக்கை கையளிக்கப்பட்டது.

புதிய அரசமைப்புத் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் வரை மக்களின் கருத்துகளும் யோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இது பற்றி மக்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

7 மாவட்டங்களில் இது பற்றி தெளிவுபடுத்தும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளன. அரசியல் விஞ்ஞானத்தை கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இது பற்றி விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

மக்களிடம் கருத்தறியும் அமர்வுகள் கொழும்பு, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன - என்றார். (வ-4)

## சுமந்திரன்...

சென்று விசாரணை செய்யவும் நீதிமன்று அனுமதி வழங்கியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலைசெய்யும் நோக்குடன் உயிராபத்தை விளைவிக்கும் வெடிபொருள்கள் வைத்திருந்ததாகவும் பன்னாட்டுப் போதைப்பொருள் கடத்தியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் மன்றில் கடந்த மாதம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டனர். 5 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்குகள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தன.

இது தொடர்பான அனைத்து வழக்குகளையும் ஒரே வழக்காக இணைக்கப்பட்டு 85/17 என்ற வழக்கிலக்கத்தின் கீழ் முன்கொண்டு செல்ல பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றிடம் அனுமதி கோரினர். எதிராளிகளின் சட்டத்தரணிகள் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்காததால் நீதிவான் அதனை ஏற்றுக்கொண்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டிருக்கும் முதலாம் ,2 ஆம், 3 ஆம் ,4 ஆம், 5 ஆம் சந்தேக நபர்களாக முறையே சுரேந்திரன், இராஜ்மதன், தபேந்திரன், விஜயகுமார், அஜந்தன் ஆகியோர் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களிடம் மீண்டும் விசாரணை செய்ய வேண்டும் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றின் அனுமதியை கோரினர். சந்தேக நபர்களை வெளியில் கூட்டிச் சென்று உரிய இடங்களையும் பார்வையிட வேண்டிய தேவையுள்ளதனால் அதற்கும் நீதி மன்று அனுமதிக்க வேண்டும் என்றுகோரி வழக்குத் தொடர்பான முன்னேற்ற அறிக்கை ஒன்றையும் அவர்கள் மன்றில் முன்வைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீதான கொலை முயற்சிக்கு சந்தேக நபர்களுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து ஓர் பணப்பரிமாற்ற நிறுவனத்தின் நெல்லியடியில் உள்ள கிளைக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளது என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், சந்தேகநபர்களை வெளியில் அழைத்துச் சென்று விசாரணை செய்ய அனுமதிக்க முடியாது. இவர்களே செல்ல அனுமதித்து விட்டுத் தப்பிச் சென்றனர் என்று மன்றுக்கு கூறுவர். குறித்த சந்தேக நபர்களுக்கு சில ஆயிரம் ரூபா பணமே வெளிநாடுகளிலிருந்து கிடைத்தன. ஆனால் பொலிஸார் கூறுவதுபோன்று லட்சக் கணக்கில் பணம் வரவில்லை. அந்த ஆவணங்களைப் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்' என்று மன்றில் கோரினர்.

5 சந்தேகநபர்களையும் அழைத்து செல்லாது விடினும் 2ஆம் சந்தேக நபரான இராஜ்மதனை கண்டிப்பாக அழைத்துச் சென்று உரிய இடத்தைப் பார்வையிட வேண்டிய தேவை உள்ளது. அத்தோடு உரிய விசாரணைகள் முடிவுற்றதும் ஆவணங்களை சமர்ப்பிக்கலாம் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றுக்குத் தெரிவித்தனர்.

1,3,4,5 ஆம் சந்தேக நபர்கள் சார்பிலும் சட்டத்தரணிகள் அர்ச்சுனா மற்றும் விஜயராணி ஆகியோரும் 2 ஆம் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி சென்பாருக்கும் முன்னிலையாகியிருந்தனர்.

எதிர்வரும் 14,15,16ஆம் திகதிகளில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று சந்தேக நபர்கள் 5 பேரையும் விசாரணை செய்ய முடியும். 2ஆம் எதிரியான இராஜ்மதனை மட்டும் எதிர்வரும் 20,21,22 ஆகிய தினங்களில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சகிதம் வெளியில் அழைத்துச் சென்று விசாரணையை மேற்கொள்ளலாம். எந்தக் காரணம் கொண்டும் சந்தேக நபரை பொலிஸ் நிலையம் கொண்டு செல்ல முடியாது என்று நீதிவான் கட்டளையிட்டார்.

இந்த உத்தரவை மீறி கொண்டு சென்றால், அது தொடர்பில் சந்தேகநபர் அடுத்த தவணையின்போது நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவர முடியும் எனத் தெரிவித்த நீதிவான், வழக்கு விசாரணையை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-4,101,6)

## காணிகளை...

மீள ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தி 14 நாள்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வடக்கு மாகாண சபை அமர்வின் போது மக்கள் சார்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனால் கேப்பபிலவு மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது. அந்தப் பிரேரணை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் வடக்கு மாகாண சபையின் சில உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் போராட்டக் களத்துக்கு நேரில் சென்றிருந்தனர்.

பிலக்குடியிருப்பு மக்களின் கோரிக்கையை நிறைவேற்றி, போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தனுக்கும் அவசர கடிதம் ஒன்று வடக்கு மாகாண சபையால் நேற்றையதினம் அனுப்பப்பட்டது. அத்துடன் அதன் பிரதி வடக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு, கேப்பபிலவு மக்கள் நீண்ட நாட்களாக தங்களின் சொந்த நிலத்தை மீட்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கேப்பபிலவு கிராமசேவகர் பிரிவில் 524 ஏக்கர் நிலங்கள் தனிப்பட்டவர்களுடையதாக காணப்படுகின்றது. எனவே அவற்றை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் 243 ஏக்கர் காணி ஏற்கனவே அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் கடந்த ஜனவரி மதம் 25ஆம் திகதி விடுவிக்கப்படுவதாக இருந்தது. எனினும் அது துரதிஸ்ட்ட வசமாக நிறைவேறவில்லை. மேலும் 84 குடும்பங்கள் என்னும் அங்கு மீள் குடியேற்றப்படாமல் இருக்கின்றனர்.

அவர்களில் 54 குடும்பங்கள் ஆதார ஆவணங்களுடன் இருக்கின்றனர். ஆகவே மக்களின் போராட்டத்துக்கு மதிப்பளித்து அவர்களின் சொந்தக் காணிகளில் விடுவிக்குமாறு வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் உறுப்பினர்கள் நேற்று ஒன்று கூடினர். அவர்கள் அனைவரினதும் கையொப்பங்கள் இடப்பட்டு மின்னஞ்சல் மூலமாகவும் தொலைநகல் மூலமாகவும் உடனடியாகக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அத்துடன் பதிவுத் தபாலிலும் அனைத்துத் தரப்புகளுக்கும் தனித் தனியே கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. (வ-8)

# அழகிய கொம்புகள்



ஒரு காட்டில் கலைமான் ஒன்று கடுமையான வெயிலில் தாகத்துடன் நீர் தேடி அலைந்து திரிந்தது. அப்போது ஒரு தெளிந்த நீரோடையைக் கண்டு அதில் நீர் அருந்தியது. அப்போது நீருக்குள் மானின் உருவம் தெரிய அதன் அழகிய கொம்புகள் இரண்டும் மானின் கவனத்தை ஈர்த்தன.

“ஆகா எனக்கு இவ்வளவு அழகான கொம்புகளா? இது வரையில் என் உடம்பில் உள்ள பொட்டுகள்தான் அழ கானவை என்று எண்ணியிருந்தேன். என் கொம்புகள் இன்னும் அழகாக உள்ளனவே. மிருகங்களுள் நானே அழகானவன்” என்று பெருமைப்பட்டுக் கொண்டது.

சிறிது வேளையில் தன் கால்களைக் குனிந்து நோக்கியது. “சே...இவ்வளவு அழகான கொம்புகளை எனக்குத் தந்த இறைவன் இப்படி கண்டோர் இகழும் படியான நீண்ட மெலிந்த கால்களைத் தந்துள்ளான். சீ... எனக்கு இது மிகவும் அருவருப்பாகவும் கேவலமாகவும் இருக்கிறதே” என்று தனக்குள் மான் வேதனைப் பட்டு கொண்டிருக்கையில்; எங்கிருந்தோ வந்த சிங்கம் ஒன்று மானைக் கொன்று பசியாறும் எண்ணத்துடன் அதன் மீது பாய்ந்தது. சத்தம் கேட்டு துள்ளி எழுந்த மான் தாவிப் பாய்ந்து பாய்ந்து வெகு தூரம் ஓடி நின்று சிங்கம் தன்னைத் தொடர்கிறதா என திரும்பிப் பார்த்தது. சிங்கமோ கலைமானின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் சிறிது தூரத்துக்கு அப்பால் வந்து கொண்டிருந்தது.

“நான் இழிவாக எண்ணிய என் கால்களே எனது உயிரைக் காப்பாற்றின” என்று கலைமான் தன் கால்களை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டு தொடர்ந்து ஓடியது. அந்தோ பரிதாபம். எதிர்ப்பட்ட மரங்களுக்குள் அதன் அழகிய கொம்புகள் சிக்கிக் கொண்டன. மானால் தொடர்ந்து ஓடமுடிய வில்லை. அவலமாகக் குரல் எழுப்பியது. மானின் நிலையைக் கண்ணுற்ற சிங்கம் விரைவாகப் பாய்ந்து வந்து அதனைத் தன் இரையாக்கிக் கொண்டது.



**எதனையும் அல்லது எவரையும் நாம் ஏளனமாக எண்ணக்கூடாது.**

**அழகு உள்ள இடத்தில் ஆபத்தும் இருக்கும்.**

## அற்புதமான பொன்மொழிகள்

1. மனிதன் உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்தால் உலகில் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை.
2. பிறர் குற்றங்களைக் கவனத்தில் கொள்ளாதே! நீ எந்த வித குற்றமும் செய்யாமல் நடந்து கொள்.
3. தன்னைத் திருத்திக் கொண்டால் சமுதாய சீர்திருத்தம் தானே நிகழும்.
4. பேச்சாற்றலை விட செயலாற்றல் சிறந்தது.
5. ஒரு நல்ல நண்பன் உன்னில் பாதி. அவனை உனது மூன்றாவது கண் எனலாம்.
6. உன்னதமான ஒவ்வொரு வேலையும் ஆரம்பத்தில் முடியாததாகவே தோன்றும்
7. பெரிய காரியங்கள் எவையும் வல்லமையால் நிறை வேறவில்லை; விடா முயற்சியினாலேயே நிறைவேறி யுள்ளன.
8. மகிழ்ச்சி அடைவதற்கான வழி மற்றவர்களையும் மகிழ்ச்சி கொள்ளச் செய்வதே!
9. பிறருக்கு உதவி செய்ய விருப்பம் கொள்ளாதவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்க முடியாது.
10. நம் வாழ்வில் கிடைக்க முடியாத பெருஞ் செல்வம் நாம் வீணே கழிக்கும் ஒவ்வோர் விநாடியும்தான்.

## சமமே யாவரும் உன்முன்னே!

மழையே! மழையே! மா மழையே!
உலகின் உயிர்கள் உன்னாலே.
மழையே உன்னை அதனாலே
நாளும் துதிப்போம் மனதாலே

மரமோ செடியோ மலர்க் கொடியோ
மண்ணில் முளைப்பது உன்னாலே
அறமோ பொருளோ அத்தனையும்
அருமை மழையே உன்னாலே

ஊரை உலகை ஆள்வோரும்
பேரைப் புகழைச் சேர்ப்போரும்
நாளைக் கழித்தே நலிவோரும்
சமமே யாவரும் உன்முன்னே

இன, சாதி, மதத்தால் சண்டை செய்து
அமைதியை விரட்டி வீரம் பேசும்
அனைத்து வாய்ச் சொல் வீரர்களும்
அழிவார் நொடியில் நீ இல்லையென்றால்

கடலின் பெருமையும் குன்றி விடும்
கடவுள் பூசையும் நின்று விடும்
உடலில் உயிரும் பிரிந்து விடும்
உலகம் அன்றே முடிந்து விடும்

# ஆத்திசூடி



(நேற்று வெளியான பகுதியின் தொடர்ச்சி)

**3. இயல்வது கரவேல்**

உன்னால் கொடுக்க முடிந்த பொருளை இரப்பவர்களுக்கு ஒளியாதே. உன்னிடம் உன்தேவைக்கு மேலதிகமாக ஒரு பொருள் இருக்கிறது. மற்ற ஒருவரிடம் அப்பொருள் இல்லை, அவசியம் தேவைப் படுகிறது. அந்தப் பொருளை உன்னிடம் இல்லை என்று மறுக்காமல் அவருக்குக் கொடுக்க வேண்டும்.

**4. ஈவது விலக்கேல்**

ஈவது என்றால் கொடுப்பது: ஒரு ஏழைக்கு அவரது பரிதாப நிலை கண்டு மற்றொருவர் பொருள் கொடுக்கும்போது அல்லது வேறு சரீர உதவிகள் ஏதாவது செய்யும் போது தடுக்கக்கூடாது. கொடுப்பது உனக்கு விருப்பம் இல்லாதிருக்கலாம். ஆனால் மற்றவர் கொடுப்பதைத் தடுக்கக்கூடாது.

**5. உடையது விளம்பேல்.**


உன்னிடம் உள்ள ஒரு பொருள் பற்றியோ அல்லது சிறப்பையோ திறமையான செயற்பாடுகள் பற்றியோ பிறரிடம் புகழ்ந்து உரையாதே. அதாவது உன்னைப் பற்றி நீயே பெருமையடித்துப் பேசக்கூடாது. உன்செயலை ஊர் புகழ வேண்டுமேயன்றி நீ புகழ்ந்து தற்பெருமை பேசுவது சரியல்ல. அப்படியில் லையெனில் உன்னைப்பிறர் இகழ்ச்சியாகவே மதிக்க நேரிடும்.

**6. ஊக்கமது கைவிடேல்**

நீ எக்காரியத்தைச் செய்யினும் அது விடயத்தில் உற்சாகத்தை கைவிடாது தொடர்ந்து முயற்சி செய். ஒரு காரியத்தைச் செய்ய முற்படும்போது அந்தக்காரியம் முடிவதற்கு பல தடைகள் ஏற்படும். அத்தடைகளைக் கண்டு மனம் சோர்ந்து விடாமல் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

(தொடரும்)

## பப்பி வழிதவறி விட்டது அது வீடு செல்ல வழிகாட்டுவோம்



## மெய் எழுத்துக்களின் வகை அறிவோம்



| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க் - அக்கா | ங் - நுங்கு | ய் - பாய் |
| ச் - பச்சை | ஞ் - பஞ்சு | ர் - வேர் |
| ட் - பட்டு | ண் - வண்டு | ல் - பால் |
| த் - புத்தி | ந் - பந்து | வ் - செவ்வாய் |
| ப் - அப்பம் | ம் - அம்மா | ழ் - யாழ் |
| ற் - புற்று | ன் - அன்னம் | ள் - எள்ளு |



# பருத்தித்துறை கால்பந்து
## சென். தோமஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 14
பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை சென். தோமஸ் அணி சம்பியனானது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் அணியை எதிர்த்து அல்வாய் நக்கீரன் அணி மோதியது. வாய்ப்புக்கள் கிடைப்பதும், அவை கோலாக மாற்றம்பெறாமல் போவதுமாக இருந்தது. முதல் பாதியில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யவில்லை.

இரண்டாம் பாதியிலும் எந்த அணியும் கோலைப் பதிவு செய்து தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிலையில் கோல்கள் எவையும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் சென். தோமஸ் அணி வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

# இன்றைய மோதல்



யாழ்ப்பாணம், பெப். 14
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா 'ஏ' அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதவுள்ளது. (ம-23)

# அம்பாள் முதலிடம்

யாழ்ப்பாணம், பெப். 14
உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் சுன்னாகம் அம்பாள் அணி முதலிடம் பிடித்தது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் போட்டிகள் இடம்பெற்றன. இதில் சுன்னாகம் அம்பாள் அணி 89 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைத் தனதாக்கியது. மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி 81 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும், சூராவத்தை நியூவொரியஸ் விளையாட்டுக் கழக அணி 44 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. (ம-23)

# வடமராட்சிப் பாடசாலைகளின்
## வலயமட்டப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 14
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறவுள்ளன.

இதன்படி, கால்பந்தாட்டத் தொடர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் இமையாணன் அ.த.க. பாடசாலை மைதானங்களில் இன்றுமுதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நாளையதினம் நடைபெறவுள்ளது.

துடுப்பாட்டத் தொடர், ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகியவற்றின் மைதானத்தில் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

வலைப்பந்தாட்டத் தொடர் நெல்லியடி மத்திய கல்லூரியில் எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

எல்லே தொடர் மனோகரா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான பூப்பந்தாட்டம், 25 ஆம் திகதியும், பெண்களுக்கான பூப்பந்தாட்டம் 26 திகதியும் நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (ம-108-17)

# ரியல் ஸ்ரார், பைவ் ஸ்ரார் அணிகள் வாகை சூடின

யாழ்ப்பாணம், பெப். 14
உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கயிறுழுத்தல் போட்டியில், ஆண்கள் பிரிவில் சுன்னாகம் ரியல் ஸ்ரார் அணியும், பெண்கள் பிரிவில் ஏழாலை பைவ் ஸ்ரார் அணியும் சம்பியனாகின.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதிப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் ஏழாலை பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுன்னாகம் ரியல் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் சுன்னாகம் ரியல் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற ரீதியில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் ஏழாலை பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் ஏழாலை பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23-108)

# யாழ். – முல்லை சம்பியனாகின



முல்லைத்தீவு ஆண்கள் அணி

யாழ்ப்பாணம், பெப். 14
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான கராத்தேயில் ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தன.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இந்தப்போட்டிகள் நடைபெற்றன. ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணி 28.5 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், யாழ்ப்பாண மாவட்ட அணி 28 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்ட அணி 13.5 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் தமதாக்கின.

பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி 20.5 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் கிளிநொச்சி மாவட்ட அணி 20 புள்ளிகளை பெற்று இரண்டாமிடத்தையும், மன்னார் மாவட்ட அணி 7 புள்ளிகளை பெற்று மூன்றாமிடத்தையும் தமதாக்கின. (ம-422)



# குறிஞ்சிக்குமரன் சம்பியன்

உடுவில் பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி நடப்பு வருடத்துக்கான சம்பியனாகியது குப்பிளான் குறிஞ்சிக்குமரன்.


ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் குறிஞ்சிக் குமரனின் குருபரன் முதல் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றங்களும் நிகழவில்லை.

குறிஞ்சிக்குமரனின் ஆதிக்கத்துடன் இரண்டாம் பாதியும் ஓடிமறைய முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-108)



# 208 ஓட்டங்களால் இந்தியா அபார வெற்றி

## பங்களாதேஷ் அணியும் பெரும் போராட்டம்



பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் 208 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 687-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக கோக்லி 204 ஓட்டங்களையும், முரளி விஜய் 108 ஓட்டங்களையும், சகா 106 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தயுல் இஸ்லாம் 3 இலக்குகளையும், மிராஸ் 2 இலக்குகளையும், தஸ்கின் அகமட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 388 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரகிம் 127 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 82 ஓட்டங்களையும், மிராஸ் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாதவ் 3 இலக்குகளையும், அஸ்வின், ஜடேயா இருவரும் தலா 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், இசாந் சர்மா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

299 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி 159-4 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதனால் பங்களாதேஷுக்கு இலக்காக 459 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நான்காம் நாள் முடிவில் அந்த அணி 103-3 என்றிருந்தது. முகமதுல்லா 9 ஓட்டங்களுடனும் சகிப் அல் ஹசன் 21 ஓட்டங்களுடனும் இறுதிநாளான நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையில் சகிப் அல் ஹசனை வெளியேற்றினார் ஜடேயா. ரகிம், ரகுமான், மிராஸ் மூவரும் இரட்டை இலக்கங்களில் ஓட்டங்களைக் குவித்த போதிலும் இலக்கை எட்டும்படியாக அது அமையவில்லை. மறுமுனையில் முகமதுல்லா அரைச்சதம் கடந்தார். அவரை 64 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் இசாந் சர்மா. முடிவில் 250 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ். 208 ஓட்டங்களால் வென்றது இந்தியா. கோக்லி ஆட்டநாயகனானார். (ம)

# ஜெரிக்துசாந் ஹற்றிக் படைத்தார்

## சென்றலைட்ஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 14

ஜெரிக்துசாந்தின் ஹற்றிக் உதவியுடன் குருநாகல் விளையாட்டுக் கழக அணியை 5 இலக்குகளால் வீழ்த்தியது யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி.

இலங்கை கிரிக்கெட் சபை, கழகங்களுக்கு இடையில் தேசிய ரீதியில் துடுப்பாட்டத் தொடரை முன்னெடுத்து வருகிறது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து குருநாகல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய குருநாகல் அணி 21.5 பந்துப் பரிமாற்றங்களில் 89 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக லகிரு லக்சித் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெரிக்துசாந்த ஹற்றிக் படைத்தார். அவர் மொத்தமாக 7 இலக்குகளை வீழ்த்தினார். ஜேம்ஸ் ஜோன்சன் இரண்டு இலக்குகளையும், அலன்குமார் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



ஜெரிக்துசாந்

90 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 5 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. (ம-23)




# களத்தில் பேல்

வேல்ஸ் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான கரீத் பேல் காயத்தில் இருந்து மீண்டு, மீண்டும் களத்துக்குத் திரும்பினார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற ஆட்டமொன்றில் பேல் களமிறங்கினார். தொடைப்பகுதியில் காயம் ஏற்பட்டு தற்காலிக ஓய்வில் இருந்தார். அவருக்கு அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டது. காயத்தில் இருந்து மீண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், அவர் எப்போது களத்துக்குத் திரும்புவார் என்பதில் உறுதியற்ற நிலையே இருந்தது.

ஜனவரி மாதம் அவர் களந்திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அணியுடன் பேல் இணையவில்லை. இந்த நிலையில் ரியல் மட்ரிட் அணியுடன் நேற்றுமுன்தினம் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டார் பேல். (ம)



# விரைவான 250 இலக்குகள்; சாதனையாக கருதுகிறார் அஸ்வின்

குறைந்த டெஸ்ட் ஆட்டங்களில் விரைவாக 250 இலக்குகளை வீழ்த்தியவர் என்ற சாதனையை இந்திய அணியின் சுழல் வீரர் அஸ்வின் படைத்தார். இதை அவர் தனது சிறந்த சாதனைகளில் ஒன்றாகக் கருதுகிறேன் என்று குறிப்பிட்டார்.

இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நேற்று நிறைவடைந்த டெஸ்ட் ஆட்டத்தின், நான்காம் நாளில், சதம் விளாசி சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த பங்களாதேஷ் அணித் தலைவர் ரகிமை அஸ்வின் வீழ்த்தினார். இது அவரின் 250ஆவது டெஸ்ட் இலக்காக அமைந்தது. இந்த மைல்கல்லை தனது 45 ஆவது டெஸ்ட்டில் அடைந்து சாதனை படைத்தார் அஸ்வின். இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய வீரர் லில்லி 48 ஆட்டங்களில் 250 இலக்குகளை வீழ்த்தியதே சாதனையாக இருந்தது. அஸ்வினின் சாதனைக்கு பலரும் தமது பாராட்டைத் தெரிவித்துவரும் நிலையில், இந்த அடைவை சிறந்த சாதனையாகக் கருதுகிறேன் என்று அஸ்வின் வெளிப்படுத்தினார்.

"அதிவேக 250 இலக்குகளை எனது சிறந்த சாதனைகளில் ஒன்றாகக் கருதுகிறேன். இந்த ஆடுகளம் (ஹைதராபாத் ஆடுகளம்) சுழலுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. எனினும் 6 இலக்குகளை வீழ்த்தியமை மகிழ்ச்சியே" என்று அஸ்வின் மேலும் தெரிவித்தார். (ம)

# சாந்தலங்கா மத்தி.-யாழ். மத்தி. ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், பெப். 14

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற யாழ். மத்திய கல்லூரி - சாந்தலங்கா மத்திய கல்லூரி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சாந்தலங்கா மத்திய கல்லூரி அணி 136 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் மதுசன், கார்த்தீபன் இருவரும் தலா 3 இலக்குகளையும், துசியந்தன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். தனது முதல் இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 249 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கௌதமன் 73 ஓட்டங்களைப் பெற்றார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 113 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடி நிலையில் களமிறங்கிய சாந்தலங்கா மத்திய கல்லூரி அணி 194 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. 81 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய மத்திய கல்லூரி அணி 63-5 என்ற நிலையில் இருந்த போது ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (ம-23)

# நியூசி. ஒருநாள் அணி அறிவிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான நியூசிலாந்து அணி அந்த நாட்டு கிரிக்கெட் சபையால் நேற்று அறிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்கா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒரு ரி–20 ஆட்டம், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் என்பன நியூசிலாந்தில் விரைவில் நடைபெறவுள்ளன. முதலாவதாக எதிர்வரும் 17ஆம் திகதி ரி–20 ஆட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஒருநாள் தொடருக்கான அணி நேற்று அறிவிக்கப்பட்டது.


நியூசிலாந்து அணி விவரம் – வில்லியம்சன் (தலைவர்), புறூம், பெர்குசன், கிராண்ட்ஹோம், குப்தில், ஹென்றி, லாதம், நீஸ்கம், ரோஞ்சி, சான்நெர், சவுத்தி, சொட்கி, ரெய்லர். (ம)

# ராமோஸ் 500

ரியல் மட்ரிட் கால்பந்தாட்டக் கழகத்தின் தலைவரும் ஸ்பெய்னின் நட்சத்திர வீரருமான ராமோஸ், நேற்றுமுன்தினம் தனது 500 ஆவது ஆட்டத்தில் களமிறங்கினார்.

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் ரியல் மட்ரிட் – கிளப் அத்லெட்ரிகோ அணிகள் மோதின. இந்த ஆட்டமே ராமொஸின் 500 ஆவது ஆட்டமாக அமைந்தது. எனினும் தனது 500ஆவது ஆட்டத்தில் கோலெதையும் பதிவுசெய்யாமல் ராமோஸ் ஏமாற்றினார். (ம)





## றொனால்டோ துடிப்பான ஆட்டம்

# கிளப் அத்லெட்ரிகோவை வீழ்த்தியது ரியல் மட்ரிட்

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

மட்ரிட்டை எதிர்த்து கிளப் அத்லெட்ரிகோ மோதியது. ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் றொனால்டோ. 33ஆவது நிமிடத்தில் லியோன் பதிவுசெய்த கோலின் மூலம் பதிலடி கொடுத்தது அத்லெட்ரிகோ. 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. ஆட்டத்தின் 62 ஆவது நிமிடத்தில் இஸ்கோ மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்து முன்னிலை வழங்கினார். 90 ஆவது நிமிடத்தில் றொனால்டோ வழங்கிய வாய்ப்பை கோலாக மாற்றினார் லூக்காஸ். முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது. (ம)

# இந்தியாவுக்கு எதிராக ஈடன் கார்டனில் டெஸ்ட் வாழ்வை தொடங்க விருப்பம்

## ஆப்கானிஸ்தான் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தான் அணிக்கு விரைவில் டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்து வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்பட்டால் தமது முதல் ஆட்டம் இந்தியாவுக்கு எதிராக ஈடன் கார்டனில் அமைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தது ஆப்கானிஸ்தான்.

10 அணிகள் மட்டுமே டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட பன்னாட்டு கிரிக்கெட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த எண்ணிக்கையை 12 ஆக உயர்த்த ஐ.சி.சி. தற்போது திட்டமிட்டுள்ளது. அதன்படி ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகள் டெஸ்ட் அங்கீகாரத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் எதிர்வரும் ஏப்ரலில் இறுதி அறிவிப்பு வெளியாகும். அவ்வாறு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்தால் தமது முதல் ஆட்டம் இந்தியாவுடன் அதுவும் ஈடன் கார்டன் மைதானத்தில் அமைய வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்தது.

நாங்கள் கிரிக்கெட்டில் முன்னணியாக வளர இந்தியா அதிக அளவில் ஆதரவு அளித்தது. இந்தியாவிற்கு எதிராக கொல்கத்தா ஈடன் கார்டனில் எங்களது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்குவது சரியானதாக இருக்கும் என்பதை அனைத்து ஆப்கானிஸ்தானியர்கள் சார்பில் என்னால் கூற முடியும் என்று நினைக்கிறேன் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸ்ரானிக்சை தெரிவித்தார். (ம)

# சிறப்பான ஆட்டத்துக்கு தலைமையே காரணம்

## என்கிறார் கோக்லி

தனது சிறப்பான ஆட்டத்துக்கு தலைமைத்துவமே முக்கிய காரணம் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவரான கோக்லி.

இந்திய அணி முன்னதாக எதிர்கொண்டு விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடர்களில் கோக்லி இரட்டைச்சதம் விளாசினார். நேற்று முடிவடைந்த பங்களாதேஷுக்கு எதிரான தொடரிலும் அவர் இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்தார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது நான் டெஸ்ட் ஆட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்துகிறேன். நான் எப்போதுமே நீண்ட நேரம் நிலைத்து விளையாடவே விரும்புகிறேன். எனது முதல் 7 அல்லது 8 சதங்கள் 120 ஓட்டங்களுக்கு மேல் தாண்டியது இல்லை. நான் தற்போது தலைவராக இருப்பதால் பொறுப்புடன் ஆடுகிறேன். நீண்ட இன்னிங்ஸில் விளையாடுகிறேன். தலைமைத்துவம் வந்தவுடன் அளவுக்கு அதிகமான பொறுப்புணர்வும் வந்துவிடுகிறது. ஏனைய வீரர்களை விட சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்ற கடமையும் உள்ளது என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



# ஆஸி. படுதோல்வியடையும் என்கிறார் கங்குலி

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணி 0:4 என்று வழித்துத் துடைக்கப்படும் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையே நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் புனேயில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர் இந்தியாவில் நடைபெறுவதால் இந்திய அணியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படும் என்பதே பொதுவான கருத்து. முன்னாள், இந்நாள் வீரர்கள் பலரும் அவ்வாறான கருத்தையே பகிர்கின்றனர். குறிப்பாக பிரபல கிரிக்கெட் வர்ணனையாளரான இயன் சப்பல் ஆஸ்திரேலியாவுக்கு பெரும் ஆபத்து என்று இரு முறை எச்சரித்தார். இந்த நிலையில் கங்குலியும் அவ் வாறான ஒரு கருத்தையே வெளிப்படுத்தினார்.

ஆஸ்திரேலியா மிகவும் பல மான அணி என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அணி இந்திய அணியிடம் 0:4 என்று தோல்வியடைந் தாலும் நான் அதிர்ச்சியடையமாட்டேன். ஏனெனில் தற் போது அவ்வாறான ஓர் அபார திறனிலேயே இந்தியா உள்ளது. அஸ்வின், ஜடே யாவை எதிர்த்து தமது ஆதிக்கத்தை ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் நிலை நாட்டுவார்கள் என்று ஒரு போதும் நினைக்கவில்லை. கண்டிப்பாக இந்தத் தொடர் சுவாரஸ்யம் மிக்கதாக அமையும் என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்–18.02.2017
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன்) காலை 8–10 காலை 10–12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய், வியாழன்) காலை 8–10 காலை 10–12
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.